இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20 பக்கங்கள்: 28 | சுடர் 32 | கதிர் 184 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 15 திங்கட்கிழமை 29.05.2017

## இலங்கையில் சூறாவளி அபாயம்

யாழ்ப்பாணம், மே 29

வங்காள விரிகுடாவில் மையம் கொண்டுள்ள புயல்காற்று உயர் அழுக்கத்தின் விளைவாக வடக்கு திசை நோக்கிப் பயணித்தால் மணிக்கு 80 கிலோ மீற்றராகக் காற்றின் வேகம் அதிகரித்து சூறாவளி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் >> 24

## வெள்ள இடரில் சாவடைந்தோர் 151ஆக உயர்வு

### 4 லட்சம் பேர் பாதிப்பு 111 பேரைக் காணவில்லை

கொழும்பு, மே 29

"தென்னிலங்கையைப் புரட்டிப்போட்ட பேரிடரால் 151 பேர் உயிரிழந்தனர். 95 பேர் காயமடைந்துள்ளனர். 111 பேர் காணாமற்போயுள்ளனர். ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 41 ஆயிரத்து 241 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்."

இவ்வாறு இடர் முகாமைத்துவ மைய நிலையம் அறிவித்தது. >> 25



வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புக் குழுக்கள் தரை மற்றும் கடல்வழியாகச் செல்ல முடியாத இடங்களுக்கு வான் படையின் உலங்குவானூர்தி மூலம் படகுகள் அனுப்பி வைக்கப்பட்டன. வரலாற்றில் முதன் முறையாக வான் படையினரால் படகுகள் எடுத்துச் செல்லப்பட்டன. (வ-5)

## கடும் காற்று கடற்றொழில் பெரும் பாதிப்பு

முல்லைத்தீவு, மே 29

"முல்லைத்தீவுக் கடற்பரப்பில் 80 கிலோ மீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசுகின்றது. இதனால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது." >> 24

## ஞானசாரருக்கு ஞானம் பிறப்பு

### கலவரத்தை ஏற்படுத்துவது பிரச்சினைக்குத் தீர்வாகாதாம்

கொழும்பு, மே 29

"ஒரு மணித்தியாலத்தில் இந்த நாட்டில் என்னால் கலவரத்தை ஏற்படுத்தமுடியும். எனக்குத் தேவை என்றால் அதைச் செய்வேன். கலவரம், மோதல் மற்றும் குருதி சிந்திப்பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியாது" >> 24

## 3 நாள்களுக்கு தொடர் மழை

### வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறல்

கொழும்பு, மே 29

இரு தினங்களாக ஓய்ந் திருந்த மழை இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்குத் தொடர்ச்சியாகப் பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. >> 25

## வடக்கை இப்போது ஆழ்வோர் புலிகளே

### இது நாட்டுக்குப் பேராபத்து என்கிறது மகிந்த தரப்பு

கொழும்பு. மே 29

வடக்கு மாகாணத்தை இப்போது புலிகளே ஆட்சி செய்கின்றனர். அங்கு கடும்போக்குவாதிகள் தலைதூக்கிவிட்டனர். அதேபோன்று தெற்கில் பாதாள உலகக் குழுக்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. தெற்கை அவர்களே ஆள்கின்றனர். மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்த பின்னரே இந்த அபாயகரமான - பாரதூரமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவின் ஆட்சியில் இந்த நாடு ஒரு கட்டுக்கோப்பான நாடாக இருந்தது. மகிந்த போரை வெற்றிகொண்டு முழு நாட்டையும் ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். மகிந்த ஆட்சியில் பாதாள உலகக் குழுக்களின் அச்சுறுத்தல் இருக்கவில்லை. பாதாள உலகக் குழுக்கள் முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தன. தற்போதைய கூட்டாட்சி வந்ததும் பாதாள உலகக் குழுவினர் மீண்டும் வந்துவிட்டனர்.

தெற்கின் நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. தெற்கை இப்போது ஆள்வது பாதாளக் குழுவினர்தான். தினமும் கொள்ளையும் கொலையும் இடம்பெறுகின்றன. தெற்கின் நிலைமை இப்படியென்றால் வடக்கு நிலைமை இதைவிட மோசம்.

வடக்கில் இப்போது கடும்போக்குவாதிகள் தலைதூக்கிவிட்டனர். >> 24

## டெங்கு நோய்த் தொற்று யாழ்ப்பாணம் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் தீவிரம்

### சுகாதார அமைச்சுத் தகவல்

கொழும்பு, மே 29

யாழ்ப்பாணம் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் தீவிரமாகியிருப்பதாகத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை >> 25

## பேரிடர் பாதிப்புக்கு சீனாவும் கைகொடுப்பு

யாழ்ப்பாணம், மே 29

இடரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்குச் சீனாவும் கைகொடுத்துள்ளது. சீன அரசு 2.2 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதாக அறிவித்துள்ளது. பேரிடரில் சிக்குண்டுள்ள இலங்கையின் >> 23

## நிறைவேற்று அரச தலைவர் முறையை நீக்க சு.க. மறுப்பு

### மைத்திரியைச் சந்தித்து வழிநடத்தல் குழு ஆராயும்

யாழ்ப்பாணம், மே 29

நிறைவேற்று அரச தலைவர் அதிகார முறைமையை ஒழிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, வழிநடத்தல் குழுவில் உடன்பட மறுத்துள்ளமையினால், அந்தக் கட்சியின் தலைவரும், அரச தலைவருமான மைத்திரிபால >> 25



## இந்திய உதவிப் பொருள்களுடன் 2ஆவது கப்பலும் நேற்று வருகை

கொழும்பு, மே 29

வெள்ளம், நிலச்சரிவு போன்ற இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் மற்றும் மீட்புக் குழுக்களுடன் இந்தியக் கடற்படையின் இரண்டாவது கப்பல் நேற்று மதியம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. >> 25

## கூட்டமைப்பு இரங்கல்

யாழ்ப்பாணம், மே 29

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் மறைவுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் >> 25

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்; ஆணைக்குழுவுக்கு 300 மேன்முறையீடுகள்

கொழும்பு, மே 29

தகவல் வழங்க மறுக்கப்பட்டதற்காக 300 பேர் தகவலுக்கான உரிமை ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்துள்ளனர்.

"அரச திணைக்களங்கள், அதிகார சபை என்பன தகவல் வழங்கும் உத்தியோ >> 25

## மணல் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 29

இலங்கையின் கட்டட நிர்மாணத் துறையின் வசதிக்காக இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து மணலை இறக்குமதி செய்ய அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

உள்நாட்டு மணல் வர்த்தகம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் மண >> 25

## அப்பாத்துரை விநாயகமூர்த்தி கொழும்பில் நேற்று மறைவு

### கொக்குவிலில் நாளை இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தனது 84ஆவது வயதில் >> 23

## ஆலயமானாலும் அனுமதியின்றி கட்டடத்தை அமைக்க முடியாது

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்று கட்டளை

தென்மராட்சி, மே 27

பிரதேச சபையில் அனுமதி பெறப்படாமல் ஆலயமாக இருந்தாலும் புதிய கட்டடத்தை அமைக்க முடியாது. அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்ட கட்டடங்களை 3 மாத காலத்துக்குள் அகற்றுமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டது.

மட்டுவில் வடக்கு தேவாலய வீதியில் சபையின் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்ட பிள்ளையார் சிலை மற்றும் கொடிகாமம் பகுதியில் சபையில் >> 25

## நயினாதீவு சென்ற பிக்குகளுக்கு கடற்படையால் படகுச் சேவைகள்

கொழும்பு, மே 29

நயினாதீவு நாகவிகாரைக்கு வழிபாட்டுக்குச் சென்ற 300 பிக்குகளுக்கு நயினாதீவு-குறிகாட்டுவான் இடையே நேற்றுமுன்தினமும் நேற்று அதிகாலையும் படகுச் சேவைகள் கடற்படையினரால் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கையில் இருந்து 6 பேருந்துகளில் >> 25

## பன்னாட்டு நீதிபதி கூச் இலங்கை வருகிறார்

### விசாரணைப் பொறிமுறையை நிறுவுவதற்கு ஆலோசனை வழங்க

கொழும்பு, மே 29

பன்னாட்டு நீதிமன்றம் மற்றும் கம்போஜியாவின் பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணை நீதிமன்றின் நீதிபதியாகக் கடமையாற்றிய மொடோனு கூச் இலங்கைக்கு அடுத்த மாத நடுப்பகுதியில் வருகை தருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், இலங்கை >> 25

ஜெனரேட்டர் மூலம் மின்சாரம்:

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பரிதாபச் சாவு

மாத்தறை பிரதேசத்தில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்த வேளையில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தைப் பெற்ற குடும்பம் ஒன்றில் 4 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இந்தத் துயரச் சம்பவம் மாத்தறை ரொட்டும்பப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத்தலைவர், அவரது மனைவி, மகன் மற்றும் மகள் ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

"வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த குடும்பத்தினர் கடந்த 26ஆம் திகதி இரவு ஜெனரேட்டரைப் பயன்படுத்தி மின்சாரம் பெற்றுள்ளனர். அன்றையதினம் இரவு நித்திரைக்குப் போன இவர்கள் நால்வரும் காலையில் படுக்கையில் உயிரிழந்திருந்தனர். ஜெனரேட்டரிலிருந்து வெளியான நச்சுவாயுவை இவர்கள் சுவாசித்திருக்கலாம் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் ரொட்டும்ப பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-ய)

# வடக்கு மாணவர்களுக்கு போசாக்குக் குறைபாடு

### மாவை எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.மே.29

"போர் நடைபெற்ற போதும் அதற்கு முந்திய காலங்களிலும் வீழ்ச்சியடையாத எமது பிள்ளைகளின் கல்வி போருக்குப் பின்னர் வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கில் போருக்குப் பின்னர் மாணவர்களுக்கு போசாக்குக் குறைபாடும் காணப்படுகின்றது"

இவ்வாறு தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

சுவிஸ் செந்தமிழ்ச்சோலை அமைப்பால் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்கு உதவி வழங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து செல்லுகின்ற சமுதாயம்தான் இங்குள்ள எமது பிள்ளைகளுக்கு உதவி வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் அறிந்தேன்.

எங்களுடைய இன விடுதலைப் போரில் இலட்சக்கணக்கான மக்கள் தங்களுக்கு இறப்பு நிச்சயம் என்று தெரிந்தும் போராடினார்கள். தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் தமது குடும்பங்களையும் இழந்து நிற்கின்றார்கள். கிட்டத்தட்ட 9ஆயிரம்பேர் தங்களுடைய குடும்பத்தலைவர்களை இழந்து நிற்கின்றார்கள். உழைக்க யாரும் இன்றித் தாமே தமது குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள்.

செந்தமிழ்ச்சோலை என்கிற அமைப்புச் செய்கின்ற இவ்வாறான உதவிகளுக்கு பிள்ளைகள் நீங்கள் செய்ய வேண்டிய உதவி பல்கலைக்கழகங்களுக்கு செல்ல வேண்டும். கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். தொழில்நுட்பத் துறையுடனான பாடத்தெரிவுவைத் தெரிவு செய்ய வேண்டும். விஞ்ஞானத் துறையில் பட்டப்படிப்பைத் தெரிவு செய்யலாம்.

எமது பெண்கள் போருக்குப் பின்னர் குடும்பங்களுக்கு தலைமை தாங்குபவர்களாக இருக்கிறார்கள். தென்னிலங்கையில் இருக்கும் ஆடைத்தொழிற்சாலைக்கு எமது பெண்களை அனுப்பச் சொல்லி சில மாதங்களுக்கு முன்பு கேட்டார்கள். நாம் அதற்கு சம்மதிக்கவில்லை. இந்த இராணுவ அடக்கு முறைக்குள், குவிந்திருக்கின்ற இராணுவத்துக்குள் எமது பெண்கள் படுகின்ற அவலநிலையை நாமும் அறிவோம். எல்லாம் இவ்வாறிருக்க போருக்கு பின்பு எமது பிள்ளைகளின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துவிட்டது.

போருக்கு முன்பும் அதற்கு முன்பான காலங்களிலும் இவ்வாறான நிலை எமது பிள்ளைகளின் கல்விக்கு ஏற்படவில்லை. அதுபோல் தான் எமது பிள்ளைகளின் போசாக்கில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது - என்றார்.

"எமது மக்கள் புலம்பெயர்ந்து சென்று கனடா, சுவிற்சர்லாந்து லண்டன், ஜேர்மனி, ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் வாழுகின்றார்கள். அவர்கள் தாம் பிறந்த மண்ணை நேசித்து இங்கு வாழும் எமது மக்களுக்கு உதவி செய்கிறார்கள்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சியால் வீட்டுக்கொரு அல்லது ஆளுக்கொரு இணையத்தளங்களை உருவாக்கி இந்த மண்ணை ரிமோட் கொன்றோலின் மூலம் அவர்கள் இயக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். இதன் மூலம் குழப்பத்தையும், குறுக்கீடுகளையும் செய்து கொண்டு இருக்கின்றார்கள். இது அவர்களுக்கு தனியடி. ஆனால் பாவம் பரிதாபத்துக்குரியவர்கள் எமது மக்கள்" என்று வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

(வ-12)

## இலங்கைக் கடற்படைத் தளபதிக்கு இந்தியக் கடற்படையால் கௌரவம்

கொழும்பு, மே 29

எழிமலவில் உள்ள இந்தியக் கடற்படைக் கல்லூரியில் 338 கடற்படையினர் மற்றும் அதிகாரிகள் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன முதன்மை அதிதியாகப் பங்கேற்றார்.


கேரளா, எழிமலவில் உள்ள இந்திய கடற்படைக் கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற இலங்கைக் கடற்படைத் தளபதி, பயிற்சியை முடித்த இந்தியக் கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர், பயிற்சி முடித்த இந்தியக் கடற்படை அதிகாரிகளுக்கான சின்னங்களையும் அவர் சூட்டினார்.

இந்தியக் கடற்படைக் கல்லூரியில் பயிற்சி முடித்து வெளியேறும் படையினரின் அணிவகுப்பு நிகழ்வில், வெளிநாட்டுக் கடற்படைத் தளபதி ஒருவர் அதிதியாகப் பங்கேற்றிருப்பது இதுவே முதன் முறையாகும்.

இது இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள உயர்ந்த பட்ச பாதுகாப்பு ஒத்துழைப்பை வெளிப்படுத்துவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, இந்தியாவிலேயே சப்லெப்டினன்ட் தொழில்நுட்பப் பயிற்சியையும், நீர்மூழ்கி எதிர்ப்பு சிறப்புப் பயிற்சியையும், புதுடில்லியில் தேசிய பாதுகாப்பு கல்லூரி கற்கைநெறியையும் பயின்றவர். (வ-5)



## பதில் நீதிவான் விபத்தில் காயம்

சாவகச்சேரி.மே 29

சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் சாலை விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவானாகக் கடமையாற்றும் நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த செல்லையா கணபதிப்பிள்ளை (வயது-76) என்பவரே நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானார். அவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

## தென்பகுதி மக்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், மே 29

நாட்டில் ஏற்பட்ட வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணச் சமூக செயற்பாட்டு மையத்தால் உதவிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

உதவி வழங்க விரும்புபவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்குரிய அத்தியாவசியப் பொருள்களான குடிதண்ணீர் போத்தல்கள், குழந்தைகளுக்கான நுளம்பு வலைகள், பிஸ்கட் வகைகள், உள்ளாடைகள், பெண்களுக்கான சுகாதாரப் பொருள்கள், குழந்தைகளுக்கான நப்கின்கள் என்பவற்றைத் தந்துதவுமாறு யாழ்ப்பாணச் சமூக செயற்பாட்டு மையம் கேட்டுள்ளது. (வ-10)

## வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்துமா மன்றத்தால் உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், மே 29

"இலங்கையின் பலபாகங்களிலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட உடன் பிறப்புக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்க அகில இலங்கை இந்துமா மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. இந்த உதவிப் பணியில் பங்கெடுக்க விரும்புவோர் பொருள்களாகவோ அல்லது நிதியாகவோ தந்துதவலாம்"

இவ்வாறு இந்துமா மன்றத்தின் தலைவர் க.நீலகண்டன் தெரிவித்தார்.

"அகில இலங்கை இந்துமா மன்றத் தலைமையகம், 91/5,சேர் சிற்றம்பலம், ஏ.கார்டிணர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியிலோ அல்லது 11/17,கோயில் வீதி,நல்லூர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமா மன்ற யாழ்ப்பாணப் பணியகத்திலோ, சரஸ்வதி மண்டபம், இல. 75,லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இந்து வித்தியா விருத்திச் சங்கம், 34, விவேகானந்த மேடு, கொழும்பில் அமைந்துள்ள விவேகானந்த சபை, ஞானவைரவர் தேவஸ்தானம், பெரிய கடை வீதி,மன்னா ரில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் ஆகிய இடங்களில் உதவிப் பொருள்களை ஒப்படைக்கலாம்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் சமூகநலன் குழுத் தலைவர் சின்னத்துரை தனபாலா 0777631787 என்பவருடனும், அகில இலங்கை இந்துமா மன்றத்தின் சமூகநலன் குழுச் செயலாளர் ஜெ. நிரோஷ்காந் 0777678858 என்பவரு டனும் தொடர்பு கொள்ளமுடியும்.

இலங்கைவங்கி (லேக்ஹவுஸ் கிளை) கணக்கு இல. : 326 8614 என்ற மாமன்றத்தின் வங்கிக் கணக்குக்கும் உங்கள் நிதி உதவியைச் செலுத்தி வைப்புச் சீட்டை எமக்கு அனுப்பி வைத்தால் இந்துமா மன்றத்தின் பற்றுச்சீட்டு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## மீட்புப் பணியில் உயிரிழந்த சிப்பாய்க்குப் பதவியுயர்வு

கொழும்பு, மே 29

பேரிடர் மீட்பு நடவடிக்கையின்போது உயிரிழந்த வான் படை ஊழியரான வை.எம்.எஸ். யாப்பாரத்னவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீட்புப் பணிகளில் காலியில் கடந்த 26 ஆம் திகதி ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, இரு வான் படை வீரர்கள் தவறி வீழ்ந்திருந்தனர். அவர்களில் ஒருவர் அன்றிரவே உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கே, இலங்கை வான் படையின் வாரண்ட் அதிகாரியாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (வ-5)

## இடருக்கு முகம்கொடுப்பதற்கான தயார் நிலையில் இருக்கவில்லை

### ஒப்புக்கொண்டது அமைச்சு

கொழும்பு, மே 29

இயற்கையின் சீற்றத்துக்கு முகம் கொடுப் பதற்கான ஆயத்த நிலையில் இருக்கவில்லை என்பதை இடர் முகாமைத்துவ அமைச்சு ஒப்புக் கொண்டுள்ளது.

இடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு அடிப்படைத் தேவைகளான போர்வைகள், உயிர்காப்பு அங்கிகள், குடைகள், மழைக் கோட்டுகள், டோர்ச் லைட்டுகள், தீப்பெட்டிகள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் போதிய ளவு இருப்பில் இருக்கவில்லையென அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சு தயாரித்த அறிக்கையொன்றில் இந்தத் தகவல்கள் வெளியாகியிருப்பதுடன், குடிதண்ணீர், போர்வைகள், உயிர்காப்பு அங்கிகள், நடமாடும் கழிவறைகள், குடைகள், டோர்ச் லைட்டுகள், தீப்பெட்டிகள் போன்ற நிவாரண உதவிகளை உடனடியாக வழங்குமாறு ஐ. நா. மற்றும் பன்னாட்டு நன்கொடை நிறுவனங்களுக்கும் இடர் முகாமைத்துவ அமைச்சு அவசர வேண்டுகோள் விடுத்திருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எஸ்.எஸ். மியனாவல, "சந்தையில் உடனடியாக வாங்கக் கூடிய பொருள்களையும், காலாவதியாகும் பொருள்களையும் அமைச்சின் களஞ்சிய சாலைகளில் பெருமளவில் வைத்திருப்பதில்லை. எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் இயன்றவரை செய்யப்பட்டு வருகின்றன" என்றார். (வ-5)

### சிறைச்சாலை வாகனம், பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு

## சந்தேகநபர்கள் கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பி ஓட்டம்

கொழும்பு, மே 29

களுத்துறை சிறைச்சாலை பேருந்து மீதும் பிலியந் தலையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் பலர் கடல் மார்க்கமாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர் என்று புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

"2 துப்பாக்கிச் சூட்டுக்குச் சம்பவங்களின் பின்னர் சந்தேகநபர்கள் வானூர்தி மூலம் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்திலும் மத்தல வானூர்தி நிலையத்திலும் சிறப்புப் பொலிஸ் குழுக்கள் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் பொறியை உணர்ந்து கொண்ட சந்தேகநபர்கள் கடல் மார்க்கமாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். இவர்களைக் கைதுசெய்ய பன்னாட்டுப் பொலிஸாரின் உதவி கோரப்பட்டதையடுத்து களுத்துறையில் துப்பாக்கிச் சூடு நடத்திய முக்கிய சூத்திரதாரியான அங்கொடை லொக்காவும் அவரது சகாவான அத்துருகிரிய லெடியாவும் சென்னை வானூர்தி நிலையத்தில் தென்னிந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை துப்பாக்கிச் சூட்டுக்கு உதவி ஒத்தாசை புரிந்தவர் டுபாயில் மறைந்து வாழும் இலங்கையின் பிரபல பாதாள உலகக் கேடியான மாத்தறை மடுஸ் எனவும் அங்கொடை லொக்காவும் அத்துருகிரிய லெடியாவும் அவருடன் இணைந்து கொள்வதற்காகச் சென்ற வழியிலேயே சென்னை வானூர்தி நிலையத்தில் பிடிபட்டனர்" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார். (வ-5)

## 2016இல் பல்கலைக்கழகங்களுக்கு 28,952 மாணவர்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, மே 29

2016ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட பீடங்கள் மற்றும் திணைக்களங்களின் மூலம், பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 952ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'2015ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு 25 ஆயிரத்து 676 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு அதிகரித்தது. அதேவேளை, பல்கலைக் கழகங்களில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2015ஆம் ஆண்டில் 83 ஆயிரத்து 778ஆக இருந்தது. இது, 2016ஆம் ஆண்டில் 86 ஆயிரத்து 61ஆக அதிகரித்துள்ளது. அரச பல்கலைக்கழகங்களில் கடந்த ஆண்டில் புதிதாக 9 பீடங்களும், 34 புதிய திணைக்களங்களும், 3 நிலையங்களும் உருவாக்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் 38 பட்டக்கற்கைநெறிகள் மற்றும் 15 பட்டப் பின் படிப்புக் கற்கைநெறிகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது' என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## இனவாதிகளுக்கு பேரிடர் படிப்பினையாக இருக்கும்

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மே 29

"இனவாதம் பேசி நாட்டை மீண்டும் குருதி வெள்ள நாடாக்க நினைக்கும் இனவாதிகளுக்கு இந்த இயற்கையின் கோரத் தாண்டவம் ஒரு படிப்பினையாக இருக்கும்"

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கண்டி சிடிமிசன் மண்டபத்தில் நடைபெற்ற செய்தி இணையத்தள ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இயற்கை இடரால் பாதிக்கபட்ட மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, உயிர் பிரிந்தவர்களின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றேன்.

கடந்த காலங்களில் நாட்டில் சில கும்பல்கள், தமிழ் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களிடையே முற்றிலும் இனத்துவேசத்துடன் செயற்பட்டு நாட்டில் அசாதாரண சூழ்நிலைகளை ஏற்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தன. இதனால் மூவின மக்களிடையே பீதிகள் காணப்பட்டன. தற்போதும் அவை இருந்துதான் வருகின்றன. இதற்கு இவர்களின் பின்னணியில் பலர் செயற்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. இவ்வாறான நிலையில் இயற்கையின் கோரத் தாண்டவம் நாட்டை குலுக்கியுள்ள வேலையில் இனவாதம் பேசியவர்களுக்கு இது ஒரு படிப்பினையாக அமைந்துள்ளது.

இந்த நாடு சகல இன மக்களும் வாழும் ஒரு நாடாகும். அதனால் இங்கு நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். தற்போது நாட்டில் இயற்கை இடர் கோரத் தாண்டவம் ஆடி வருகின்றது. இதனால் பல இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர். 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 100 க்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமாகியுள்ளதுடன் பல பில்லியன் பெறுமதியான சொத்துக்களும் சேதமாகியுள்ளன.

இடர் முகாம்களில் தங்கி உளளோருக்கு நிவாரணங்கள் அரச, அரசசார்பற்ற மற்றும் தனிபட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த செயற்பாடுகள் அனைத்தும் இன மத மொழிக்கு அப்பால் மனிதநேயத்துடன் முன்னெடுக்கப் படுகின்றன.

இதில் தமிழ், முஸ்லிம், சிங்கள வேறுபாடுகள் இல்லை. முகாம்களில் அனைத்து இன மக்கும் ஒரே கூரையின் கீழ் எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி இருக்கின்றனர். மீட்புபணிகளும் இனவாதத்துடன் நடைபெறவில்லை. எல்லோரும் மனிதர்கள் என்றே செயற்பட்டு வருகின்றனர்.

இனியாவது இனவாதத்தில் இருந்து மீண்டு நாட்டின் அபிவிருத்திக்கும் கூட்டு அரசுக்கும் இவர்கள் பங்களிப்பு செய்பவர்களாக மாற வேண்டும்.

இனத்துவம் இந்த நாட்டுக்குக் கேடானது. அதன் வடுக்கள் ஆறாத நிலையில் மீண்டும் ஒரு இனத்துவத்தைப் பேசி, நாட்டைப் பாதாள உலகுக்குள் தள்ள வேண்டாம்.

பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி பாதிக்கபட்டவர்களையும் பாதிக்கப்பட்டதையும் கட்டியெழுப்புவோம் - என்றார். (வ-10)

### புத்தரை விமர்சித்த இளைஞர் விவகாரம்

## கடுகன்னாவயில் உருவாகிய பதற்றம் தற்போது தணிந்தது

### அமைச்சர் ஹலீம் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

புத்தர் குறித்து விமர்சனம் செய்து சமூக வலைத்தளம் ஒன்றில் பதிவிட்ட முஸ்லிம் இளைஞர் விவகாரம் தொடர்பாக எழுந்துள்ள பதற்றம் தற்போது சுமுகமான நிலைக்கு வந்துள்ளதாக முஸ்லிம் விவகாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கண்டி கடுகன்னாவப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தந்துறை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

புத்தர் பற்றி விமர்சனம் செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட முஸ்லிம் இளைஞரை கேட்டு நேற்றிரவு சுற்றியுள்ள சிங்கள கிராம வாசிகள் வீடுகளுக்கு கல்லால் தாக்கி பதற்றத்தை தோற்றிவித்தனர். அந்த வேளையில் மின்சாரம் துண்டுடிக்கப்பட்டிருந்தமையால் முஸ்லிம்கள் பெரும் பீதியடைந்திருந்தனர். பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த ரத்நாயக்கவுடன் தொடர்பு கொண்டு உடன் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டடேன். அவரின் உத்தரவில் பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டது. துண்டிக்கப்பட்டிருந்த மின்சாரமும் மீண்டும் வழங்கி வைக்கப் பட்டது. மேலதிகமாக கம்பளையிலிருந்தும் பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

முஸ்லிம் இளைஞர் பற்றிய விவகாரம் இருநாள்களுக்கு முன்னர் கடுகன்னாவப் பொலிஸில் வைத்து குறித்த இளைஞர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் மூலம் தீர்த்துவைக்கப் பட்டது.

சிங்கள, முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கில் ஒரு சிலரின் தூண்டுதல் காரணமாக குழப்பத்தை உண்டு பண்ண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பிரதேச விகாராதிபதியுடன் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இரு தரப்பினருக்கு மத்தியில் ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இனிமேலும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் இருப்பதற்காக வீடுகளுக்கு கல் எறிந்த நபர்களையும் புத்தர் குறித்து விமர்சனம் செய்த இளைஞனையும் பொலிஸார் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (வ-10)

## மதுபோதையில் அடாவடி செய்த இளைஞன் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம் மே 29

பருத்தித்துறை, நெல்லண்டை அம்மன் வீதியில் மதுபோதையில் அடாவடியில் ஈடுபட்ட இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த இளைஞன், நெல்லண்டை அம்மன் வீதியில் மது போதையில் நின்றுள்ளார். அந்த வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிளை அவர் வலுக்கடாயமாக பறிமுதல் செய்துள்ளார். அவர் பறிமுதல் செய்த மோட்டார் சைக்கிளில் அந்தப் பகுதியைவிட்டுச் சென்றுள்ளார். பருத்தித்துறை முதலாம் கட்டைப்பகுதியில் முச்சக்கர வண்டியுடன் அவர் மோதி விபத்துக்குள்ளாகினார். அத்துடன், அந்த இளைஞன் விபத்துக்குள்ளான முச்சக்கர வண்டியை சேதப்படுத்தியதுடன் அதனைப் பிரட்டிப் போட்டுள்ளார்.

இளைஞனின் அடாவடிகள் குறித்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் குழு, அடாவடியில் ஈடுபட்ட இளைஞனைக் கைது செய்தது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-8,26)

## வீட்டுக்குத் தீவைப்பு; 5 பேர் பொலிஸில் சரண்

யாழ்ப்பாணம் மே 29

பருத்தித்துறை நாகர்கோவில் பகுதியில் வீடொன்றுக்குத் தீ வைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். 5 பேரும் தேடப்பட்டுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் அவர்கள் சரணடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"நாகர்கோவில் பகுதியில் அண்மையில் இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட மோதலின் பின்னர் இனம்தெரியாத நபர்களால் வீடொன்று தீக்கிரையாக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சம்பவம் தொடர்பாக 5 இளைஞர்கள் சரணடைந்தனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-8,26)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



தீர்த்தத் திருவிழா
இன்று (29.05.2017) திங்கட்கிழமை மாலை 4.00 மணி பஞ்சமூர்த்திகள் தீர்த்தமண்டபம் நோக்கி புறப்பாடு மாலை 4.30 மணிக்கு தீர்த்தம் நடைபெறும் இடப, யானை வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் வீதியுலா தொடர்ந்து கொடி இறக்கம் திருவிழா நடைபெறும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அரசியல் கட்சி ஒன்றின் தூண்டுதலே சுடலைக் குழப்பங்களுக்குக் காரணம்

## புத்தூர் மேற்கு கலைமதியில் நேற்றுப் பதற்றம் தணிந்தது

யாழ்ப்பாணம், மே 29

புத்தூர் மேற்கு, கலைமதி கிராமத்தின் சுடலைப் பிரச்சினை திடீரெனப் பெரிதாகி வன்முறையை எட்டியிருப்பதன் பின்னணியில் மார்க்சிச லெனினிசக் கட்சியே இருப்பதாக ஆணித்தரமான குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன. கட்சியின் தலைவர் சி.க.செந்திவேல் இந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுத்தாலும், கட்சியின் முக்கிய பதவியில் உள்ளவர் உட்பட கட்சி உறுப்பினர்களே அங்குள்ள சிலரைத் தூண்டிவிட்டு பிரச்சினையை வளர்த்து வருகிறார்கள் என்று அங்குள்ள மக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவை மதிக்காது வன்முறையில் இறங்கிய கட்சியின் முக்கிய பதவியில் இருக்கும் ஒருவர் மீது சுமத்தப்பட்ட அடி காயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்காக அவரைத் தேடிச் சென்றபோதே நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்க்க வேண்டிய நிலைமை உருவானது. சிறப்பு அதிரடிப்படையினரும் களமிறக்கப்பட்டும் இரவு 10 மணி வரை பதற்றம் நீடித்தது.

பொலிஸார் சிறு பிள்ளை ஒன்றைத் தாக்கியதனால் ஏற்பட்ட ஆத்திரத்திலேயே நேற்றுமுன்தினம் குழப்பம் உருவானது என்று கலைமதி கிராமத்தவர்கள் சிலர் கூறினர். ஆனால், சந்தேகநபர்களைத் தேடி அங்கு சென்றபோது பொலிஸாரைச் சிலர் தாக்கியதன் காரணத்தாலேயே தாம் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்க்க வேண்டியிருந்தது என்று



பொலிஸார் கூறினர்.

பொலிஸாரின் நடவடிக்கையால் ஆத்திரமுற்ற கிராம மக்களே சுடலையைச் சுற்றிக் கட்டப்பட்டு வந்த மதில் சுவரை இடித்தழித்தனர் என்று கலைமதி கிராமத்தைச் சேர்ந்த சிலர் தெரிவித்தனர். ஆனால், உணர்ச்சிவசப்பட்டுச் செய்யப்பட்ட நடவடிக்கையல்ல அது, நன்கு திட்டமிட்டு வேண்டும் என்றே செய்யப்பட்ட செயல் அது என்று இந்தப் பிரச்சினையை நடுநிலையாக அணுகுபவர்கள் கூறுகின்றனர்.

"முதலில் அரைவாசிக்குக் கட்டப்பட்டிருந்த மதில் நேற்றுமுன்தினம் உடைக்கப்பட்டது. பின்னர் சிறிது நேரம் கடந்து, மதிலின் இடையே கொங்கிறீற் தூண்களை எழுப்புவதற்காகப் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளும் அறுத்தெறியப்பட்டன. அதன் பின்னர் நேற்றைய தினம் மதில் அத்திபாரமும் சேதமாக்கப்பட்டது. சுடலையில் நின்ற பெரிய மரம் ஒன்றும் அடியோடு அறுத்துச் சாய்க்கப்பட்டது. இவ்வாறு கட்டம் கட்டமாகச் செய்யப்பட்ட ஒவ்வொரு செயல்களும் உணர்ச்சி மேலீட்டால் ஆத்திரப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் செய்யும் செயல் அல்ல" என்று அவர்கள் கூறினர்.

தாமும் தாக்கப்படுவோம் என்கிற அச்சம் காரணமாக எவரும் தமது பெயர் விவரங்கள் வெளியிடப்படுவதை விரும்பவில்லை. இந்தச் சுடலைப் பிரச்சினையில் தொடர்புபட்டிருக்கும் சிறுப்பிட்டி வடக்கு, சிறுப்பிட்டி மேற்கு மக்கள் தாமும் கடுமையாக அச்சமடைந்திருக்கின்றனர் என்று தெரிவித்தனர். ஏற்கனவே ஒருவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகப் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

"ஊடகங்கள் இதனை இரு சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினை என்று தவறாகச் செய்தி வெளியிடுகின்றன. உண்மையில் புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்திலும் சிறுப்பிட்டி மேற்கிலும் வாழும் மக்கள் அனைவருமே ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களே. ஆனால் நாங்கள் சுடலையில் உடலைத் தகனம் செய்வதற்கும் விடுகிறார்களில்லை. வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தகனம் செய்வதற்கும் விடுகிறார்கள் இல்லை. எனவே இதனை இரு சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினை என்று சொல்வது தவறானது. இது சுடலை வேண்டாம் என்று கூறுபவர்களின் பிரச்சினையே தவிர சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினை அல்ல" என்று தெரிவித்தனர் சிறுப்பிட்டி மக்கள்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று அரச நிர்வாக அதிகாரிகள், பொலிஸார், சம்பந்தப்பட்ட மக்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதிகாரிகள் கலந்துபேசி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரும் வரையில் ஒன்றரை மாத காலத்திற்கு இரு தரப்பினருமே சுடலைக்குள் எந்தவிதமான நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த விவகாரத்தை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்குக் குழு ஒன்றை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

எனினும் இந்தக் கலந்துரையாடலின் பின்னரும் சுடலைக்குள் நுழைந்து மதில் அத்திபாரங்களை உடைத்து நொறுக்கியும் மரத்தை வெட்டிச் சாய்த்தும் பல்வேறு குற்றங்கள் புரியப்பட்டிருக்கின்றன. இதனால் அந்தக் கூட்டத்திற்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது என்று சிறுப்பிட்டி மக்கள் கூறுகின்றனர்.

பிரச்சினையில் தொடர்புபட்டுள்ள புத்தூர் மேற்கு கலைமதியைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு நீதிமன்ற உத்தரவையும் மதிக்காது நடந்து கொள்வதற்கு மார்க்சிக லெனினிசக் கட்சியினரின் தூண்டுதலே காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டை கட்சியின் தலைவர் சி.க.செந்திவேல் மறுத்தாலும், அந்தக் கிராமத்தில் தமது கட்சியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றும் கிராமம் மொத்தமுமே தமது கட்சி ஆதரவாளர்களே என்றும் அவர் தெரிவித்தார். அவர்களின் கோரிக்கை நியாயமானதாகப் பட்டதால் கட்சி அதற்கு ஆதரவளிக்கிறது என்றும் கூறினார்.

(உ)

## யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என்று மாவட்டச் செயலர் அறிவித்தார்.

மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நாளை முற்பகல் 9 மணிக்கு கூட்டம் இடம்பெறும் என்று அவர் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் மேலும் தெரிவித்தார். (4)



## யாழ்ப்பாண நகரில் நேற்று விபத்துக்களால் சேதங்கள்

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாண நகரின் பல பாகங்களிலும் நேற்று இரவு இடம்பெற்ற விபத்துகளில் 4 வாகனங்கள், மதில், இரு மின்கம்பங்கள் என்பன முழுமையாகச் சேதமடைந்தன.

யாழ்.நகரில் மாவட்ட செயலகம் அருகில் பழைய பூங்கா முன்பாக ஹன்ரர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டபோது எதிரே வந்த கார்ச் சில்லுக்குள் அகப்பட்டு ஒருவர் படுகாயமடைந்தார். படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இதேபோன்று இரவு 8 மணியளவில் சிவன் புது வீதியில் இருந்து பாரதியார் சிலைச் சந்தியில் இணையும் குறுக்கு வீதியில் கார் ஒன்று தொலைபேசிக் கம்பத்துடன் மோதியதில் கம்பம் முறிந்து வீழ்ந்ததோடு கார் பலத்த சேதமடைந்தது.

இரவு 9.15 மடியளவில் பலாலி வீதியில் மிக வேகமாக இரு கார்கள் சென்றவேளை ஒரு கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் இருந்த மின் கம்பம் மற்றும் பாதுகாப்பு சுவர் என்பனவற்றை மோதிச் சேதமாக்கியது. இதனால் கார் பலத்த சேதமடைந்தது.

குறித்த விபத்துக்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-101)

## வீதியில் நிறுத்திவைக்கப்பட்ட ட்ராக்டருடன் மோதுண்டு வயோதிபர் பரிதாபச் சாவு

*முரசுமோட்டையில் சனியன்று இரவு சம்பவம்*

கிளிநொச்சி, மே 29

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு உழவு இயந்திரங்களுடன் மோதுண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முரசுமோட்டை அந்தோனியார் ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விசுவமடு புன்னைநீராவிப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி (வயது-63) என்ற வயோதிபரே உயிரிழந்தார்.



"2 உழவு இயந்திரங்கள் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. வீதியில் வாகனம் நிறுத்த வேண்டிய பகுதிக்கு வெளியே அவை நிறுத்திவைக்கப்பட் டிருந்தன. அத்துடன், லாண்ட் மாஸ்டரை அதன் சாரதி எடுத்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (வ-35)

## திருமணத்துக்குச் சென்றிருந்தவர் மயங்கும் அளவுக்கு தாக்கப்பட்டார்

*அச்சுவேலியில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 29

திருமண வீட்டுக்குச் சென்று திரும்பியவர் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் அச்சுவேலி பேருந்து நிலையத்தை அண்மித்து நேற்றுமாலை இடம்பெற்றது. உடுவிலைச் சேர்ந்த குறித்த நபர் தொண்டமனாறு பகுதியில் இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றுக்குச் சென்று திரும்பியபோது தாக்குதல் நடத்தப்பட்டது. காரணம் தெரியவில்லை. தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(4, 26)

## தையிட்டியில் கிணற்றுக்குள்ளிருந்த ஆயுதங்கள் நேற்று அழிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 29

வலிகாமம் தையிட்டியில் கிணற்றுக்குள்ளிருந்த எஞ்சிய ஆயுதங்கள் நேற்று கிணற்றுக்குள்ளேயே வெடிக்க வைத்து அழிக்கப்பட்டன என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கிணற்றுக்குள் சில நாள்களாக ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அவ்வாறு சுமார் 500 இற்கும் மேற்பட்ட கைக்குண்டுகள், 60 மோட்டர் குண்டுகள், 8 பரா ரகக் குண்டுகள் மீட்கப்பட்டிருந்தன. அந்தக் கிணற்றுக்குள் இன்னும் ஏராளமான ஆயுதங்கள் உள்ளன என்றும் அவற்றை வெளியே எடுப்பதில் சிக்கல் காணப்படுவதாகவும் கூறப்பட்டது. இந்த நிலையில் குறித்த அயுதங்களை நீதிமன்றின் அனுமதியுடன் கிணற்றுக்குள் வைத்து அழிக்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4, 26)

### பட்டதாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு:

## திருமலை.நீதிவான் மன்றம் விசாரிக்க முடியாது என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 29

வேலை கேட்டுப் போராடிய பட்டதாரிகள், நீதிமன்றை அவமதிப்புச் செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கை, நீதிவான் மன்றம் விசாரணை செய்ய முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்காக மன்றில் இன்று முன்னிலை யாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வேலைகேட்டுப் போராட்டம் நடத்திய பட்டதாரிகள், கிழக்கு மாகாண சபை முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸார் நீதிவான் மன்றினால் வழங்கப்பட்ட தடை உத்தரவை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் வழங்கினர். அவர்கள் அதனைக் கிழித்தெறிந்தனர்.

இது தொடர்பில் நீதிவான் மன்றில், நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. பட்டதாரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

"திருகோணமலை நீதிவான் மன்ற சட்டத்தரணிகள் சங்கத்தினர் மாணவர்களுக்காக முன்னிலையாக மறுத்து விட்டனர். நான் அவர்களிடம் பேசினேன். அவர்கள் தாம் முன்னிலையாக மாட்டோம் என்று திட்டவட்ட மாகக் கூறினர்.

இதனால் நான் முன்னிலை யாகவுள்ளேன். நகர்த்தல் பத்திரத்தின் ஊடாக இன்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நீதிமன்ற வளாகத்தினுள் நடக்கும் நீதிமன்ற அவமதிப்பை மாத்திரமே நீதிவான் மன்றம் விசாரணை செய்ய முடியும். அதற்கு வெளியில் நடக்கின்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை மேல் முறையீட்டு நீதிமன்றமே விசாரணை செய்ய முடியும்" என்றார் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

(வ-5)

# திருமண வீட்டில் நகை திருடியவன் மோ.சைக்கிளைக் கைவிட்டு ஓட்டம்

## *கோப்பாய் இராச வீதியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ம 29

கோப்பாய் இராச வீதியில் திருமண வீடு ஒன்றுக்கு நேற்று முன் தினம் அதிகாலையில் வந்த திருடன் நகைகளைத் திருடிக் கொண்டு தப்பியோட முயன்றவேளை வீட்டார் விழித்துக் கொண்டதால் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு நகைகளுடன் தப்பினான்.

குறித்த வீட்டில் முதல் நாள் திருமண நிகழ்வு நடந்ததால் அதிகளவானோர் தங்கி நின்றுள்ளனர். அத்துடன் அவர்கள் வீட்டுக் கதவையும் பூட்டாமல் படுத்துறங்கினர். இதனால் திருடன் எவ்வித தடையுமின்றிவீட்டுக்குள் புகுந்துள்ளான்.

இவ்வாறு புகுந்த திருடன் அறைகளைச் சல்லடையிட்டுத் தேடி 9 பவுண் தங்க நகைகளைக் களவாடிக் கொண்டு தப்பிச் செல்ல முயன்றான். அவ்வேளை வீட்டில் இருந்தோர் விழித்துக் கொண்டனர். இதனால் திருடன் தான் வந்த பிளசர் ரக மோட்டார் சைக்கிளை கைவிட்டுத் தப்பியோடியுள்ளான்.

குறித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் குருமன்காடு, வவுனியாவைச் சேர்ந்தவர் எனவும், அவரைக் கைது செய்ய நடவடிக்கை இடம்பெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-101)

# பாலத்தில் குளித்தவரை துரத்திக் கடித்தது கடற்கீரி

சாவகச்சேரி, மே 29

சங்குப்பிட்டிப் பாலத்தில் குளித்துக்கொண்டிருந்தமறவன்புலோவாசியை கடல்விச ஜந்தான கடற் கீரி துரத்திக் கடித்துக் காயப்படுத்தியுள்ளது

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

நண்பர்களுடன் பாலத்தில் அவர் குளித்துக்கொண்டிருந்தவேளை காலில் பாம்பு கடித்தது போன்ற உணர்வு காணப்பட்டது. காலைத் தூக்கிப் பார்த்தபோது இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

தொடர்ந்தும் கடற்கீரி தன்னைத் துரத்தி வந்ததாகவும், அங்கிருந்து தப்பிக் கரை சேர்ந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

மறவன்புலோவைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை கௌரிதரன் (வயது -29 ) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளவராவார். (த-9)

# முயற்சி நூல் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், மே 29

மானிப்பாய் இந்துக் கல்லூரி நாடக மன்ற மாணவர்களால் "முயற்சி" எனும் நாடகப் பிரதிகளின் தொகுப்பு நூல் இன்று திங்கட்கிழமை காலை 7.40 மணிக்கு மேற்படி மன்றத் தலைவர் தி.திஸ்னுகன் தலைமையில் கல்லூரியின் வி. எஸ்.துரைராஜா திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலை அதிபர் கலந்துகொள்ளவுள்ளார். வாழ்த்துரையைக் கல்லூரி முதல்வர் மே. இந்திரபாலாவும், பொறுப்பாசிரியர் உரையை மன்றப் பொறுப்பாசிரியர் எஸ். ரி. அருள்குமரனும், வெளியீட்டுரையைக் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் தமிழ்ச் சங்கப் பொறுப்பாசிரியருமான ஞான.திருக்கேதீஸ்வரனும் ஆற்றவுள்ளனர். (த)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி மே. 25

தென்மராட்சிப் பிரதேச தொழில் முயற்சியாளர்களுக்கான வியாபாரப் பதிவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.00 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமெனப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாட்டுத் திட்டங்களுக்கு அமைவாக நடத்தப்படவுள்ள கருத்தரங்கில் பிரதேச அரச அலுவலகங்களிலிருந்து ஒரு பிரதிநிதி வீதம் கலந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (த-9)

# திருக் குடமுழுக்கு

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைக் காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன நவ குண்டபக்ச திருக் குடமுழுக்கு இன்று திங்கட்கிழமை காலை 9.30 தொடக்கம் 10.45 மணிவரை நடைபெறவுள்ளது.

11 மணிக்கு நடைபெறும் மகாபிசேக சிறப்புப் பூசையைத் தொடர்ந்து அன்னதானமும், இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (த-10)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 27

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி செல்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் திருவிழா நடைபெறும்.

அடுத்த மாதம் 8ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு நிலாவரை புனித தீர்த்தக் கேணியில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (த-17)

# கோயில் திருவிழா

யாழ்ப்பாணம்,மே 27

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோயில் திருவிழா இன்று 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் அடுத்த மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 7ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (த)

# திருமணம் புரிவதாக கூறிப் பெண்ணிடம் பணம் கறந்தவர் கைது

## *விளக்கமறியலில் வைக்க உத்தரவு*

யாழ்ப்பாணம், மே 28

திருமண வாக்குறுதியளித்து இளம்பெண்ணிடம் பண மோசடியில் ஈடுபட்ட வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை ஜூன் மாதம் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

வட்டுக்கோட்டைப் பகுதியில் ஆடையகமொன்றை நடத்தி வரும் இளைஞர் ஒருவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை காதலிப்பதாகவும், அவரையே திருமணம் புரியவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதற்குப் பின்னர் வியாபாரம் செய்வதற்காக 14 இலட்சம் ரூபா பணம் தருமாறு குறித்த பெண்ணிடம் கோரிப் பணத்தையும் பெற்றுள்ளார். பின்னர் ஆறு இலட்சம் ரூபாவைப் பெண்ணிடம் மீளக் கொடுத்துள்ளார். அதன் பின்னர் அந்தப் பெண்ணைச் சந்திப்பதையும் அவருடன் பேசுவதையும் தவிர்த்த வர்த்தகர், பணத்தையும் கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இது தொடர்பாகக் குறித்த பெண்ணால் யாழ்ப்பாணம் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் இளைஞரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவரை எதிர்வரும் 07ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார். (த-103)

# அடிக்கல் நடும் நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 29

சங்கானை சந்தைக் கட்டடத் கடைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அது பிற்போடப்பட்டுள்ளதாக வலி.மேற்கு பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார். (த-10)

# தங்க நகை திருடி விற்பனை; 2 பெண்கள், வர்த்தகர் கைது

சாவகச்சேரி, மே 29

தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு பெண்களும் திருட்டு நகைகளைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் நகைக் கடைக்காரர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். கைக்குழந்தையுடன் உள்ள பெண்ணைப் பிணையில் விடுவிக்குமாறும், மற்றைய இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.

ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கரைப் பவுண் தங்க நகைகளைத் திருடிய பெண்ணையும், சாவகச்சேரியில் உள்ள நகைக் கடையில் அவற்றை 40 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்த வர்த்தகரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், ஐந்தரைப் பவுண் நிறையுடைய தாலிக்கொடியைத் திருடிய பெண் கைக்குழந்தையுடன்நீதிமன்றுக்கு வந்ததால்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

கொடிகாமம் முதன்மைச் சாலையில் உள்ள வீடொன்றில் பளை வண்ணான்கேணியைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரு வாரத்துக்கு முன்னர் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்காக வேலைக்கு அமர்த்தப்பட்டார். குறித்த பெண் கடந்த 20 ஆம் திகதி வீட்டினுள் கைப்பையினுள் வைக்கப்பட்டிருந்த தங்கச் சங்கிலி மற்றும் ஒரு சோடி காப்பு ஆகியவற்றைத் திருடியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. சம்பவம் தொடர்பாக வீட்டுக்காரப் பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்துக் குறித்த பெண்ணைக் கைதுசெய்தபோது தங்க நகைகளைச் சாவகச்சேரியில் உள்ள நகைக் கடை ஒன்றில் கொடுத்துவிட்டு 40 ஆயிரம் பணம் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்தார். அவ்வாறு பெறப்பட்ட பணத்தில் 6 ஆயிரம் ரூபா செலவழிக்கப்பட்டதாகக் கூறி மிகுதிப் பணத்தைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

பொலிஸார் சாவகச்சேரியில் உள்ள நகைக் கடையில் விசாரித்தபோது நகைகளை அங்குள்ள வங்கியில் ஈடுவைத்து 40 ஆயிரம் ரூபா வழங்கியதாக வர்த்தகர் கூறியுள்ளார். இதனையடுத்து இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இதேவேளை, கொடிகாமம் கெற்பேலி மேற்கில் வேலை கேட்டு வந்த பெண்ணுக்கு வேலை வழங்கியதாகவும், கடந்த 21ஆம் திகதி தாங்கள் வீட்டில் இல்லாதவேளை மேசை லாச்சிக்குள் வைக்கப்பட்டிருந்த ஐந்தரைப் பவுண் நிறையுடைய தங்கத் தாலிக்கொடியை அவர் திருடியுள்ளதாகவும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த பெண்ணைக் கைது செய்த பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் பெண்ணை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணைகளில் செல்ல அனுமதித்து ஞாயிற்றுக்கிழமைகளில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்.

(த-4-9)

# ஒரு மாத ஊதியத்தை உதவிக்காக வழங்குங்கள்

## வடக்கு மாகாண உறுப்பினர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 29

"தென்னிலங்கையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ, வடக்கு மாகாணசபை முன்வரவேண்டும். வடக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தமது ஒரு மாத ஊதியத்தை வழங்க முன்வர வேண்டும்."

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் அந்தக் கட்சியின் வடமாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த இரு தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். 122 பேர் வரையில் இறந்துள்ளனர். 150 இற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர். இந்த நிலையில் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு, உணவு மற்றும் உடைகளை வழங்கி உதவிக்கரம் நீட்ட வடக்கு மாகாண சபை முன்வர வேண்டும்.

வடக்கு மாகாணசபையுடன், வடக்கு மாகாண மக்களும் குறிப்பாக வணிகர் கழகங்கள், பொது அமைப்புக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் கூட்டாக இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும். இதன் மூலம் தென்னிலங்கை மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் நல்ல உள்ளத்தைப் புரிய வைக்க முடியும்.

நல்லிணக்கம் வர வேண்டும் என ஒலிவாங்கியில் ஓங்கி உரைக்கும் எம் தமிழ் அரசியல் தலைமைகள், இந்தச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்து, தமது நல்லிணக்கத்துக்கான வெளிப்பாட்டைக் காட்ட வேண்டும். வெறுமனே ஊடகங்களில் அறிக்கை விடுவதை விடுத்து, நாம் அனைவரும் செயலில் நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும். எனது ஒரு மாத ஊதியத்தை மக்களுக்கு வழங்கத் தயாராக உள்ளேன் என்றார். (ஐ-10)

# இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்கு முயற்சிக்கிறார் மகிந்த

## பிரதியமைச்சர் அமீர் அலி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மே 29

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, தான் இழந்துள்ள செல்வாக்கை மீண்டும்பெறும்நோக்குடன், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை மையப்படுத்தி, பொதுபல சேனாவை ஓர் உயிரோட்டமுள்ள அமைப்பாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு கிராமிய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆடைத் தொழிற்சாலைத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சிறுபான்மைச் சமூகத்தினரிடையே மீண்டும் தனது செல்வாக்கைப் பெற முடியாத நிலையில், பெரும்பான்மை சமூகத்தினரிடையே தனது செல்வாக்கைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான, நாடகத்தின் ஒரு பகுதி தான் தற்போது அரங்கேற்றப்பட்டுள்ளது. இதனைத் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரும்பான்மைச் சமூகத்தின் காவலர்களாகக் காட்ட முயற்சிப்பதால், எந்த அரசு வந்தாலும் பொதுபல சேனா என்கின்ற அமைப்பின் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்திவிட முடியாது. தமிழ் முஸ்லிம் சமூகங்களால் சிங்கள சமூகம் அதிகம் இழந்துள்ளது என்று பொதுபல சேன அமைப்பு பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியிலே போலிப் பரப்புரை செய்து வருகிறது. அதற்குள் இருக்கின்ற இனவாதமுடைய தேரர்களையும், இனவாதத்தை விரும்புகின்றவர்களையும், சில அரசியல் தலைவர்களையும் இணைத்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சிறுபான்மைச் சமூகம் நல்லாட்சியைக் கொண்டு வந்த தன் பயனை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது இன்று பேசுகின்ற பேச்சுப் பொருளாக மாற்றப்பட்டிருக்கிறது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலத்தில் போதித்து வளர்க்கப்பட்ட பொதுபல சேன மற்றும் சிங்கள ராவண எனப்படும் அமைப்புகள் தொடர்ந்தும் தமிழ் முஸ்லிகளுக்கு எதிராகச் செயற்பட்டுக்கொண்டுதான் உள்ளன. எதிர் காலத்திலும் அவ்வாறே செயற்படப்போகிறார்கள். இந்தப் பிரச்சினைகளை முற்று முழுதாக தீர்த்து வைக்க முடியாது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

மகிந்த ராஜபக்ச காலத்தில் அரசியல் தேவையின் நிமித்தம் சமூக அமைப்பாக ஊட்டி வளர்க்கப்பட்ட பொதுபல சேன இயக்கம், பெரும்பான்மைச்சமூகம் வாழுகின்ற பிரதேசங்களில் ஆழமாகக் காலூன்றி நிற்கின்றது. இவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைப் பாதுகாக்கின்ற காவலனாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முற்படுவதனால், ஆட்சியாளர்கள் சற்று சவால் கொடுத்து பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனத் தலைவர்கள் ஒன்றிணைந்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு அடுத்த கட்ட நகர்வை இப்பொழுதே திட்டமிட்டுச் செய்யாவிட்டால், எதிர்காலத்தில் பாரிய விலை கொடுக்க வேண்டி ஏற்படும். இந்த அமைப்புக்களால் கொழும்பில் இருப்பவர்களின் வீடுகள் தட்டப்படுகிறது . வடக்கு கிழக்கு மக்கள் செயற்பட்டால் இந்தப் பிரதேசத்திலும் அவர்கள் தட்டுவார்கள். சிறு பான்மைச்சமூகத்தினுடைய தலைவர்கள் சரியான பாதையில் மக்களைக் கொண்டுசெல்ல வேண்டும். நாளை நடைபெறவுள்ளபயங்கரசூழ்நிலையை எவ்வாறு எதிர்கொள்ளவுள்ளோம் என்கின்ற விடயத்தில் இன்னும் சிறுபான்மைச் சமூகத்தினர் ஒரே மேசையில் இருந்து பேசுவதற்குத் தயாராக இல்லை.

இந்த நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அரசியல் , சமூக ரீதியாகத் தமக்கிடையே உடன்பாட்டைக் கொண்டு வருவதற்கும் இன்னும் தயாரில்லை என்பது வேதனையளிக்கின்ற ஒரு விடயமாக உள்ளது - என்றார். (ஐ-ய-10-47)

## தென்மராட்சிக் கலாசார மண்டபம் புதுப்பொலிவு

சாவகச்சேரி மே.29

சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம் புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. விரைவில் குளிரூட்டிகள் பொருத்தப்பட்டு நவீன வசதிகளுடனான மண்டபமாகத் திகழவுள்ளது.

பிரதேச கலாசார நிகழ்வுகள் நடத்தப் போதிய இடவசதி இல்லாத நிலையில் நலன் விரும்பியொருவரால் வழங்கப்பட்ட காணியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டம் கட்டமாக நிதி வழங்கப்பட்டு வேலைகள் முழுமையாகப் பூர்த்தியடையாத நிலையில் திருமண விழாக்கள், கலை நிகழ்வுகள், பிரதேச செயலகம், தென்மராட்சி கல்வி வலயம் ஆகியவற்றின் நிகழ்வுகள் என்பன இந்த மண்டபத்தில் வசதி குறைந்த நிலையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய நிதியுடன் மன்றத்தில் நிகழ்வுகள் மூலம் கிடைத்த நிதியையும் இணைத்து மண்டப உள்ளக வேலைகள் செய்யப்பட்டுள்ளன எனவும், மேலும் இவ்வருட மாகாணப் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதால் இந்த நிதியின் உதவியுடன் மண்டபத்துக்கு குளிரூட்டிகள் பொருத்தப்படவுள்ளன எனவும் மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை நாவற்குளி சச்சிதானந்தத்தின் முயற்சியால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட திருவள்ளுவர் சிலைகளில் ஒன்று மண்டபத்திற்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாத நடுப்பகுதியில் அது திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 29

நாரந்தனை சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழாவின்போது சிறப்பு சொற்பொழிவுகளும் இடம்பெறும். (த)

## குட முழுக்கு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய குட முழுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி மு.ப. 9.30மணிக்கு நடைபெறவுள்ளது. (த)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 100 |
| கத்தரி | 140 | 200 | 120 | 140 |
| கரட் | 200 | 240 | 180 | 180-320 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 130 | 120 | 80 | 120 |
| பாகல் | 180 | 280 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 200 | 300 | 250 | 240 |
| பூசணி | 50 | 60 | 50 | 80 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 |
| கீரை | 20 | 50 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 50 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 200 | 280 | 260 | 200 |
| புடோல் | 120 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | 200 | 180 |
| வெண்டி | 120 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 240 | 180 |
| லீக்ஸ் | 120 | 80 | 200 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 180 | | 160 | 140 |
| இராசவள்ளி | 200 | | 280 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 140 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 800 | 900 |
| நண்டு | 400 | 300 | 400 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | – |
| சுறா | 500 | – | 800 | – |
| சீலா | 400 | 600 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 600 | 600 |
| முரல் | 400 | 600 | 400 | – |
| கும்பிளா | 400 | 500 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 800 |
| ஓரா | 350 | 500 | 500 | – |
| திரளி | 250 | 250 | 200 | 300 |
| நகரை | 300 | 150 | 400 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 200 |
| ஒட்டி | 250 | – | 300 | – |
| திருக்கை | 350 | – | 400 | – |
| மதனம் | 200 | 150 | 300 | 500 |
| கொய் | 100 | 60 | 80 | 100 |
| பாலை | 300 | 250 | 600 | – |
| வாழை | 200 | – | 400 | – |

## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம் மே 28

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள சுவாமினி விமலானந்தாஜியின் ஆன்மிக அருளுரை எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் "ஆனந்தமான வாழ்க்கை முறைமைக்கு அற்புதமான குறிப்புக்கள்" என்னும் தலைப்பில் ஆங்கில மொழியில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-ரி)



பெண்களுக்கான கோரிகிற் வகையிலான உடுப்புகளில் தற்போது புதிய வடிவில் சந்தைக்கு வந்துள்ளது. இவை 5 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# துணைவேந்தர் நியமனத்தில் அரசியல் தலையீடு

*அமைச்சர் விஜயகலா கூறுகிறார்*

யாழ்ப்பாணம் மே 29
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு அரச தலைவரால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட துணைவேந்தர் யார் என்றே தெரியாத நிலையிலேயே அவர் நியமனம் பெற்றுள்ளார்.
இவ்வாறு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.
இலங்கை நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் சபை ஏற்பாடு செய்த பெண்கள் வலுவூட்டல் கருத்தரங்கு வலம்புரி உணவு விடுதியில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராகப் பொறுப்பேற்றுள்ள விக்னேஸ்வரனை அரச தலைவருக்கு யார் என்றே தெரியாது. சில அரசியல் தலையீடுகளின் காரணமாக புதிய துணைவேந்தர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்ப ட்டுள்ளார்.
ஒவ்வொரு அரசிலும் எமது பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளில் சிலர் விலை போகின்றனர். அவ்வாறு விலைபோன அரசியல்வாதியின் தலையீடு காரணமாகவே தற்போது யாழ்ப்பான பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவும் இடம்பெற்றுள்ளது.
பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தர் தெரிவுமுறைகள் ஊடாக அரச தலைவருக்கு மூன்று பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்ட போது முதல் நிலையில் இருந்தவரை விட்டுவிட்டு யார் என்றே தெரியாத ஒருவர் நியமனம் பெற்றுள்ளார். அதற்காக தற்போது நியமனம் பெற்றுள்ள துணைவேந்தருக்கும் எனக்கும் எவ்வித தனிப்பட்ட பிரச்சனைகளும் இல்லை- என்றார். (ந-8)




# தொழில் முயற்சியை இனங்காண்பதற்கு விழிப்புணர்வுச் சேவை

வவுனியா, மே 29
தொழில் முயற்சியை இனங்காணலுக்கும், ஊக்கமூட்டலுக்குமான விழிப்புணர்வுச் சேவை வவுனியா காமினி வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.
கைத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், திணைக்களங்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தன.
திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பயிற்சிகள், தொழில் முயற்சிகளுக்கான உதவித் திட்டங்கள் தொடர்பாக அதில் தெளிவுபடுத்தப்பட்டது. தொழில் முயற்சியை இனங்கானும் செயற்பாடும் இடம்பெற்றது.
நிகழ்வில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.ஜெயதிலக, ரிப்கான் பதியுதீன், வவுனியா மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமார் உட்பட வர்த்தக கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-402)



# 100 ஆவது நாள் நாளை





| நேற்று.... | |
|---|---|
| கிளிநொச்சி | 98ஆவது நாள் |
| வவுனியா | 94 ஆவது நாள் |
| திருமலை | 86 ஆவது நாள் |
| முல்லைத்தீவு | 82ஆவது நாள் |
| மருதங்கேணி | 76 ஆவது நாள் |

கிளிநொச்சி, மே 29
கையளிக்கப்பட்டுக் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்க வற்புறுத்தியும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும், பயங்கரவாதச் சட்டத்தை நீக்கக் கோரியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் நாளையுடன் 100ஆவது நாளை எட்டுகின்றது.
இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக இதுவரையில் பொறுப்பு வாய்ந்த நடவடிக்கைகளோ, பதில்களோ வழங்கப்படாத நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கிலும், கிழக்கிலும் தொடர் போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுத்து வருகின்றனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களுக்குப் பல்வேறு அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும், பொதுமக்களும், மாணவர்களும் ஆதரவு வழங்குகின்றனர். போராட்ட களங்களுக்குச் சென்று போரா்ட்டங்களில் இணைந்து ஆதரவை வெளிக்காட்டினர். தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்ற உறுதியோடு கொழுத்தும் வெயிலும், கொட்டும் மழையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தைத் தொடர்ந்த வண்ணமுள்ளனர்.
கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக நடைபெற்றுவரும் தொடர் போராட்டம் நேற்று 98 ஆவது நாளாக உறுதியுடன் தொடர்ந்தது. அவர்களின் போராட்டம் நாளையுடன் 100ஆவது நாளை எட்டுகின்றது. அவர்கள் அன்று கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் சர்வமதப் பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர். பிரார்த்தனையில் அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூகப் பிரநிதிகள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தைத் தொடர்ந்து வவுனியா, முல்லைத்தீவு, மருதங்கேணி, திருகோணமலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் தொடர் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன.
வவுனியாவில் 94ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 82ஆவது நாளாகவும், திருகோணமலையில் 86ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 76ஆவது நாளாகவும் போராட்டங்கள் உறுதியுடன் தொடர்கின்றன.
"எங்கள் உறவுகளை மீட்டுத் தாருங்கள் என்று 8 ஆண்டுகளாக நாம் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். எமக்கு எவரும் சரியான பதிலை வழங்கவில்லை. அதனால் நாம் தொடர் போராட்டத்தில் இறங்கினோம். நாம் வீதியில் கிடப்பதை கூட்டரசும், அரசியல் வாதிகளும் வேடிக்கை பார்க்கின்றனர். எமக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை." உறவுகளைக் காணாது தவிக்கும் எங்கள் மனநிலையைப் புரிந்து கொண்டு நாம் நடத்தும் போராட்டத்துக்கு மக்கள் பேரதரவு வழங்க வேண்டும். என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். (ந-21)

# வவுனியா சென்ற அமைச்சர் ரிசாத்தை முற்றுகையிட்ட சுகாதாரத் தொண்டர்கள்

வவுனியா, மே 29
கைத்தொழிலாளர்கள் விழிப்புணர்வுச் செயலமர்வில் கலந்து கொள்ள நேற்று வவுனியா வந்திருந்த கொழும்பு அமைச்சர் ரிசாத் பதியுதீனை முற்று கையிட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமது நியமனம் தொடர்பான பிரச்சினைகளை அவருக்குத் தெளிவுபடுத்தினர்.
தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி சுகாதாரத் தொண்டர்கள் வவுனியாவில் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். தமக்கு நியமனம் வழங்கும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.
நேற்று வவுனியா காமினி வித்தியாலயத்தில் கைத்தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள அமைச்சர் ரிசாத் பதியுதீன் வந்திருந்தார். நிகழ்வின் இறுதியில் மேடையில் இருந்து இறங்கிய அமைச்சரைச் சுகாதாரத் தொண்டர்கள் முற்றுகை யிட்டனர்.
"நாம் 25 நாள்களாக நியமனத்துக்காகப் போராட்டம் நடத்துகின்றோம். நேற்று வவுனியாவில் பணம் பெற்று அரச



வேலை பெற்றுக் கொடுக்கும் மோசடி ஒன்று நடந்துள்ளது. இது தொடர்பாத் தாங்கள் உடன் கவனம் எடுக்க வேண்டும். நாங்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுகின்றோம். எமது நிரந்தர நியமனம் தொடர்பான பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
"பணம் பெற்று அரச வேலை வழங்கும் நடவடிக்கை இடம் பெறவில்லை. நியமனம் வழங்குவது சுகாதார அமைச்சு. எனவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமில்லை. உங்கள் நியமனங்கள் தொடர்பில் எனக்கு அதிகாரம் இல்லை. வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடுங்கள். அவருக்கே சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்கும் அதிகாரம் உள்ளது." என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவர்களுக்குப் பதிலளித்தார்.
அதேவேளை, வடக்கு மாகாணத்தில் இறுதியாக சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டபோது 92 பேருக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அலுவலகத்தில் நியமனக் கடிதங்கள் வழங்ப்பட்டிருந்தன. (ந-21)

### பெண்களுடன் சேஷ்டை புரிந்தவர்களுக்கு அறிவுரை

கிளிநொச்சி, மே 29
விஸ்வமடுச் சந்தி வழியாக மாலையில் பணி முடிந்து செல்லும் பெண்களுடன் சேஷ்டை புரிகின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய 4 இளைஞர்கள் கைது செய்யபட்டுள்ளனர் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இரு மணி நேரம் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர் அறிவுரைகள் வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (ந-35)

## வடக்கு கல்வி அமைச்சு அறிவிக்காததால் ஆசிரியர்களுக்கு 3 மாத சம்பளமில்லை

### *வவு. வடக்கு கல்வி வலயத்தில் நியமனம் பெற்றவர்கள் விசனம்*

வவுனியா, மே 29

சம்பளத்தை வழங்க மறுக்கும் வவுனியா வடக்கு வலய கல்வி அலுவலகம், சம்பளம் வழங்குவதற்கான அனுமதியை வடக்கு மாகாண கல்வி அமைச்சு எழுத்து மூலம் வழங்கவில்லை எனக் காரணம் கூறுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் விசனத்துடன் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபையால் தரம் 3 (ஆ) இல் நியமனம் வழங்கப்பட்ட, ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளம் கடந்த 3 மாதங்களாக வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கையொப்பமிட்டு 13.03.2017 அன்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் வழங்கப்பட்டது.

அவர்கள் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையைப் பொறுப்பேற்று கடிதங்களை அடுத்த நாளே சமர்ப்பித்திருந்தார்கள். முறைப்படி கடமையைப் பொறுப்பேற்று 3 மாதங்கள் கடந்துவிட்ட போதும் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. வடமாகாணத்தில் நியமனம் பெற்ற ஏனைய வலயக் கல்வி அலுவலகங்களின் கீழ் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஆசிரியர்களுக்கு மூன்று மாதங்கள் சம்பளம் வழங்கப்பட்டுள்ள நிலையில் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் சம்பளத்தை வழங்குவதற்கு பின்னிற்கின்றது என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

சம்பளம் வழங்குவதற்கான அனுமதியை வட மாகாணக்கல்வி அமைச்சு தமக்கு எழுத்து மூலம் அறிவிக்கவில்லை என வலயக்கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற-21)

# ஆயுதப் போராட்டத்தாலேயே மாகாண சபை உருவாகியது

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மே 29

ஆயுதப் போராட்டத்தால்தான் மாகாண சபை உருவாகியது என்று தெரிவித்தார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா, ஓமந்தை, நாவற்குளத்தில் வாழ்ந்த கனகசபை நல்லதம்பியின் நூற்றாண்டு விழாவும், நினைவு மண்டபத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எங்கள் கிராமங்களைக் கட்டியெழுப்ப பல ஆயிரம் கோடி ரூபா நிதி தேவையாகவுள்ளது. நாம் ஒரு பக்கம் அரசுடன் மோத வேண்டியுள்ளது. மறுபக்கம் எங்கள் கட்சிக்குள் தனிநபர் ஆதிக்கத்தால் எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பாக கட்சிக்குள்ளும் நாம் சில விடயங்களைக் கையாள வேண்டியுள்ளது.

எமக்குள் ஒரு மாகாண சபை உருவாகியது என்றால் அதற்குக் காரணம் ஒரு ஆயுதப் போராட்டம்தான். ஆயுதப் போராட்டம் பல கசப்பான அனுபவங்களைத் தந்திருந்தாலும் கூட அதுதான் உலகைத் தமிழ் மக்களின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

வடக்கில் ஒரு மாகாண சபை, கிழக்கில் ஒரு மாகாண சபை, வடக்கு கிழக்கு இணைந்த ஒரு மாகாண சபை இருந்தது என்றால் அது ஆயுதப் போராட்ட காலத்தில்தான். போரால் பாதிக்கப்பட்ட அவயங்களை இழந்த, உறவுகளை இழந்த துயரத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் கால கட்டத்தில் நாம் இருக்கின்றோம். எமக்குக் கீழே ஆயிரக்கணக்காணவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். என்றார். (ற-402)



## கனகசபை நல்லதம்பி நினைவாக மண்டபம்

வவுனியா, மே 29

வவுனியா, ஓமந்தை நாவற்குளத்தில் வாழ்ந்த கனகசபை நல்லதம்பியின் (உடையார்) நூற்றாண்டு விழாவும், நினைவு மண்டபத் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாவற்குளம் வீரசக்தி அம்மன் ஆலய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்தார். நிகழ்வில் கிராமத்தைச் சேர்ந்த முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், எம்.தியாகராசா, ஆர். இந்திராஜா உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-402)

## வன்னி விளான்குளம் அம்மன் ஆலய பொங்கல் திருவிழா

முல்லைத்தீவு, வன்னி விளான்குளம் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது.

திருவிழா தொடர்பான முன்னாயத்த ஒழுங்கமைப்புக் கூட்டம் நடை பெறவுள்ளது என்றும், ஆலய அறங்காவலர் சபையின் கூட்டம் எதிர் வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலய முன்றலில் நடை பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒழுங்கமைப்புக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

திருவிழாவின் போது வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச செயலாளர் இ. பிரதாபன், மாந்தைக் கிழக்கு பிரதேச செயலாளர் இ. றமேஸ், மல்லாவி, மாங்குளம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், துணுக்காய் பிரதேச சபையின் செயலாளர், மாந்தைக் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வன்னி விளான்குளம் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச மற்றும் தனியார் துறை பேரூந்து சங்கத்தினர் எனப்பலரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

## இணைத்தலைவர்கள் தலைமையில் கிளி. அபிவிருத்திக் கூட்டம் இன்று

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது என்று மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இணைத்தலைவர்களான வட மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

கடந்த ஆண்டு . கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் முன்னேற்ற நிலை தொடர்பாகவும், நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அதில் ஆராயப்படவுள்ளன. கூட்டத்துக்கு மாவட்ட மட்டத்திலான அனைத்து திணைக்களங்களின் பணிப்பாளர்கள், அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநித்து வப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் கருத்துக்களை முன் வைப்பர்- என்றார். (ற-101)



*பருத்தித்துறை மருதங்கேணி சாலையில் குடாரப்பு பகுதியில் பாலம் அமைப்பதற்காக வெட்டப்பட்ட குழியில் பாய்ந்து பெக்கோ ரக வாகனம் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது.* (ற)

## பளைப் பிரதேச சபைத் தலைமையக கட்டடத்தை திறந்தார் முதலமைச்சர்

பளை, மே 29

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன், 14.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பளைப் பிரதேச சபை தலைமையகக் கட்டடம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. பிரதேச சபைச்செயலாளர் திருமதி செ.அனுசியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தின் களப் பகுதியைத் திறந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண சபை உறுப்பினர்கனான சு. பசுபதிப்பிள்ளை ப.அரியரத்தினம் மற்றும் பிரதேச செயலர் திருமதி ஜெய.பரமோதயன், வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரன், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் ரஞ்சன், கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் உட்படப் பலர் விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

தலைமையகக் கட்டத் திறப்பு விழாவைத் தொடர்ந்து இயக்கச்சியில் 7.6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடமும், வர்த்தக நிலையத் தொகுதியும் திறக்கப்பட்டன.

பளைப் பிரதேச சபையின் தலைமையகத்துக்குத் தனியான கட்டடம் இல்லாததால் இதுவரை காலமும் புலோப்பளை கிராம சபையால் 60 வருடங்களுக்குமுன்னர் அமைக்கப்பட்ட கட்டடத்தில் சிரமங்களின் மத்தியில் இயங்கியது.

புதிதாக தலைமையகக் கட்டடம் அமைக்கப்பட்ட போதிலும் அதன் மாடிப் பகுதி வேலைகள் நிறைவு பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)



# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சாவு

## இரத்தினபுரியில் துயரம்

கொழும்பு, மே 29
நாட்டின் தெற்குப் பகுதியில் இடம்பெற்ற சீரற்ற காலநிலை காரணமாக இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி, ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவம் இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்றது. நாட்டில் நான்கு மாவட்டங்களில் கடந்த வியாழக்கிழமை மிகவும் மோசமான வெள்ள இடரும், மண்சரிவுகளும் ஏற்பட்டன. அதனால் பலர் உயிரிழந்ததுடன், பலர் காணமலும் போயுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி, கணவர், மனைவி மற்றும் அவர்களது பிள்ளைகள் மூவரும் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் மாலை அவர்களின் இறுதி கிரியைகள் முன்னெடுக்கப்பட்டன. ஐவரும் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டனர்.

இந்தக் குடும்பத்தின் மூத்த மகன், இடரின் போது வீட்டில் இல்லாத காரணத்தால் உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-10)



# 1969 என்ற இலக்கத்துக்கு அழைக்கவும்

கொழும்பு, மே 29
தெற்கு அதிவேக சாலையில் பயணிக்கும் வாகன சாரதிகள் அவசர நிலைமையின் போது 1969 என்ற இலக்கத்துக்கு அழைத்துத் தகவல் வழங்க முடியும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.
நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சாலைகளில் தடங்கள் இல்லாத நிலை தற்போது காணப்படுகின்றது. அதனால் குறித்த சாலைகளில் பயணிப்பவர்கள். இலத்திரனியல் பதாகைகளில் காணப்படும் அறிவுரைகளைப் பின்பற்றவும் என்றும் அதிகார சபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் கீச்சகத்தில் உருக்கமான பதிவு

கொழும்பு, மே 29
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள், தங்களின் உருக்கமான பதிவுகளைக் கீச்சகப் பக்கங்களில்பதிவிட்டுள்ளனர்.
இலங்கை அணியின் தலைவரான மத்தியூஸ் தனது கீச்சகப் பக்கத்தில், "போட்டி முடிந்த பின்னர் சோகமான செய்தியைக் கேட்டேன். நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்து கொள்கின்றன்" என்று பதிவிட்டுள்ளார். இலங்கை அணியின்முன்னாள்தலைவர் மகேல ஜெயவர்த்தனே, " வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காகப் பிரார்த்தனை செய்து கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.
இலங்கை அணியின் மற்றொரு முன்னாள் தலைவரான சங்ககாரா, "வெள்ளம் மற்றும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் பிரார்த்தனை செய்து கொள்கிறேன். பாதுகாப்பாக இருங்கள்." என்று பதிவிட்டுள்ளார். (ஐ-10)

## 8 மாவட்டங்களில்

# மண்சரிவு அபாயம்

## தேசிய கட்டட ஆய்வு மையம் எச்சரிக்கை

கொழும்பு, மே 29
நாட்டின் 8 மாவட்டங்களில், அதிக மழை காரணமாக, மண்சரிவு அபாய நிலைமை காணப்படுகிறது என்று தேசிய கட்டட ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.
இது தொடர்பில் அந்த மையம் மேலும் தெரிவித்தாவது,
"எதிர்வரும் 24 மணி நேரம் நடைமுறையாகும் வகையில், இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, கண்டி, அம்பந்தோட்டை, நுவரெலியா ஆகிய எட்டு மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.
மண்சரிவு அல்லது மண்மேடுகள் சரிந்து செல்லும் அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், அங்கிருந்து வெளியேறவும். மரங்கள் அல்லது தூண்கள் இயல்பாக இடம்பெயர்தல், கட்டடங்கள் அல்லது சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்படுதல் போன்ற வழமைக்கு மாறான மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அதில் மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறித்த 8 மாவட்டங்களிலும் வசிக்கும் மக்கள் மிக அவதானத்துடன் இருக்க வேண்டியுள்ளது. பாதுகாப்புக்குரிய இடங்களில் தற்காலிகமாக வசிப்பது நல்லது" என்றும் ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. (ஐ-10)



# “சுனாமி அலைபோன்று பெருக்கெடுத்தது வெள்ளம்”

## நாகொட மக்கள் விவரிப்பு


கொழும்பு, மே 29
"சுனாமி அலை போன்ற பெரிய வேகத்துடன் வெள்ளம் கிராமத்துக்குள் புகுந்தது. இது போன்ற வெள்ள இடர் இதற்கு முன்னர் ஒருபோதும் நாகொடப் பிரதேசத்தில் ஏற்படவில்லை" என்று இடரை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.
களுத்துறை மாவட்டத்தின் நாகொடப் பிரதேசம் நேற்று முன்னிரவு தொடக்கம் வெள்ளத்தில் மூழ்கத் தொடங்கியது. கடந்த வியாழக்கிழமை பெய்த கனமழையால் இந்தத் தாக்கம் ஏற்பட்டது. தற்போது வரை நாகொடப் பிரதான சந்தி வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்தப் பகுதிக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
நாகொடப் பிரதேசத்தின் மேட்டுநிலப் பகுதிகளும் வெள்ளத்தால் மூழ்கடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், அந்தப் பகுதியில் சுமார் இரண்டரை அடி உயரத்தில் வெள்ளம் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



# ரஷ்யா இரங்கல்

கொழும்பு, மே 29
இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ரஷ்ய அரச தலைவர் விளாடிமிர் புடின் இரங்கல் வெளியிட்டுள்ளார்.
சீரற்ற காலநிலையால் இலங்கையில் 122 பேர் உயிரிழந்ததுடன், 97 பேர் வரையில் காணாமற் போயுள்ளனர். இடர் நிலைமைகள் குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு , ரஸ்ய அரச தலைவர் உத்தியோக பூர்வமான முறையில் இரங்கல் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.
“இந்த நெருக்கடியான தருணத்தில், ரஸ்ய மக்கள் இலங்கை மக்களுடன் துயரைப் பகிர்ந்து கொள்கின்றனர்" என்று தனது இரங் கல் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-10)

# மரண அறிவித்தல்



## கந்தையா பாலசுப்பிரமணியம் (வீரசிங்கம்)

துன்னாலை மத்தி கோயிற்கடவையைப் பிறப்பிடமாகவும், பாவற்குளம், வவுனியா, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் (வீரசிங்கம்) 27.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தங்கராசா மற்றும் திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச்சகோதரரும், கலாவதி செல்லத்துரை, விஜயகுமார் (சுவிஸ்), லீலாவதி, லீலாதேவி இராசகுமார் (பிரான்ஸ்), இந்திராதேவி, உதயகுமார், உதயசூரியன் (பிரான்ஸ்), கருணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அரியரட்ணம், தேவராணி, வாசுகி (சுவிஸ்), சக்திவேல், சற்குணசீலன் (பிரான்ஸ்), சுமித்திரா (பிரான்ஸ்), கரண்குமார், மலர்விழி, பிரதீபா (பிரான்ஸ்), தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுத்தோட்ட வீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி

தகவல்
குடும்பத்தினர்.

077 834 5269, 077 918 1325

# அரச பணியாளர்களுக்கான நெகிழ்வுமுறை நேரத் திட்டம்

## ஜூலை முதல் நடைமுறைக்கு

கொழும்பு, மே 29
அரச பணியாளர்களுக்கான நெகிழ்வுமுறை வேலை நேரத் திட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படும் என்று பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிகால் ரூபசிங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

'கொழும்பு பத்தரமுல்ல பிரிவில் முதற்கட்டமாக இந்த நெகிழ்வுமுறை வேலைநேரத் திட்டம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த நடைமுறையின் கீழ் பத்தரமுல்ல பிரிவில் உள்ள அரச பணியாளர்கள் காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணி வரையான நேரத்துக்குள் எந்த நேரத்திலும் தமது பணிகளை ஆரம்பிக்க முடியும். வேலை ஆரம்பித்த நேரத்துக்கு ஏற்ப, எட்டு மணிநேரத்தின் பின்னர், பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணிக்குள் பணிகளை முடித்துக் கொள்ளலாம்.

அதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்கே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அதன் சாதக பாதகங்கள் ஆராயப்பட்டு ஏனைய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்தத் திட்டம் தொடர்பாக சுற்றறிக்கை விரைவில் அரச பணியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பொதுமக்களைப் பாதிக்காத வரையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தமது வேலை நேர முறைமையை வகுத்துக் கொள்ள வேண்டும். நெகிழ்வுமுறை வேலைநேரத் திட்டத்தை தனியார் துறையிலும் நடைமுறைப்படுத்த இலங்கை அரசு திட்ட மிட்டுள்ளது" - என்றார். (ற-ஐ-10)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு விக்கினேஸ்வரன்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு விக்கினேஸ்வரன் கடந்த (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற றமேஸ் சுபாசினி (ஆஸ்திரேலியா), சுதர்சினி (ஆசிரியர், யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநந்தா (ஆஸ்திரேலியா), சிவஸ்ரீ (அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புமாமனும் வைஷ்ணவி, நித்திலன், பவித்திரன், ஸ்ரீராம், பூர்விக்ஹா ஆகியோரின் அன்புப் பேரனும் வீரபாகு, பார்வதி, கணேசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகம்மா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவயோகம், குணவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (29.05.2017) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26/8 (18/8), வளாகவீதி, திருநெல்வேலி.** தகவல்: **குடும்பத்தினர்.** **0213218371**

# வாழ்வாதாரத்துக்கு உதவக் கோரிக்கை

கிளிநொச்சி, மே 29
கிளிநொச்சி கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என பல்வேறு தரப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் தற்போது 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

தலா அரை ஏக்கர் காணிகளில் இந்த மக்கள் வாழ்வதால் எந்தவித வாழ்வாதார பயிர்ச் செய்கைகளையோ அல்லது ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டனர்.

இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு தொழில் வாய்ப்புக்களையோ, அல்லது வேறு பயிர் செய்கை காணிகளையோ பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-21)

# வலைத் தளத் தொழில்நுட்ப அறிமுக நிகழ்வு வவுனியாவில்



வவுனியா, மே 19
'சமூக வலைத்தளங்களினூடாக வியாபாரத்துக்கான சந்தைப்படுத்தல்' எனும் வலைத்தளத் தொழில்நுட்ப அறிமுக நிகழ்வு வவுனியாவில் 'விக்ரா' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிறைசூடி, மற்றும் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரீ.கே.ராஜலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் வளவாளர்களாக விக்ரா நிறுவனத்தின் பயிற்சியாளர்களான ஆர்.தமிழ்அளகன், எஸ்.சிவராஜா மற்றும் எஸ்.கே.எஸ்.நாசிம் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர். வவுனியா வர்த்தகர்கள், இளைஞர்கள் யுவதிகள் என பலரும் அதில் கலந்துகொண்டனர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 05 . 1944



மறைவு
27 . 05 . 2017

### திருமதி சரஸ்வதி தேவராசா

கொக்குவில் மேற்கு புதுவீதியை (நீதிராஜா) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தேவராசா 27.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பவளம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், தேவராசா (இளைப்பாறிய மின்னியலாளர் மின்சாரசபை) அவர்களின் பாசமிகு மனைவியும், புஸ்பலீலா (கனடா), இராஜகுமார் (சுவிஸ்), கிரிசாந்தி (ஜேர்மனி), ரோகினி (ஜேர்மனி), ஏகநாதன் (சுவிஸ்), இந்துமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வகுமார் (கனடா), செல்வரூபி (சுவிஸ்), முருகதாசன் (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மனி), சாந்தமலர் (சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிர்ஜா, நிவிதா, ரஷ்சானியா, ஆகாஷ், பிரகாஷ், வினோத், வினோபா, வினோஜன், ஆர்த்திகா, அஸ்வினி, அஸ்வின், ஆருஜா, அனோமிகா, சௌமியா, சௌதமன்,சர்வேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விமலாதேவி, மகேந்திரராஜா, பாலசுந்தரம், தேவராசலிங்கம், சிவயோகசிந்தாமணி, தவராசலிங்கம், தனபாலசிங்கம், கௌசலாதேவி, சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவபாக்கியம், தெய்வானைப்பிள்ளை, நாகரத்தினம் மற்றும் அன்னம்மா, அருளானந்தம், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சண்முகராசா மற்றும் வசந்தாதேவி,ஜெயராணி, விஜயலக்சுமி, விமலாதேவி, விஜயகுமாரி, யோகநாதன், சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

**021 222 5499**

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னம்மா நாகலிங்கம்

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா நாகலிங்கம் 27.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னாச்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சோமநாதர் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சிங்காரம், கிருஷ்ணமூர்த்தி, ஆறுமுகம் மற்றும் விநாயகமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் மல்லிகாதேவி (தேவி ஜேர்மனி), கணேசலிங்கம் (ஜேர்மனி), இந்திராதேவி, மகேஸ்வரலிங்கம்(சுவிஸ்), பாஸ்கரலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தனபாலசிங்கம், வினோதினி, குணசீலன், ஜெயந்தினி, விஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியும் பாதுஷன், அபிராமி, விதுஷன், நிஷங்கர், சிவசங்கர், சங்கீரனி, டிலானி, லஜிதன், சுபானி, ராஜவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஏழாலை கிழக்கு,
ஏழாலை.**

தகவல்:
**நா.பாஸ்கரலிங்கம்
(மகன்)**

# நிலத்தடி நீர் முகாமைத்துவம் தற்போது இன்றியமையாதது

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, மே 29
எமது அடுத்த சந்ததிக்குத் தூய நீரை வழங்க வேண்டும். நீரைப் பவுண் விலை கொடுத்து வாங்கும் நிலையை எட்டமுன்னர் நீரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட அக்கராயன்குளம் குடிதண்ணீர் வழங்கல் திட்ட ஆரம்ப விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அக்கராயன்குளம் ஒருகாலத்தில் கரும்பு உற்பத்தியில் கொடிகட்டிப் பறந்த பிரதேசம். கரும்பு உற்பத்தி நிறுத்தப்பட்ட பின்னர் இது ஒரு விவசாயக் கிராமமாக மாறியது என்று அறிகின்றேன். அக்கராயன்குளத்தின் நீரைப் பயன்படுத்த பல நூறு ஏக்கர் நிலபரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது. இங்குள்ள வீதிகள் சீரமைக்கப்பட வேண்டியுள்ளமையை நான் இங்கு வரும் போது அவதானித்தேன். எதிர்காலத்தில் கிடைக்கும் நிதிகளில் அவை சீர் செய்யப்படும்.
உலகில் தற்போது குடிதண்ணீர் பிரச்சினை பூதாகாரமாகி வருகின்றது. குடிதண்ணீர் நிலைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றி வளர்ச்சியுற்ற நாடுகள் தற்போது சிந்திக்கின்றன. வளர்முக நாடுகளுக்குத் தேவைகள் அதிகமாக உள்ளதால் அவை இது பற்றி அதிகம் சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது.
ஒரு தோடம்பழத்தை உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட 50லீற்றர் தண்ணீர் செலவு செய்யப்படுகின்றது. ஒரு சோடி செருப்பை உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட ஆயிரத்து 200லீற்றர் தண்ணீரை செலவு செய்ய வேண்டியுள்ளது என அறிகின்றேன். நாம் இரு உற்பத்திகளையுந் தொடர்ந்து உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.
மகா பராக்கிரமபாகு ஆற்று நீர் ஒரு சொட்டும் கடலைச் சென்றடைய விடலாகாது என்று கூறி குளங்கள் அமைத்தான். நாங்கள் இங்கு விழும் மழை நீர் வீணாகக் கடலில் சேர்வதை தடுக்க வேண்டும். நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்க முன்வர வேண்டும்.
நிலத்தடி நீரில் மாசுக்கள் சேராதிருக்க கிருமிநாசினி, உரப்பாவனை ஆகியவற்றை முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டும். இவற்றை நாம் உதாசீனம் செய்தால் எமது பிரதேசத்தை நாமே நீரற்ற பிரதேசமாக மாற்றியவர்களாக ஆவோம் என்பது திண்ணம். குடிதண்ணீர் பாவனையில் சிக்கனம் என்பது இன்றியமையாதது. இந்தப் பகுதியில் கிடைக்கும் ஒவ்வொரு சொட்டு நீரும் குளங்களில் சேமிக்கப்பட வேண்டும். நிலத்தடி நீர் முகாமை செய்யப்பட வேண்டும். எம்மிடையே உள்ள நீர்வளத்தை முறையாக முகாமைத்துவம் செய்து எமது எதிர்கால சந்ததிகளை சிக்கலற்ற நிலையில் வாழ அனுமதிப்போம். என்றார். (ற-21)

# தமிழர்களைத் தண்டிக்கவே பயங்கரவாத தடைச் சட்டம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 29
தமிழர்களைத் தொடர்ந்து தண்டிப்பதற்காகவே அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தயாரிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு. பசுபதிப் பிள்ளை.
கிளிநொச்சி, அக்கராயனில் கரைச்சிப் பிரதேச சபை அமைத்துள்ள குடி தண்ணீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தமிழர்களை சிறு காரணங்கள் கூட இன்றி கைது செய்யப்படக்கூடிய வகையில் காணப்படும் பயங்கரவாத தடைச் சட்டம் எப்போது வேண்டுமானாலும் எமது மக்கள் மீது பிரயோகிக்கப்படலாம். தற்போது தடுப்பிலிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இவ்வாறு காரணங்கள் இன்றிக் கைது செய்யப்பட்டவர்கள்தான். நாம் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். அரசு எமது மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிட முனைகின்றது. இராணுவத்தினர் முழுமையாக அகற்றப்படாததால் பல பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்- என்றார். (ற-21)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி ஞானம்மா மரியராசா
உதிப்பு 23.02.1943
உதிர்வு 29.04.2017

நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறந்திடுமா உம் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அன்னாரின் ஆத்மசாந்தி திருப்பலிபூஜை இன்று (29.05.2017) திங்கட்கிழமை மிருசுவில் காணிக்கை மாதா ஆலயத்தில் இடம்பெறும்.

தவசிகுளம் கொடிகாமம். பிள்ளைகள், மருமக்கள்.

# தென்பகுதி மக்களுக்கு உதவிப்பொருள் சேகரிப்பு

மட்டக்களப்பு, மே29
வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குமாறு மட்டக்களப்பு ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
தமது தொண்டர்கள் ஏறாவூர் நகரெங்குமுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுவீடாகச் சென்று நிவாரண சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என செயற்பாட்டாளரும் சமூக சேவையாளருமான எம்.எஸ்.எம். நளீர் தெரிவித்தார்.
இந்த நிவாரண சேகரிப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு இடம்பெறும் என்றும் பொதுமக்கள் தமது நிவாரண உதவிகளை வழங்குமாறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ம-46)

மரண அறிவித்தல்

தோற்றம்
19
05
1953



மறைவு
26
05
2017

சதானந்தன் வசுந்தராதேவி

யாழ்ப்பாணம்,இணுவிலைப் பிறப்பிடமாகவும் மன்னார் மூர்வீதியை வதிவிடமாகவும் கொண்ட சதானந்தன் வசுந்தராதேவி அவர்கள் 26.05.2017 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சதானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்,பாக்கியம் அவர்களின் அன்பு மகளும் நாகலிங்கம் நாகரத்தினம் அவர்களின் பாசமிகு மருமகளும்,அமரர் பாஸ்கராதேவி, அமரர்.யோகேஸ்வரி, திரு.இளலிங்கம் (அவுஸ்திரேலியா), அமரர்.சிவலிங்கம், உமாதேவி, கணேஸ்வரி, திலகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்.கந்தசாமி, அமரர்.சுப்பிரமணியம், விஜயலஷ்மி (அவுஸ்திரேலியா), நாகேஸ்வரி, ஜோசப்,கஜேந்திரன்,சிறிதரன் ஆகியோரின் பாசமிகு மைந்துனியும் ஆவார்.
அன்னார் சுரேஸ்குமார் (லண்டன்), ரமேஸ்குமார் (லண்டன்), தர்சினி (லண்டன்), அமரர்.சுதாகர், பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,சரோஜினி,காயத்திரி,சுகுமார்,கௌசல்யா ஆகியாரின் பாசமிகு மாமியாரும்,அகிலாஸ்,அபிநயா,அஸ்வியா,கஜானனன்,பிரவீந்த், ஸப்தனா,லௌகீதன்,கஸ்வினி,ரித்திக்கா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை ( 29.05.2017 ) அன்று பிற்பகல் 1.00 மணிக்கு மூர் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

130/14 Moor Street,Iron Theatre Road,Mannar.
Tel : 076 6790 976 ( Ramesh - Sri Lanka ),
0044 782808 8975 ( Suresh - UK ),0044 741350 5020 ( Baskaran - UK )

தகவல் : குடும்பத்தினர்

கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் மகோற்சவ பெருவிழாவின் தேர்த்திருவிழா உபயகாரரும். ஆலய உபதலைவரின்
**திரு சி.திருலிங்கநாதனின்**
அன்பு மாமியாரும் ஆகிய புங்குடுதீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
**திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்**
அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல் பெருமானை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

புங்குடுதீவு - 12

ஆலய தர்மகர்த்தாவும், நிர்வாக சபையினரும்
புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானம்.

மூன்றாம் வருட நினைவலைகள்



உதிப்பு 22.06.1936
உதிர்வு 01.06.2014

அமரர் வல்லிபுரம் குலசேகரம்

திதி: சதுர்த்தி
(29.05.2017)

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
இன்றுடன் மூன்றாண்டுகள் முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு மறையாது அப்பா!
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி - கமலாதேவி
மகள் - விஜேனாஜா
மருமகன் - செல்வகுமார்
பேர்த்தி - அதுமிகா
பிரான்ஸ்

## இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

கொழும்பு, மே 29
வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க, அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. வெளிநாடுகளிடம் உதவி கோரப்பட்டுள்ளது.
இவ்வாறு உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற அமைச்சர் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இடர் மற்றும் அரசு முன்னெடுத்துள்ள மீட்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர்தெரிவித்ததாவது: நாட்டில் இடர் ஒன்று ஏற்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அரசியல் செய்திகளையே ஊடகங்கள் எதிர்பார்க்கின்றன. ஊடகதர்ம மற்ற செய:ல் இது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாகனங்களின் தேவை தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அது அமைச்சர்களுக்கானது அல்ல. அமைச்சுகளுக்கானது.
அவற்றை அமைச்சர்கள் பயன்படுத்துவார்கள். அவர்களின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் அந்த வாகனங்கள் அமைச்சில்இருக்கும். இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, இந்தியாவிலிருந்து இரண்டு கப்பல்களில் உதவிப் பொருள்கள் வருகின்றன. நாம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும் என்று நம்புகின்றோம். அவற்றை மக்களுக்கு வழங்குவோம். உதவிகள் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. தனியார் வானூர்திச் சேவை நிறுவனங்களிடம் அவர்களிடம் இருக்கும் உலங்கு வானூர்திகளைத் தந்துதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். அரசு தொடர்ச்சியாக மக்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.என்றார். (ற-10)

# இடர் ஏற்பட்ட பிரதேசங்களில் தொற்று நோய் அபாயம்

### தடுக்கும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு தலைமை அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்பு



கொழும்பு, மே 29
சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட இடரால் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதனைத் தடுப்பதற்கான முன் னாயத்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறுதலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க பணித்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை இடர் நிலமை குறித்து, அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்கள் நோய்கள் தொற்றுவதைத் தடுக்க வேண்டும்.
இரத்தினபுரி போன்ற சில பிரதேசங்களில் இவ்வாறு இடர் ஏற்படும் என்பது குறித்து முன்னறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை.
முன்னறிவித்தல் விடுத்திருந்தால், சில பிரதேசங்களில் எற்பட்ட பாதிப்புக்களைத் தடுத்திருக்க முடியும்.
பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருள் வழங்குதல், இடரில் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து மதிப்பிடுதல் போன்றவற்றைக் குறுகிய காலத்தில் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அரசு முடிந்தளவு அவசரமாக இந்த நிலமைக்கு முகங்கொடுத்து, அனைத்து விதமான சவால்களில் இருந்தும் வெற்றியடையும்" என்றார். (ஐ-10)

## இரத்தினபுரி பாடசாலைகள் இன்று மூடப்படும்

இரத்தினபுரி மற்றும் நிவித்திகல கல்வி வலயத்துக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் இன்று மூடப்படும் என்று அந்த மாகாணத்தின் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, பல்வேறு பகுதிகளில் வெள்ள இடர் மற்றும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அதனால் பலர் சாவைடந்ததுடன், பலர் காணாமலும் போயுள்ளனர். மாணவர்களின் நலன்கருதி இடர் ஏற்பட்டுள்ள பகுதியில் உள்ள வலயங்களின் பாடசாலைகள் இன்று இயங்காது எனவும் அமைச்சு மேலும் தெரிவித்தது. (ஐ-10)

## அழகியல் கண்காட்சியும் யோகர் சுவாமி சிலை திறப்பும்

யாழ்ப்பாணம், மே 28
நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அழகியல் கண்காட்சியும், யோகர்சுவாமி திருவுருவச் சிலை திரைநீக்கமும் இன்று திங்கட்கிழமை வித்தியாலய அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அழகியல் கண்காட்சிக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய அழகியல் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தனும், யோகர்சுவாமி சிலை திறப்பு விழாவில் கலைமாமணி துரைசிங்கம் குமரநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் ஆசியுரையை வித்தியாலய பழைய மாணவர் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமியும், வாழ்த்துரையை வடக்கு மாகாண கால்நடை விவசாய கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் வழங்கவுள்ளனர். ஒ(ற-10)

**தேவை**
வர்த்தக நிலையத்தில் கணக்காய்வு செய்வதில் அனுபவம் உள்ள ஒருவரும் கணினி அறிவுடைய இரு பெண் எழுதுநர்களும் தேவை. தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்.
077 225 0149

**Home Visitong Class**
Medical faculty (mega merit) v.k.s. manokaran (O/L- 9A plus holder) - district first உங்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். Grade 5-O/L, A/L Subjects A/L Biology, Physics, Chemistry. யாழ். கொழும்பு மற்றும் உலகம் எங்கும்.
071 314 1834, 077 084 4542



World Class British Degree @ICBT Jaffna Campus
Apply now for New Intake 2017
Accredited by EQAA European Quality Assurance Agency
ICBT HND QUANTITY SURVEYING
» Entry Qualifications
• G.C.E. A/L or Equivalent
• Certificate in related field
» Duration: 2 Years
★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)
Why Study ICBT ?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes
BIRMINGHAM CITY University
BSc (Hons) Quantity Surveying
RICS Accredited
» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.
UGC RECOGNIZED
Week End Part Time Classes
» Duration: 1 Year
Progression Route to RICS BSc + APC ➔ MRICS DEGREE COMPLETION IN SRI LANKA
0770 746 553 | 0769 289 784
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

**வருடாந்த மகோற்சவம் - 2017**
நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
வருடாந்த மகோற்சவம்
கொடியேற்றம் - 30.05.2017 செவ்வாய்க்கிழமை
தேர் - 08.06.2017 வியாழக்கிழமை
தீர்த்தம் - 09.06.2017 வெள்ளிக்கிழமை
மகோற்சவ காலங்களில் தினமும் இரவு 7.00 மணிக்கு
சிவத்தமிழ் வித்தகர்
திரு. சிவமகாலிங்கம்
அவர்களால் தெய்வீக சொற்பொழிவுகள் நடைபெற உள்ளது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு:
இராஜகோபுர திருப்பணி ஆரம்பமாக உள்ளதால் நிதி அன்பளிப்பு செய்பவர்கள் திருப்பணிச்சபைகளிடம் அன்பளிப்பு வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும். அன்னதான சபையினருடன் அன்னதான அன்பளிப்புக்களை வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.
27.05.2017 ஆலயபரிபாலனசபை.


**யாழ்ப்பாணம், உரும்பிராய் வடக்கில் காணி விற்பனைக்கு**
உரும்பிராய் வடக்கில் 9 நிலப்பரப்புக்கும் மற்றும் 14 நிலப்பரப்புக்கும் மேற்பட்ட இரண்டு காணிகள் விற்பனைக்குண்டு.வாங்க ஆர்வம் உள்ளவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள எங்களின் சட்டத்தரணிகளைத் தொடர்பு கொள்ளவும்.
நீலகண்டன் & நீலகண்டன்
சட்டத்தரணிகள்
எம் & என் கட்டடம் (5ஆம் மாடி)
இல 2. டீல் வீதி.
கொழும்பு - 03
தொ.பேசி :-011 237 1100
தொ.நகல் :- 011 237 1111
மின்னஞ்சல் :-
neela@mnlaw.lk

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உயர் தொழில் புரியும் செவ்வாய்க்குற்றமற்ற மகம் நட்சத்திர மணமகனுக்கு 1992 இற்கு முன் பிறந்த அழகிய படித்த மணமகள் தேவை.
தொடர்பு - 077 248 9441

**SHANA AUTO TRADERS**



* சகல விதமான வாகனங்களும் விற்பனைக்கு உண்டு.
* உங்களுடைய பழைய வாகனத்திற்கு புதிய வாகனம் மாற்றிக் கொடுக்கப்படும்.
இல:-428, கண்டி வீதி, மூன்றுமுறிப்பு, வவுனியா.
T.P:- 077 571 7676



சிட்னி நகரின் விவித் திருவிழா தற்போது அங்கு மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. சிட்னியின் ஹார்பர் பாலம் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் அழகிய மின் விளக்குகளால் ஒளியூட்டப்பட்டுள்ளன. இது தொடர்பிலான ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ளன. (ம)

# இந்தியா பாகிஸ்தான் இடையே சமரசம் செய்ய ஐ.நா. முயற்சி

இந்தியா, பாகிஸ்தான் இடையே சமரசப் பேச்சு நடத்தத் தயார் என்று ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் தெரிவித்தது.

தெற்காசியாவில் இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவுகிறது.

"பதற்றத்தைத் தணிக்க இரு நாடுகளுக்கு இடையேயும் சமரசப் பேச்சு நடத்த ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளது. ஆனால் அதற்கு இரு நாடுகளும் ஒப்புக் கொள்ள வேண்டும். அப்போது தான் பேச்சைத் தொடங்க முடியும்" என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ம)



# ஆப்கானில் தாக்குதல் 18 பேர் உயிரிழப்பு

காபுல், மே 29

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கார் குண்டுத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் கிழக்கு பகுதியில் உள்ள கோஸ்ட் மாகாணத்தின் கால்பந்து மைதானத்தின் அருகே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. 18 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் பலம் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

இதற்குப் பதிலடியாக பட்கிஸ் மாகாணம் காடிஸ் மாவட்டத்தில் ஆயுததாரிகள் பதுங்கியிருந்த இடத்தைச் சுற்றிவளைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 22 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

ஆயுததாரிகள் நடத்திய பதில் தாக்குதலில் 6 இராணுவச் சிப்பாய்களும் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன.

"இந்தத் தொடர் அசம்பாவிதங்களை அடுத்து தலைநகர் காபூலில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது" என்று ஆப்கானிஸ்தான் இராணுவம் தெரிவித்தது. (ம)

# மேற்கு மோசூலில் தொடர் தாக்குதல்

## அதி விரைவாக வெளியேறுமாறு மக்களைப் பணித்தது இராணுவம்



பக்தாத், மே 29

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூலின் மேற்குப் பகுதியின் மீட்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அங்குள்ள மக்களை விரைவாக பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு ஈராக் இராணுவம் எச்சரித்துள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கடந்த ஜனவரியில் மீட்கப்பட்டது. மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வந்தது. பெரும்பாலான இடங்கள் (மேற்கு மோசூலின் 90 சதவீதமானவை) இராணுவத் தரப்பால் மீட்கப்பட்டுள்ளன. மிகக் குறுகிய பகுதிக்குள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் குறித்த பகுதிக்குள் இருக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இராணுவம் அறிவுறுத்தியது.

### ஐ.நா. கவலை

மேற்கு மோசூலில் ஐ.எஸ். அமைப்பினரின் பகுதிக்குள் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு இராணுவம் அறிவுறுத்தியுள்ள போதிலும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு அவர்களை மனிதக் கேடயங்களாக சிறையிட்டுள்ளதால் மக்களின் நிலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்தது.

### பக்தாதி எங்கே?

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதி மேற்கு மோசூலிலேயே உள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டதில் இருந்து (கடந்த 9 மாதகாலமாக) மேற்கு மோசூலை ஈராக் இராணுவம் கடுமையாகக் கண்காணித்து வருகிறது. இதனால் அவர் இன்னும் சில வாரங்களில் பிடி படுவார் என்றும் கருதப்படுகிறது. (ம)



# இளஞ்சிவப்பு அன்னாசி

உலகின் மிகப் பிரபலமான பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளர்களான டெல் மான்ட்டே நிறுவனத்தினர், மரபணு மாற்றங்களை ஏற்படுத்தி இளஞ்சிவப்பு அன்னாசிப் பழத்தை உருவாக்கியுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களாக மரபணு மாற்றத்தின் மூலம் இளஞ்சிவப்பு அன்னாசிப் பழத்தை உருவாக்கும் முயற்சியின் மூலம் இந்த வெற்றி கிடைத்துள்ளது. நிறம் மாற்றப்பட்ட அன்னாசிப் பழத்தைச் சாப்பிடுவது நல்லதா, கெட்டதா என்று சர்ச்சைகள் எழுந்தன. எனினும் இது ஆரோக்கியமானது என்று தெரிவித்து அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

வழக்கமான அன்னாசிப் பழத்தைவிட இளஞ்சிவப்பு அன்னாசிப் பழத்தில் இனிப்பும் சாறும் அதிகமாக இருக்கிறது என்று டென் மான்ட்டே நிறுவனம் தெரிவித்தது. (ம)



# புறா மூலம் போதை மாத்திரை கடத்தல் முறியடிப்பு

பக்தாத், மே 29

ஈராக்கில் இருந்து குவைத்துக்கு புறா மூலம் போதை மாத்திரைகள் கடத்த மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

ஈராக்கில் இருந்து குவைத்துக்கு புறாக்கள் மூலம் போதை மாத்திரைகள் கடத்தப்படுகின்றன என்று கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட திடீர் நடவடிக்கையில் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட புறா பிடிபட்டதுடன் போதை மாத்திரைகள் அடங்கிய பை ஒன்றும் மீட்கப்பட்டது.

"புறாவின் முதுகில் பை ஒன்றை இணைத்து இந்தக் கடத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பையில் 178 போதை மாத்திரைகள் இருந்தன. அத்தனையும் தடை செய்யப்பட்ட மாத்திரைகள். இந்தப் புறா தற்போது எமது கண்காணிப்பில் உள்ளது. இதை வைத்து கடத்தல் கும்பல் தொடர்பான விடயங்களை அறியமுடியும்" என்று சுங்கத்திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என பன்னாட்டு உடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)





# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

# ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்

# புனராவர்த்தன நவ குண்டபக

# சிறப்பிதழ் -



**மஹா கும்**
**29.05.201**
**காலை 9.30 -**

## கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை பகுதியில் வீற்றிருந்து அருள் புரியும் அம்பலவாண் விக்னேஸ்வரப் பெருமான் ஆலயம் அழகிய ராஜகோபுரத்துடன் புனர் நிர்மாணம் செய்யப் பெற்று மஹாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மக்கள் மனங்களில் தெய்வீக அருள் பொலிவதை இட்டு மகிழ்ச்சியாக அமைகின்றது. ஆலய நித்திய பூஜா வேந்தரர்கள், தர்மகர்த்தாக்கள், திருப்பணி சபையினர் உள்ளிட்ட அனைவருமே மனம் சலிக்காமல் உற்சாகத்துடனும் இப்பணியை குறுகியகால இடைவெளியில் நிறைவு செய்தது விநாயகருடைய திருவருளாகும்.

இந்த அனுபவம் நிறைந்த சிற்பாசாரியார் குழுவினரும், வர்ணக் கலைஞர்களும் இரவு பகல் பாராது தமது கடமைகளை செவ்வனே நிறைவு செய்து இருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். என் குருநாதர் சிவஸ்ரீதானு மகாதேவக்குருக்களின் ஆசிகள் கிடைப்பதன் மூலமே பிரதிஷ்டா பிரதமஷ் குருவாக இருந்து செய்கின்ற பாக்கியம் கிட்டியுள்ளமை எனக்கு மகிழ்ச்சியாக அமைகின்றது. அனைத்து சிவாச்சாரியார்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இன்பமே சூழ்க வாழ்க வளமுடன்**
**சிவ ஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்.**

## அருளாசிச் செய்தி



விநாயகர் அடியார்களே, வண்ணார் பண்ணையில் காட்டுத்துறை பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அம்பலவாண விநாயகப்பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றோம். பல ஆலயங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக சிறிய ஆலயமாக இருந்த கோயில் இன்று பல வளர்ச்சிகளைக் கண்டு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகம் இன்று இவ் ஆலயத்தில் நடைபெறுவது ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகவும், விநாயகர் வழிபாடு நம் சமயத்தோடு ஏனைய சமயத்தவர்களும் வழிபடும் தெய்வமாக விளங்கி எழிமையான வழிபாட்டைத் தன்னுடன் கொண்ட விநாயகர் வேண்டுவோர் வேண்டுவதை கொடுக்கின்றவராக வீற்றிருக்கின்றார். எல்லோரும் விநாயகர் வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இவ்வாலய அனைத்து அடியார்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் ஊர் மக்களுக்கும் இறை இன்பம் கிடைப்பதாக

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஆதீன குரு முதல்வர், இரண்டாவது குருமகாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.**


## யாழ்மாநகர சபை ஆணையாளரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் மாநகரின் ஓடை ஒழுங்கையில் இன்று குடமுழுக்குக் கண்டு மகாகும்பாபிஷேகம் காணுகின்ற யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ் வரப்பிள்ளையார் கோயிலானது ஈழமணித் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்துள்ள கோயில் களுக்கு உண்டான அனைத்துச் சிறப்புக்களையும் பெற்ற ஆலயமாக விளங்குகின்றது. ஆன்மாவை லயப்படுத்துகின்ற ஆலய வழிபாட்டில் தன்னகத்தே கொண்டிருக்கக் கூடிய இறைவனுக் கான பல்வேறுபட்ட கிரியைகள் நடைபெறுவது வழமானதொன்றே. அப்படியான நிலையிலே இந்த ஆலயமும் இன்று மகாகும்பாபிஷேகம் காண்பதும் அதன் நிறைவில் விநாயகப்பெருமானின் நல்லாசியை பெறவிருப்பதும் நாம் அனைவரும் செய்து கொண்ட பெரும்பாக்கியமேயாகும். காட்டுத்துறைப் பிள்ளையார் எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இக்கோயிலை புனருத்தாரனம் செய்வதில் ஊர் கூடி தேர் இழுத்துள்ளார்கள் என்றே சொல்லலாம். மகத்தான விநாயகப் பெருமானின் திருவருட்பொலிவு திக்கெட்டும் பரவிநிற்க பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் இம் மகா கும்பாபிஷேகத்தை நடாத்தும் இவ்வாலய பரிபாலன சபையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையாரின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொ.வாகீசன் - ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச்செய்தி



"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" நல்லூர் பிரதேசசெயலக பிரிவில் வண்ணார் பண்ணையில் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையார் ஆலயமானது முழுமையாக புனர்நிர்மா ணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள் கிடைத்தமையினையிட்டு பிரதேச செயலர் என்ற ரீதியில் பெருமகிழ்வடைகின்றேன். 2017 வைகாசி மாதம் 29 ஆம் திகதி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுப் பக்தர்கள் வருகை தந்து கும்பாபிஷேக தரிசனம் செய்து பிள்ளையாரின் திருவருட்கடாட் சத்திற்கு ஆளாகி சகல சௌபாக்கியங்களை யும் பெற்று இன்புற்று வாழ எல்லாம்வல்ல விக்னேஸ்வரப் பெருமான் அருள்பாலிக்க வாழ்த்தி வணங்குகிறேன்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி**
**பிரதேசசெயலாளர்,**
**பிரதேசசெயலகம், நல்லூர்.**

## காட்டுத்துறைப் பிள்ளையார் காட்டும் கருணை

காட்டுத்துறை பிரிவிலுறை காட்டுத்துறை பிள்ளையார்
காட்டும் கருணையினால் கல்விமான்கள் கடைக்காரர்
நாட்டமிகு தொழிலாளர் நியாயவாதியரை உருவாக்கி
ஊட்டமுற அருளளித்து உயர்வுற வைக்கின்றார்

காட்டுத்துறை கணபதியை கரங்குவித்து வணங்குவோர்
வீட்டுத்துயர் விலகும் வேதனைகள் வாடிவிடும்
நாட்டமுடன் நாயகனை நாளும் தொழுதுநாம்
நாட்டிடுவோம் நல்லமைதி ஈட்டிடுவோம் நற்பேறு

வானுயர் கோபுரத்துள் விநாயகரை வரவழைக்க
தேனாக மனமுவந்து திரவியங்கள் தந்தோரும்
கோணாது கங்குல்பகல் கோவிலுக்காய் உழைத்தோரும்
தூணாக தலைநிமிர்ந்து துயரின்றி வாழ்ந்திடுவர்

உதித்த புதுப்பொலிவு மதியாய் ஒளிபரப்ப
முதியோரும் மற்றோரும் முன்வந்து உதவிதரப்
பதிவாகுமித் திருநாளில் பக்திமல ரெடுத்து
துதிப்போம் கணபதியை தேறுதல் பெறுவதற்கு

**விநாயக அடியார்கள்**

## வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண

திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் விநாயகப் பெருமானுக்குப் பல ஆலயங்கள் உள்ளன. இவ்வகையில் வண்ணார்பண்ணையில் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் ஏறக்குறைய நூற்றைம்பது வருட காலத்துக்குமேல் பழைமை வாய்ந்ததாகும். காட்டுத்துறை என வழங்கப்படும் பெயர் இவ்வாலயம் எழுந்த காலத்தில் இயற்கை வளத்தைக் கொண்டதாக இப்பிரதேசம் அமைந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது. தெய்வங்களின் உறைவிடம் அமைதியாகவும் இயற்கை சூழல் அமைந்ததாகவும் இருக்க வேண்டும் என்பது சாஸ்திர விதிமுறையாகும்.

விநாயகப் பெருமான் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட முன்னோர்களால குலதெய்வமாக வைத்து வழிபடும் நோக்கில் எழுந்ததே இவ்வாலயமாகும். வண்ணை வடமேற்கில் ஓடை ஒழுங்கையில் அமைந்துள்ள இவ்வாலயம் பொன்னிறப் பணிக்கனோடைப் பிள்ளையார் கோயில் என்றும், ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் என்றும், காட்டுத்துறை ஆனந்த விநாயகக் கோயில் என்றும் பல பெயர்களைப் பெற்றுச் சிறப்படைந்தது. கி.பி.1892 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரச அதிபரது கோயில் பற்றிய குறிப்பு உள்ளது. இங்கு காட்டுத்துறை பிள்ளையார் கோயில் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயிலின் ஆரம்பம் கி.பி.1856ஆம் வருடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மூத்ததம்பி சோமநாதர் என்பவரால் ஓலைகள் கற்கள் கொண்டு ஆரம்பத்தில் இக்கோயில் அமைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இவ்வாலயத்தின் முகாமையாளராக சங்கரப்பிள்ளை சரவணமுத்து என்பவரது பெயர் தரப்பட்டுள்ளது. இருநேரப் பூசைகள் நடைபெறும் ஆலயமாகப் பரிணமித்து இன்றைய நிலையில் கொடியேற்றத்துடன் கூடிய மஹோற்சவம் நிகழும் ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது.

திரு மூத்ததம்பி சோமலிங்கம் என்பவர் விநாயகப் பெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தியினாலும் இக்கோயிலின் வளர்ச்சியில் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகவும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையாருக்குரிய இக்கோயிலைப் பெரிதாகக் கட்டி முடித்து எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரரானார். இவரது இத்திருக்கோயிற் பணிபற்றி இக்கோயிலோடு தொடர்புடைய உறுதி மூலம் அறியலாம்.

ஆலய முகாமையாளராகவிருந்த இவருக்குப் பின் இக்கோயிலின் முகாமையாளராக இக்கோயிலைப் பரிபாலித்தவர்கள் நாவற்குழியூர் திரு.சோமலிங்கம் என்பவரும் கொக்குவில் திரு.சின்னையா என்பவர்களுமாவார். தமது மூதாதையர்கள் போலவே விநாயகர் மீது கொண்ட அளவற்ற பக்தியினால் இக்கோயில் வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டினர்.

இம்மரபுக்கு அமைவாக சிறந்ததொரு திருக்கோயிற் திருத்தொண்டைக் கட்டிக் காக்கும் பெரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் நாவற்குழியூர் திரு.சோமலிங்கம் சடாச்சரம் அவர்களும் திரு.சின்னையா அவர்களுமாவார். இவர்களது திருப்பணிக்கைங்கரியத்தினால் கோயில் பெருப்பிக்கப்பட்டு விமானம், ஸ்தூபி, வெளிமண்டபம் நிர்மாணிக்கப்பட்டு இக்கோயிலின் மஹா கும்பாபிஷேகம் 1953 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. இந்து சாதனம் என்ற பத்திரிகை இந்த நிகழ்வை செய்தியாக வெளியிட்டமை ஓர் அரிய வரலாற்றுப் பதிவாகும். 1953 ஆம் ஆண்டு இக்கோயில் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். காலப்போக்கில் 1986ஆம் ஆண்டு இக்கோயிலில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கர்ப்பக்கிரகம் புனரமைக்கப்பட்டு விமானம் வர... புதிதாக அமைக்கப்பட்டது.

திருப்பணிகள் நடைபெறும் காலத்தில் ஆல... திரு.சி.சரவணமுத்துவின் மறைவையடுத்து ... தந்தையின் வழியில் அவர் விட்டுச் சென்ற ... இத்திருப்பணிகள் நிறைவேறியமையையடுத்... மகாகும்பாபிஷேகம் 24.08.1986 அன்று சிறப்பாக...

மஹாகும்பாபிஷேகம் நிறைவுற்றதைத் ... துவஜாரோகணாதி மஹோற்சவம் நிகழவே... அதற்கான திருப்பணிகளைத் தமது தள்ளாத ... மானது திருவருளுக்குப் பாத்திரரானார். ஆரம்ப... கும் வேலை ஆரம்பமானது. திரு.சடாச்சரத்தி... அவர்களும் தந்தையின் வழியில் திருக்கோயிற் ... இதன் பயனாக சண்டேஸ்சுவரர் பைரவர் ஆகி... 01.07.1988 அன்று நடைபெற்றது. இவ்வாலயத்... 03.07.1988 அன்று நிகழ்ந்தது. தேர்த்திருவிழா... இவ்வரிய நிகழ்வைக் குறிக்குமுகமாக இவ்வா... யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரி... ப.கோபாலகிருஷ்ணன் அவர்கள் திரு.சடாச்சரம் ... இவ்வரலாற்று நூலை உருவாக்கி வெளியிட்ட... தக்க அம்சமாகும். இவ்வாலயத்தில் எழுந்தருளி... விக்கரகம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட... கலைநுட்பமும் இவ்விக்கிரகத்தில் சிறந்து விளங்... பஞ்சமுக விநாயகர் விக்கிரகமும் இவ்வாலயத்தி... மேலும் இவ்வாலயத்தில் விநாயகப் பெருமானுக்... கப்பட்டு அதற்கான தேர் நிலையமும் அமைக்கப்ப...

இவ்வாலயத்தில் தமது முன்னோரைத் தொ... பணியாற்றி ஆலயத்தை வளர்ச்சிப்பாதையில் இ... தி.இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களது பங்கு... குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதாகும். அவர... வகையில் அவரது குடும்பத்தாரின் சார்பில் ... பெருமானுக்கு பக்திபூர்வமாக அர்ப்பணிக்கப்பட்... கேற்ப ஒரு தேர் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது...

இவ்வாலயத்தில் அறங்காவலர் திரு ஸ்ரீநிவ... திருப்பணிகள் நிறைவேறி 2001 ஆம் ஆண்டு ... நடைபெற்றது. அமரர் பிரம்மஸ்ரீ இரத்தின சபாபதி... புதல்வர் பிரம்மஸ்ரீ இ.சந்தானகோபாலசர்மா ஆ... ஏற்று நீண்டகாலம் ஆலய வளர்ச்சிக்கு அற... அனுசரணையாக அவரது இரு சகோதரர்களு... இணைந்து செயற்பட்டனர். இவ்வாலய இறைபண... இணைந்துள்ளார்.

இவ்வாலயத்தின் முகாமையாளராக ...

## வாழ்த்துச் செய்தி

வரலாற்றில் தடம் பதித்த வட புலத்தில், வண்ணார் பண்ணையிலே சுற்றம் சூழவுள்ளோர், குற்றமற குறைகளைந்து வாழ்ந்திடவே கோயில் கொண்ட எம்பெருமான் காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையாரின் கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கான சிறப்பிதழில் வாழ்த்துவதுடன் ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்த இந்த வரப்பிரசாதத்துக்கு முதற்கண் என் மனமார்ந்த நன்றிகள்.

வினைதீர்க்கும் விநாயகப் பெருமான், என் சிந்தையிலே எப்போதும் கோயில் கொண்ட வகையிலேயே இறையவனைப் போற்றித் துதிக்க நான் பேறுபெற்றுள்ளேன். இவ்வாறான அருள் கொண்ட இறையவனின் கும்பாபிஷேக வைபவம், வையகம் போற்றும் வண்ணம் சிறப்புற நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உமாபதியே உலகம் என்று ஒரு சுற்றில் வலம் வந்து வணங்கி, அன்னையவளின் மேன்மையையும் அன்பின் தத்துவத்தையும் அகிலமெல்லாம் அறிந்திடவே அற்புதம் படைத்தவன் இறைவன் விநாயகப் பெருமான்! சங்கத் தமிழ் மூன்றையும் பொங்கும் மகிழ்வுடனே துதிப்போர்க்கு வரமருளும் துங்கக்கரிமுகத்தவன் எங்கள் விக்கினேஸ்வரன்! அங்கம் சிலிர்த்திடும் அவன் எண்ணம் கொண்டால் இவ்வாறு எங்கும் வியாபித்த எங்கள் விநாயகன். இங்கே வண்ணையிலே அருள்பாலித்திருப்பது இம் மண் பெற்ற பெரும்பேறே!

விக்கினங்கள் தீர்க்கும் இந்த விக்கினேஸ்வரப் பிள்ளையாரின் கடைக்கண் பார்வையிலே சுற்றம் சூழ்ந்த மக்கள், சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று, சகல சித்திகளையும் பெற்று மனநிறைவுடனும் தன வளமுடனும் சுற்றம் சூழ வாழ எல்லாம் வல்ல காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையாரின் ஆசி வேண்டி வணங்குகின்றேன்.

**ச.மோகநாதன் ,**
**பிரதிப் பிரதம செயலாளர், நிர்வாகம்.**

## ஆலய குருமாரது ஆசியுரை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறைப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரது ஆலயத்தில் எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரத்திற்கும் எம்பெருமானின் திருவருளால் புனராவர்த்தன நவகுண்டபட்ச மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாலயத்தில் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறியுள்ளமை சிறப்பம்சமாகும். ஆலய மண்டபங்கள் பரிவார மூர்த்திகள் புதிய இராஜகோபுரம் ஆகியவை ஆலயத்திற்கு சிறப்புச்சேர்க்கின்றன. இத் திருப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஆலய உரிமையாளர்கள் பரிபாலகர்கள் ஆகியோருக்கும் திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்கள் விநாயகர் அடியார்கள் மற்றும் திருப்பணிச்சபையினர் ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக்கலைஞர்கள் ஆகிய அனைவருக்கும் இக் கும்பாபிஷேக நன்னாளில் எம்பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைத்து அனைவரும் சகல வளங்களுடனும் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சிவாச்சாரியர்களது மந்திர கிரியா விசேடத்தினால் விநாகப்பெருமானின் சாந்நித்தியம் இவ்வாலயத்தில் பரிபூரணமாக நிறைந்துள்ளமை நாம் செய்த தவப்பயனே ஆகும். அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

**பிரம்மஸ்ரீ இ. சந்தானகோபால் சர்மா**
**பிரம்மஸ்ரீ இ. கு... சாமி சர்மா**
**பிரம்மஸ்ரீ இ. பகவ...வர சர்மா**
**ஆலய குருமார்கள்.**

# ணை காட்டுத்துறை அருள்மிகு
# ஸ்வரப்பிள்ளையார் ஆலய
# பக்ஷ மஹா கும்பாபிஷேக
# – 29.05.2017



## கும்பாபிஷேகம்
## .2017 திங்கள்
## – 10.45 மணிவரை

## வாணர் விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய வரலாறு

ணம் வர்ணந்தீட்டப்பட்டது. வசந்த மண்டபம்

தில் ஆலய அறங்காவலர்களில் ஒருவராகிய யடுத்து அவரது புதல்வர் திரு.ஸ்ரீவாஸன் சென்ற திருப்பணிகளைத் தொடர்ந்தார். யையடுத்து இவ்வாலயத்தில் அஷ்டபந்தன று சிறப்பாக நடைபெற்றது.

தைத் தொடர்ந்து திரு.சடாச்சரம் அவர்கள் நிகழவேண்டுமென்ற பெருவிருப்பினால் ள்ளாத வயதிலும் அயராது ஆற்றி எம்பெரு ஆரம்பத்தில் கட்டுத் தேரொன்றினை அமைக் டாச்சரத்தின் புதல்வர் திரு.சோமலிங்ககுமார் கோயிற் திருப்பணிகளைக் கவனித்து வந்தார். ரவர் ஆகிய மூர்த்திகளுக்குரிய பிர திஷ்டை வாலயத்தில் முதன்முதலாகக் கொடி யேற்றம் திருவிழா 11.07.1988 அன்று நடை பெற்றது. இவ்வாலயத்துக்குரிய திருத்தல வரலாறு நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி டாச்சரம் அவர்களது வேண்டுகோளையேற்று ரியிட்டமை ஆலய வரலாற்றில் ஒரு குறிப்பிடத் ந்தருளியுள்ள மூலமூர்த்தியாகிய விநாயகரது கப்பட்டதாகும். தெய்வீகப் பொலிவும் சிறப்க் து விளங்குகின்றன. மஹோற்சவத்துக்கான வாலயத்தில் எழுந்தருளச் செய்யப்பட் டுள்ளது. ருமானுக்குரிய புதிய சித்திரத்தேரும் உருவாக் மைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ரைத் தொடர்ந்து நீண்டகாலமாக குருத்துவப் தையில் இட்டுச் சென்ற குருமணி பிரம்மஸ்ரீ து பங்கும் பணியும் இவ்வாலய வரலாற்றில் ம். அவரது இறைபணியைக் கௌரவிக்கும் சார்பில் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு எம் ணிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அதற் பட்டுள்ளது.

ரு ஸ்ரீநிவாஸன் அவர்களது முயற்சியினால் ஆண்டு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் ன சபாபதிக் குருக்களைத் தொடர்ந்து அவரது சர்மா ஆலயத்தின் குருத்துவப் பணியினை சிக்கு அரிய பணியாற்றியவர். அவருக்கு காதரர்களும் ஆலய குருத்துவப் பணியில் இறைபணியில் பிரம்மஸ்ரீ ந.ஸ்ரீதரசர்மாவும்

ளராக விளங்கி இறை பணியாற்றிய

திரு.சோமலிங்ககுமார் மற்றும் திரு.ஸ்ரீநிவாஸன் ஆகியோரது மறைவையடுத்து அவர்களது குடும்பத்தினராகிய திருமதி சிவகுமாரி சோமலிங்ககுமார் திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாஸன் ஆகியோர் இக் கோயிலில் முகாமையாளராகச் செயற்பட்டு வருகின்றனர். இப்பிரதேசத்தில் நிலவிய நீண்டகால அசாதாரண சூழ்நிலையால் எம் பெருமானது ஆலய திருப்பணி வேலைகள் தாமதமடைந்திருந்தன. இச்சந்தர்ப்பத்தில் திருமதி சிவகுமார் அவர்கள் எடுத்த ஆக்கபூர்வமான தீர்மானம் அனைவரினதும் பாராட்டுக்குரியதாகும். ஆலய முகாமையாளராகிய திருமதி சிவகுமாரி அவர்களது அனுசரணையில் திருப்பணி சபையொன்று அமைக்கப்பட்டு ஆலயத்தின் புனருத் தாரண பணிகளைத் தொடர தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆலய முகாமை யாளரது பிரதான அனுசரணையோடு ஆலய உபயகாரர்கள், ஊர்மக்கள் ஆகியோரது நிதியுதவி மூலம் திருப்பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப 06.07.2017 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் திருப் பணிகள் திருப்பணி சபையினரது அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாட்டால் நிறைவேறி யிருப்பது விநாயகப் பெருமானின் திருவருளேயன்றி வேறில்லை. விநாயகப் பெரு மானின் ஆலயம் புதுப்பொலிவு பெற வேண்டுமென்பதில் கொண்ட பேரார்வத்தினால் அவர்கள் வழங்கிய நிதி திருப்பணி தொடர திருப்பணிச் சபைக்குப் பெரிதும் உதவியது. இதன்வழி எம் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகியுள்ளனர். திருமதி சிவ குமாரி அவர்களது சிறந்த வழிகாட்டலினாலும் திருப்பணி சபையினரது அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டினாலும் ஆலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றது. ஆலய மண்டபப் புனருத்தாரணம், பரிவாரத் தெய்வங்களாகிய மகாலட்சுமி, சந்தான கோபாலர், முருகன் ஆகியோருக்குப் பரிவாரக் கோயில்கள் சூரியன், சந்திரன் ஆகியோருக்கான பரிவாரக் கோயில்கள் இரண்டு மணிக் கோபுரங்கள், புதிதாக கலையெழிலுடன் அமைக்கப்பட்ட மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் ஆகியவை அத்திருப்பணிக் கைங்கரியத்தின் பெறுபேறாகும். இவ்வாலயத் திருப்பணியை முன்னெடுப்பதிலும் ஆலயத்தினை சிற்ப நுட்பத்துடன் கூடிய கலைக்கோயிலாக உருவாக்குவதிலும் புதிய இராஜகோபுரத்தை நிர்மாணிப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவராகிய அராலியைச் சேர்ந்த சிற்பக்கலைஞர் திரு.தவவீரசிங்கம் அனைவரினதும் பாராட்டுக்குரியவராவார்.

ஆலய முகாமையாளர் திருமதி சிவகுமாரி சோமலிங்ககுமார் அவர்களினதும் திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாஸன் அவர்களினதும் ஆலய குருமணிகளினதும் சபையினரினதும் ஊர் மக்களினதும் உளமார்ந்த பக்திபூர்வமான வேண்டுதல்களின் பிரகாரம் எம்பெருமானின் திருவருளால் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறி இன்று (29.05.2017) எம் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிய இராஜ கோபுரத்துக்கும் புனராவர்த்தன நவகுண்டபட்ச மகா கும்பாபிஷேகம் வல்வை சிவன்தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் அவர்களது தலைமையில் ஏனைய குருமணிகளின் அனுசரணையுடன் பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. இக் கும்பாபிஷேக வைபவத்தைக் காண்பதும் புதிய அராஜகோபுரத்தைத் தரிசிக்கும் பேறு கிட்டியமையும் எம் பெருமான் விநாயகரின் திருவருளேயன்றி வேறில்லை. நாம் செய்த தவப்பயனால் இவை எமது வாழ்வில் கிட்டிய அரிய வாய்ப்பாகும். ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேக திருவருட்பேறு அனைவருக்கும் கிடைப்பதாகுக.

### ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை திருவருள் மிகு அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயம் சிறந்த முறையில் திருப்பணிகள் நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. பல சாந்தி வைபவங்கள் பூர்வாங்கமாக நடைபெற்று சிவாச்சாரியார்களின் மந்திரம், கிரியை, பாவனைகள் மூலம் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இந்த ஆலயத்தின் திருப்பணிகளுக்கும் மஹாகும்பாபிஷேக வைபவத்திற்கும் காரணகர்த்தாக்களாக விளங்கிய ஆலய தர்ம பரிபாலகர் சிவாச்சாரிய பெருமக்கள். ஆலயத்தை அழகுற புதுப்பித்து சிற்ப சாஸ்திரங்களுக்கு அமைய ஆலயத்தை அமைத்துதவிய சிற்பசாக்கியர்கள் மேலும் பாரிய கைங்கரியத்திற்கு நிதிஉதவி நல்கிய உள்நாட்டு வெளிநாட்டு தர்மவள்ளல்கள் பக்தர்கள் அனைவருக்கும் இக் கும்பாபிஷேகத்தின் பயனாக சிறப்புற வாழ ஸ்ரீவல்லவாம்பிகா சமேத அம்பலவாண விநாயகப்பெருமானின் பூரண ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
**அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் - காயத்ரீ பீடம், இணுவில், சுன்னாகம்.**

### ஆசிச் செய்தி

எங்கும் நிறைந்திலங்கும் பரம்பொருள் உருவத்திருமேனி தாங்கி ஆன்மாக்களை ஆட்கொண்டு அருள் வழங்கும் இடம் கோவில். அந்த வகையில் வண்ணைக்காட்டுத்துறை பதியில் விநாயகப் பெருமான் அம்பலவாண விக்னேஸ்வரர் எனும் நாமம் தாங்கி பன்னெடும் காலமாக அருளாட்சி புரிந்து வருகின்றான். அந்த விநாயகரின் ஆலயத்தின் பேரழகும் குடமுழுக்கும் கண்டு மனம் நிறைவடைகின்றது. ஆலயத்தை புனரமைத்து வர்ணம் தீட்டி அழகிய இராஜகோபுரமும் அமைத்து நவீனப்படுத்திய பெருமை திருப்பணிச்சபையினருக்குரியது. அதற்கு வழியமைத்துக்கொடுத்து ஆதரவு நல்கிய தர்மகர்த்தாக்கள் போற்றுவதற்குரியவர்கள். இதற்கெல்லாம் துணைநிற்க விநாயகப்பெருமானை எப்போதும் மனதிருத்தி முப்போதும் திருமேனி தீண்டி எண்ணமும் செயலும் பிள்ளையாராகவே இறைபணியாற்றும் ஆலய பரம்பரை வழிவந்த பூசகர்கள் பணி சிறப்புடையது. எல்லாவற்றுக்கும் மேலாக திருப்பணி சிறக்க மனம், வாக்கு, காயத்தால் ஆதரவு நல்கி பொருள் பல வழங்கி அருள் பல பெற்ற அடியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இதற்கெல்லாம் தோன்றாத் துணையாய் உடனிருந்து அருள் வழங்கி ஆட்சிபுரியும் அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமான் தாழ் பணிந்து எல்லோருக்கும் அவனருள் கிடைக்க பிரார்த்திப்போமாக.

"வேலமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

**சிவஸ்ரீ பி.கிருபாகரக் குருக்கள்**
**கோப்பாய்**



### வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள் மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா இன்று 29.05.2017 திகதியன்று நடை பெறவுள்ளதையிட்டு விழா சிறப்புடன் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆலயங்களில் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் பங்களிப்பு விருத்தி வரலாறு என்பன தங்கியிருப்பதைப் பிரதிபலிக்கும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இத்தகைய நிலையில் இவ் ஆலயத்தினை குறுகிய காலத்தில் கோபுரம் ஒன்றினையும் நிறுவி நிறைவுற புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடத்தி மக்களின் வாழ்வியலை மேம்படுத்த எமது மக்கள் மேற்கொண்டுள்ள அரும்பணிகளுக்கு அன்னார் சார்பிலும் எனது சார்பிலும் எனது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

என்னும் சமயம் சார்ந்த பொன்மொழிகட்கு ஆதாரமாக ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்று ஆலயத்திற்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்தி மக்களது ஆன்மீக வாழ்வு மேம்பட வேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.பொன்னம்பலம் தயானந்தன்**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**



### ஆலய அறங்காவலரின் வாழ்த்து



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் திருவருட்சக்தி மிகவும் உன்னதமானது. எமது மூதாதையர்கள் பக்திபூர்வமாக நிர்மாணித்து உள்ளன்புடன் பரிபாலித்து வந்த இவ்வாலயத்தில் இப் பிரதேசத்தில் நீண்ட காலம் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திருப்பணிகள் தாமதமடைந்திருந்தன. எம்பெருமானின் திருவருளால் கடந்த வருடம் 06.07.2016 அன்று பாலஸ்தானம் நடைபெற்று மிக குறுகிய காலத்தில் திருப்பணிகள் இவ்வாலயத்தில நிறை வேற எம்பொருமானின் திருவருளே துணை செய்துள்ளது.

எமது பரிபூரணமான அனுசரணையில் திருப்பணிச்சபையொன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் ஆலய உபயகாரர்கள் விநாயக அடியார்கள் பக்தியுடன் மனமுவந்து வழங்கிய திருப்பணிகளுக்கான நிதியுதவி பெறப்பட்டு இவ்வாலய புனருத்தாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு இன்று இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. திருப்பணி கைங்காயத்தில் அர்பணிப்புடன் ஈடுபட்ட அன்பர்களுக்கு விநாயகப் பெருமானின் திருவருள் கிட்டுவதாக.

ஆலயத்தின் கர்ப்பக்கிருகம், விமானம், பரிவாரமூர்த்திகளுக்கான ஆலயங்கள், ஆலய மண்டபம், அலங்கார வளைவுகள், இரண்டு மணிக்கோபுரங்கள், புதிதாக அமைக்கப்பட்ட மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் மற்றும் நிலவேலைகள் ஆகியவை புனரமைக்கப்பட்டும் புதிதாக கட்டியும் ஆலயம் தெய்வீகச் சிறப்புடன் காட்சியளிக்கின்றது. எம்பொருமானுக்கு இன்று (29.05.2017) நிகழும் இம் மகா கும்பாபிஷேகத்தை தரிசிக்கும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை நாம் செய்த தவப்பேறே. திருப்பணிகளை அர்பணிப்புடன் நிறைவேற்றிய திருப்பணிச்சபையினருக்கு திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்கள், ஊர்மக்கள் ஆகியோருக்கும் ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக்கலைஞர்களுக்கும், ஆலய குருமாருக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவி நல்கிய அனைவருக்கும் இத் தருணத்தில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எம்பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி சிவகுமாரி சோமலிங்ககுமார்**
**திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாசன்**
**ஆலய முகாமையாளரும் உரிமையாளரும்.**

### ஆசியுரை

பிரணவ வடிவினராகிய விநாயகப் பெருமான் ஊர்தோறும் அமைந்துள்ள ஆலயங்களில் எழுந்தருளி தன்னை நினைத்து வழிபடுவோரது துயர் தீர்ப்பர். அத்தகைய பெருமைமிக்க விநாயகப்பெருமான் வண்ணார் பண்ணை காட்டுத்துறையில் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையார் என்ற திருநாமத்துடன் அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். இவ்வூர் மக்கள் எம்பெருமான் மீது அளவற்ற பக்திகொண்டு வழிபட்டு வருவதன் பயனாய் ஆலயத்திருப்பணிக்கு பக்தியுடன் மனமுவந்து நிதி வழங்கி திருவருளுக்குப் பாத்திரராகியுள்ளனர். ஆலய உரிமையாளர், முகாமையாளர் ஆகியோர் முழு அர்ப்பணிப்புடனும் அனுசரணையுடனும் திருப்பணி சபை அமைத்து ஊர்கூடி கோயில் அமைக்கும் கைங்கரியத்தை முன்னெடுத்தமை உன்னதமான சிவபுண்ணியச் செயலாகும். அதன்பயனாய் ஆலயம் பூலோகக் கைலாயம் போன்று புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

திருப்பணி செய்வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்
விரும்புடனீவார் பெறுக வீடு

என்ற சைவசமயநெறி கூறும் பிரமாணத்திற்கேற்ப ஆலயத்தில் அழகிய மண்டபம், பரிவாரக் கோயில்கள், மணிக்கோபுரம், புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம் ஆகியவற்றால் ஆலயம் கலைக்கோயிலாகத் திகழ்கின்றது. எம் பெருமானுக்கு இன்று (29.05.2017) நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தைக் காணும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை நாம் செய்த தவப்பயனே திருப்பணியை நிறைவுசெய்து மகா கும்பாபிஷேகத்தை நடத்திய ஆலய முகாமையாளர், உரிமையாளர் ஆகியோருக்கும் ஆலயத்தை அழகுற அமைத்த கலைஞர்களுக்கும், திருப்பணி சபையினருக்கும் பக்தியுடன் திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்களுக்கும் ஊர்மக்களுக்கும் ஏனைய வழிகளில் உதவிய அனைவருக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக. ஆலயத்தில் தெய்வீக சாந்தியத்தை ஏற்படுத்திய சிவாச்சாரியர்களது குருவருளும் அனைவருக்கும் கிட்டுவதாக.

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிஷ்ணையர்**
**வாழ்நாள் போராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### செயலாளர் மற்றும் பொருளாளர் உள்ளத்திலிருந்து

விக்கினங்கள் தீர்ப்பவர். வெற்றிகள் தருவர் விநாயகர். எங்கள் குலதெய்வமாக வண்ணை மாநகரில் காட்டுத்துறையம்பதியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகர் எம்மவர்க்கு வாரிழங்கும் அருட்கடாட்சம் அளவிடற்கரியது. நீண்டகால இடைவெளியில் அடியார்களின் அபிலாசையின் வெளிப்பாடாக ஏவிளம்பி வருடச் சித்திரைப் புனர் பூசத்தில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது சொற்கள் கடந்த பெருமகிழ்ச்சியான விடயம்.

வித்தைக்கு இறைவனாக, வினைகள் அறுக்கும் பெருமானாக, ஆனந்த வாழ்வு அளிப்பவர் எங்கள் அம்பலவாண விக்னேஸ்வரப்பெருமான். அப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் எனும் போது அதற்காக யார் யார் என்ன என்ன விதத்தில் உதவி புரிந்தனரோ அவ்வடியார்களின் புண்ணிய கைங்கரியத்தைப் போற்ற வேண்டும்.

கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என்?

மூலமூர்த்தி, பரிவாரமூர்த்திகள் அழகிய ராஜகோபுரம் என கம்பீரமாய் மிளிர்ந்து கொண்டிருக்கும் தலமாக எங்கள் காட்டுத்துறையான் திருக்கோயில் அமையப் பெற்றிருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறோம். தனஉதவி, திரவிய உதவி, சரீர உதவி எனப்பல்வேறு உதவிகள் நல்கிய அத்தனை அன்புள்ளங்களுக்கும் விநாயகரின் பேரருள் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

**த. யோகேஸ்வரன் - செயலாளர்**
**Dr. இ.தயாசிவம் - பொருளாளர்.**

(C/28952)(10)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாலியல் வன்முறை குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு போர்க்குற்றவாளியை அனுப்பிய இலங்கை

இயற்கைஉருவாக்கியுள்ளகொடுமைக்குமத்தியில் முக்கியமானதொருசெய்திபலரின்கண்பார்வை யிலிருந்து தவறியிருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் பணியாற்றிய இலங்கைச்சிப்பாய்கள்மீது முன்வைக்கப்பட்டபாலி யல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது குறித்த விசாரணை நடைபெற்ற விதம் தொடர்பானதே அந்தச் செய்தி.

ஏபி செய்திச்சேவை அதனை வெளியிட்டிருந்தது.

இலங்கையின்படைச்சிப்பாய்கள்மீது முன்வைக்கப் படும் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசுகள் எவ்வாறு கண்துடைப்பு விசாரணைகளை நடத்தி யுள்ளன என்பதற்கான மிகச் சிறந்த ஆதாரம் அந்தச் செய்தி.

இலங்கையின் அமைதிப்படைச் சிப்பாய் ஒருவரால் தான்பாலியல்வன்புணர்வுக்குஉட்படுத்தப்பட்டதாக ஹெய்ட்டியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் குற் றஞ்சாட்டியதைத் தொடர்ந்து போர்க்குற்றச் சாட்டு களுக்குள்ளான இரா ணுவ அதிகாரி ஜகத் டயஸை இலங்கை அரசு விசா ரணைக்காக அனுப்பிவைத்தது என ஏபி தெரிவித் துள்ளது.

மேஜர் ஜகத் டயஸ் மீது கடுமையான போர்க்குற் றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட பின்னரே அவரை முன்னைய அரசு பாலியல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்கு அனுப்பிவைத்துள்ளது.

தனதுபடைப்பிரிவிலுள்ளவர்கள்தமிழ்ப்பெண்களை மிகமோசமானபாலியல்வன்புணர்வுக்குஉட்படுத்து வதற்கு அனுமதித்த ஒருவரை இலங்கை அரசு பாலி யல் வன்புணர்வு குறித்து விசாரிப்பதற்காக அனுப்பி வைத்துள்ளது.

ஜகத்டயஸ்குறிப்பிட்டபோர்ச்சிப்பாயைவிசாரணை செய்த விதமும் முக்கியமானது.

''குற்றஞ்சாட்டப்பட்டசிப்பாயையோ பாதிக்கப்பட்ட பெண்ணையோநான்சந்திக்கவில்லை. அந்தஇராணு வச்சிப்பாய் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலி ருந்து அவரை விடுவித்தேன்'' என்று அவர் மிகவும் சாதாரணமாக ஏபிக்கு பதிலளித்துள்ளார்.

பாலியல் வன்முறைகள் குறித்த அவரது பதில்களும் அந்த இராணுவ அதிகாரியின் மனோநிலை எவ்வாறு அடிப்படை நீதிக்குப் புறம்பானது என்பதை வெளிப் படுத்தியுள்ளது.

ஆதாரங்கள் இல்லாவிட்டால் பாலியல் வன்முறை குற்றச்சாட்டுகளை ஏற்கமுடியாது என அவர் தெரி வித்துள்ளார்.

இலங்கைஅரசுஉள்நாட்டுப்பொறிமுறையொன்றை ஏற்படுத்தி விசாரணைகளை முன்னெடுக்கும் பட்சத் தில் அவ்வாறான விசாரணைகள் எவ்வாறானதாக அமையும் என்பதை புலப்படுத்துவதற்கு ஹெய்ட்டி குறித்த அதன் விசாரணைகள் மிகச்சிறந்த உதாரண மாகும்.


குற்றமிழைத்தவர்களேவிசாரணைகளைமுன்னெடுக் கலாம் – குற்றவாளிகள்விடுவிக்கப்படலாம். இவை எல்லாம்சாத்தியமேஎன்பதைஏபியின்அந்தச்செய்தி புலப்படுத்தி நிற்கின்றது.

இலங்கைப் படையினர் குற்றமிழைத்தால் அவர்க ளைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவர்களை எப்படி யாவது அந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற மனோபாவம் நிறைந்தவையே இலங்கை அரசுகள்.

தற்போதைய அரசும் அதற்கு விதிவிலக்கல்ல.

# இனவாதிகளது கை ஓங்க அரசு இடமளித்தல் ஆகாது

சேரலாதன்



நாட்டில் மீண்டுமொரு இனக் கலவரத்தை ஏற்படுத்துவதற்குச் சிலர் தூபம் இட்டு வரு கின்றனர். அமைச்சர் மனோ கணேசனின் அலுவலகத்துக் குச் சென்ற ஞானசாரதேரர் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவருக்கு இதற்கான துணிவு எவ்வாறு ஏற்பட்டது என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். இந் தப் பௌத்ததேரர் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான கருத்தை வெளியிடுவதை வழக்கமா கக் கொண்டிருக்கின்றார். ஆனால் அரசு இதனைக் கண்டுகொள்வ தில்லை.

இந்த நிலையில் குருநாகல் – கண்டி முதன்மை வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் வழிபாட்டுத் தலமொன்றின் மீது அண்மையில் பெற்றோல் குண் டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவம் முஸ்லிம் மக்கள் மத்தியில் கடுமையான அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளது. பொதுப லசேனா அமைப்பின் தூண்டுதலின் பேரிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாமெனச் சந்தேகம் எழுந்துள்ளது. இதேவேளை எம் மைக் கைது செய்ய முயன்றால் மறக்கமுடியாத வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்போ மென பொதுபல சேனாவின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர் தெரிவித்தி ருக்கிறார். அத்துடன் சிங் கள மக்களை அணி திரளு மாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அரசுக்குத் தலைவலி கொடுத்துவரும் சிங்கள இனவாதத் தரப்பினர்

ஞானசாரதேரர் போன்ற இனவாதத் தரப்பினரை ஆரம்பத்திலேயே கட்டுப்ப டுத்தியிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. ஆனால் இனவா திகளின் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுப்பதில் கூட் டாட்சி அரசு கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வரு கின்றது. இதனால் ஞானசாரதேரர் போன்றவர்களைக் கைதுசெய்வ தில் தாமதம் ஏற்படுகின்றது.

இனவாதமும், மதவாதமும் தலை தூக்கும் ஒரு நாட்டில் அபிவிருத் தியை எதிர்பார்க்க முடியாது. எமது நாட்டில் இதுதான் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நாடு குறிப்பிட்டதொரு இனத்தவருக்கே சொந்தமானதெனத் திரும்பத் திரும் பக் கூறப்படு கின்றது. சிறுபான்மை இனத்தவர்கள் இந்த நாட்டுக்குத் தேவையற்றவர்கள் என்ற வகை யில் பரப்புரைகள் மேற்கொள்ளப்ப டுகின்றன. இதனால் இனங்களுக் கிடையில் விரிசல்கள் ஏற்படுத்தப் பட்டு இறுதியில் இனக் கலவரமாக வும் தோற்றம் பெறக் கூடும். முன்ன ரெல்லாம் நாட்டின் அனைத்து இடங்களிலும் மத வழிபாட்டுத் தலங் கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. தென்பகுதியில் முற்றுமுழுதாகப் பெரும்பான்மை யின மக்கள் வாழ்கின்ற அம்பாந் தோட்டையில் கதிர்காமக் கந்தனின் ஆலயம் அமைந்துள்ளது. அதே போன்று தமிழர்கள் பெரும்பான்மை யாக வாழ்கின்ற யாழ்ப்பாண மாவட் டத்தில் பௌத்த விகாரைகள் அமைந்துள்ளன. இந்த வழிபாட்டுத் தலங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அமைக்கப்படவில்லை. மக்களும் இவை தொடர்பாகச் சந்தேகம் கொள்ள வில்லை. ஆனால் போர் ஓய்ந்த பின்னர் பௌத்த மக்கள் வாழாத இடங்களில் எல்லாம் பௌத்த வழி பாட்டுத் தலங்கள் திடீர் திடீரென அமைக்கப்பட்டு வருகின்றன. இத னால் சிறுபான்மையின மக்கள் அச்சமடைந்துள்ளனர். எதிர்காலத் தில் தமது இருப்பு கேள்விக்குறியாக மாறிவிடுமோ? என்ற ஐயமும் இவர் களிடம் எழுந்துள்ளது. ஏற்கனவே பல இடங்களில் இதுபோன்ற சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளதால் அந்த மக்களின் ஐயத்தில் நியாயம் உண்டு.

> ஞானசாரதேரர் போன்ற இனவாதத் தரப்பினரை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தியிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. ஆனால் இனவாதிகளின் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுப்பதில் நல்லாட்சி அரசு கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது. இதனால் ஞானசாரதேரர் போன்றவர்களைக் கைதுசெய்வதில் தாமதம் ஏற்படுகின்றது.

### தமிழ் மக்களது அச்சம் நியாயமானதே

கொடிய போர் ஒன்று ஓய்ந்து மக்கள் தற்போதுதான் ஓரளவு அமைதி யான சூழலில் வாழ்ந்து வருகின்ற னர். ஆனால் இனவாதிகளால் இதைப் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. இதன் பிரதிபலிப்பாகவே குருணாகல் பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம், இரத்தினபுரி தீ வைப்புச் சம்பவம் ஆகியவற்றைக் கொள்ள முடியும். இந்தச் சம்பவங்க ளில் ஈடுபட்டவர்கள் இனம் காணப் பட்ட போதிலும் எவருமே இதுவரை கைது செய்யப்படவில்லை. இதே வேளை சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடாவடித்தனங்களில் ஈடு பட்ட பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசாரதேரரையும், அவருடன் இணைந்து செயற்படு கின்வர்களையும் கைது செய்ய வேண்டாமென பொலிஸ் தலை மைப் பீடம் உத்தரவிட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் இது கவனத்தில் கொள்ளப் படுமா? என்பது சந்தேகமானதே.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் இனவாதமும், மதவாதமும் தலைதூக்கிக் காணப்ப டுவதால் அங்கு அமைதிக்குப் பங்க மான காரியங்கள் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன. அத்துடன் சொத் துக்களுக்கு இழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாகக் காஷ்மீர் பிரச்சினை தீராத தலைவலியாக அங்கு மாறிவிட்டது. தினமும் மோதல்கள் ஏற்பட்டு மக்கள் சாவடைவது அங்கு சாதாரணமான விடயமாகி விட்டது. ஆனால் இதனுடன் தொடர்பு கொண்டிருக்கும் இந்தியாவும், பாகிஸ்தானும் பிரச்சினைக்குத் தீர்வு காண் பது தொடர்பாகச் சிந்திப்ப தாகத் தெரியவில்லை.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழர்களின் தாயக பூமியெ னத் தமிழர்கள் பெருமைய டன் கூறிக்கொள்வார்கள். ஆனால் கிழக்கு மாகாணம் தமிழர்களின் கைகளிலிருந்து நழுவிச் சென்றுவிட்டது. வடக் கிலும் அவ்வாறானதொரு நிலை உருவாக்கப்பட்டு வரு கின்றது . விரல்விட்டு எண் ணக் கூடிய சிங்கள மக்கள் குடியேற்றப்பட்ட நாவற்குழி யில் பிரமாண்டமானதொரு பௌத்த ஆலயத்தை அமைப் பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப் பாண மாநகரின் முதன்மை நுழை வாயிலாக நாவற்குழி காணப்படு கின்றது தென்பகுதியிலிருந்து வரு பவர்கள் நாவற்குழியைக் கடந்து சென்றுதான் யாழ்ப்பாண நகரை அடைய முடியும். திருகோணமலை நகரினுள் நுழைகின்ற நுழைவாசல்களில் சிங் களக் குடியேற்றங்கள் திட்டமிடப்பட்ட வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதைப் போன்றதொருநிலைதான் தற்போது நாவற்குழியிலும் ஏற்படுத்தப்படுகின் றது. எதிர்காலத்தில் இதன் விளை வுகள் தமிழர்களுக்குப் பாதகமா கவே அமையப் போகின்றன.

ஆகவே அரசு நேர்மையுடன் செயற் பட்டு அனைத்து இனங்களுக்குமான பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள வேண்டும். கூட்டாட்சி அரசு நாட்டு மக்கள் அனைவருக்கும் பாரபட்ச மில்லாத கூட்டாட்சியை வழங்க வேண் டும். இன வாதிகளின் கரங்கள் ஓங்கி விடுமாயின் அது இந்த நாட்டின் எதிர் காலத்தையே சீர்குலைத்துவிடும்.

இராதனம்



# நன்னீர் வாய்ப்புக்கள் கிட்டாததால் சிரமமுறும் வன்னி வாழ் விவசாயிகள்

முன்னைய காலத்திலே பருவமழை பொய்க்காது பெய்ததால் வன்னிநிலப்பரப்பிலே வசந்தம் வீசியது. விவசாயிகள் நல்ல அறுவடையை ஈட்டினர். வன்னி நிலப்பரப்பு பச்சைப்பசேல் என்று காட்சி அளித்தது. பங்குனி போய் சித்திரை வந்தால் கோடைப் போகம் என்று சொல்லப்படும் சிறுபோக நெற்செய்கை ஆரம்பமாகும். சிறுகுளங்களிலே நீர் நிரம்பி இருக்கும். கால்நடைகளின் மேய்ச்சலுக்குப் பஞ்சமே இருக்காது. மொத்தத்தில் அன்றைய காலம்ஒருவசந்தகாலம்தான். அன்றையநிலைமைமுழுதாக மாறி இன்று மாரி மழை இல்லாது மேய்ச்சல் தரைகளில் பச்சைப் புல்லைக் காண முடியாத நிலமை காணப்படுகிறது. அத்துடன்சிறுகுளங்கள் வற்றிக் காணப்படுன்றன. இதனால் கிணறுகளின் நீர் மட்டம் குறைந்துகொண்டே செல்கின்றது. வெப்பம் அதிகரிப்பால் நோய்கள் பரவும் அபாயம் வேறு. பருவங்கள் மாற்றமுற்றதால் கால்நடைகளுக்கானமேய்ச்சல்வாய்ப்பு இல்லை. மக்களுக்கான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஒரு முக்கிய பிரச்சினையாகி யுள்ளது. வீட்டை அண்டிய காணியில் செய்யப்படும் விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இப்படி பல பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்க நேர்ந்துள்ளது. தென்பகுதியில் நீர் வீழ்ச்சிகளில் இருந்து நீர் வழங்கலை மேற்கொள்கின்றனர். அதனைப்போல வன்னியிலும் பல சிற்றாறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை மறித்துக்கட்டி நீரை வழங்குவது பொருத்தப்பாடாக அமையும். முல்லைத்தீவு மாவட்டத்தில் பேராறு. முத்து ஐயன் கட்டிலே இருந்து ஆரம்பமாகி புதுக்குடியிருப்பு ஊடாக கடலைச் சென்றடைகின்றது. ஆனால் புதுக்குடியிருப்பு விவசாயிகள் அதனை மறித்துக்கட்டிப் பயிர்ச் செய்கை மேற்கொள்கின்றனர். ஏன் அதனை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேற்கொள்ள முடியாது? என்றகேள்வி எழுகின்றது. பேராறு மட்டுமல்ல குருவிச்சைஆறு, விராலமடு ஆறு, சானம்பன் ஆறு என வேறு சில ஆறுகளும் காடுகள் ஊடாகப் பாய்கின்றன. குறிப்பாக பேராறு மற்றும் குருவிச்சை ஆறு என்பவை கோடை காலத்திலும் நீர் நிறைந்து காணப்படுகின்றன. பேராறு ஆற்றை மறித்துக்கட்டி நெற்செய்கை மேற்கொள்ளும் திட்டமொன்று 1980 களில் பதவிலிருந்த அரசால் பரிசீலிக்கப்பட்டபோதிலும் பின்னர் அது கைவிடப்பட்டது.

### ஆறுகளை மறித்து அணைகட்டி வன்னியின் விவசாயம் மேம்படுத்தப்படல் வேண்டும்

ஆறுகளால் கிராமங்கள் பாதிப்படையாது உரிய அணைக்கட்டுக்களை நிறுவி குளங்களைச் சீரமைத்து அவற்றின்கீழ் உள்ள காணிகளை விவசாயிகளுக்கு வழங்குவார்களேயானால், கோடைகாலங்களில் நீர்ப்பிரச்சினை ஓரளவேனும் நிவர்த்திசெய்யப்படலாம்.

முல்லை, மாங்குளம் வீதியிலிருந்து கிழக்குப்பக்கமாக குருக்கள்ஊர் ஆமையன் காணி என்பவற்றுக்கான குளங்கள் மூலம் எமது முன்னோர்கள் விவசாயம் மேற்கொண்டமைக்கு வரலாற்றுச்சான்றுகள் உள்ளன. இன்று அந்த இடம் காடாக, வனவிலங்கு வாழ்விடமாக உள்ளது. இதனால் மக்களின் பயிர் செய்நிலங்கள்வீணே காடுமண்டிக் கிடக்கின்றன.

இதேபோன்று கற்குளம், ஐயன்பெருமாள்குளம் போன்ற குளங்கள் சீரமைப்புச் செய்யப்படாமையால் காணிகள் தரிசு நிலங்களாக மாறியதுடன் அந்த இடங்களில் இராணுவத்தினரின் முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. வன்னி பெருநிலப்பரப்பில் கோழிப்பறவைக்கு ஒருகுளம் இருக்குமென முன்னோர்கள் நம்பி வந்தனர். (அதாவது ஒருகோழி, அதனது இடத்தில் இருந்து பறந்து எங்கு சென்று இறங்குகிறதோ அங்கு ஒரு குளம் இருக்குமெனக் கூறுவர்) அத்தகைய தளங்களை இனம் கண்டு சீரமைத்து அதன்கீழ்உள்ளகாணிகளை விவசாயிகளுக்கு வழங்கி விவசாயம் மேற்கொண்டால்நீர்ப்பஞ்சம்எந்தக்காலத்திலும்ஏற்படாது.

### சிறிய குளங்கள் கைவிடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நீர்வளப் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், இங்கு முத்து ஐயன்கட்டு, அங்கே திருமுறிகண்டி, மறுபக்கம் ஒதியமலைஈறாக விவசாயப் பெருமக்கள் வாழ்கின்றனர். ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்துக்குட்பட்ட (கமநலச்சேவைதிணைக்களக் குறிப்பின்படி) 3 ஆயிரத்து 83 குடும்பங்கள் விவசாயத்தை மேற்கொள்கின்றனர். பெரிய நீர்ப்பாசனத்தின் கீழ் மொத்த ஏக்கராக 6 ஆயிரத்து 112.05 ஏக்கர் அதில் 4 ஆயிரம் ஏக்கர் நெற்பயிற்செய்கை பண்ணப்படுகிறது. சிறியநீர்ப்பாசனத்தின் கீழ் 3 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையும் மானாவாரியாகவும் மேட்டுநிலப்பயிர் செய்கையாகவும் என செய்கை பண்ணப்படுகிறது.

இங்குள்ள மக்கள் 99 வீதமானோர் விவசாயிகளே. இவர்கள் விவசாயத்தையே நம்பி இருப்பவர்கள். அத்துடன் புகையிலை, வெங்காயம், மிளகாய், நிலக்கடலை, கௌபி, உழுந்து, பயறு என்பனவற்றையும் அவர்கள் பயிரிடுவர். அதுமட்டுமல்ல தென்னைச் செய்கை மரவள்ளிச் செய்கை போன்றவற்றிலும்அவர்கள்கைதேர்ந்தவர்கள். ஆனால் தற்போது பருவமழை பொய்த்ததால் விவசாயச் செய்கைகள் யாவும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. மழை இல்லாது ஆறுகள் ஓடைகள் குளங்கள் வற்றியதால் கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. மேட்டுப்பயிர்களை மேற்கொண்டோர் மிகவும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். தமது பயிர்ச்செய்கையை நம்பி வங்கிகளில் கடன்பட்டோர் நகைகளை அடகுவைத்தோர் அவைகளைமீளச் செலுத்தவோ மீட்கவோ முடியாதநிலையில் திண்டாடுகின்றனர்.




### விவசாயிகளை ஊக்குவிக்க அரசு பலவழிகளில் உதவலாம்

முத்து ஐயன்கட்டு பகுதிக்கு அப்பால் சமளங்குளம், ஒட்டுசுட்டான், இத்திமடு , தண்டுவான், பழம்பாசி, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு போன்ற பலகிராமங்களில் வாழும் மக்கள்கோடைகாலங்களில் விவசாய முயற்சிகளில் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்தப்பகுதிகளில் விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக விவசாயக்ணிணறுகளை அமைக்க அரசு முன்வரவேண்டும். இல்லையேல் அதற்கான பண உதவிகளையாவது அவர்களுக்குச் செய்யவேண்டும் அன்றைய காலப்பகுதியில் மரக்கறிகளுக்கோ அன்றி தயிர், பால், தேன், இறைச்சி, நெல் என்பனவற்றுக்கோ தட்டுப்பாடு இல்லை. பகுதி நேரத் தொழிலாக தோட்டப்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதுண்டு.

எனவே காலமாற்றத்தால் ஏற்படும் பாதிப்பிலிருந்து அவர்கள் விடுபட அவர்களுக்கான தேவைகளைக் கேட்டறிந்து அவை நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும். விவசாயிதான் நாட்டின் முதுகெலும்பாக விளங்குகிறான். எல்லா உயிரினங்களும் விவசாயியையே நம்பி உயிர்வாழ்கின்றன.

குறிப்பாக நீர்ப்பாய்ச்சல் அற்ற இடங்களில் வாழும் மக்களின் நன்மை கருதி நீர்த்தாங்கிகள் அமைத்து குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைத்தீர்க்கவேண்டும். இன்று தமது கால்நடைகளுக்கான நீரைக்கூட வழங்க முடியாத நிலையில் பல விவசாயிகள் உள்ளனர். எனவே எமது பிரதேசம் வளம் கொழிக்கும்பிரதேசம் இங்கு நீர்ப்பிரச்சினை மிகவும் பாரதூரமான விடய மாகியுள்ளது. இதனைக்கருத்தில் கொண்டு நீர்வழங்கலை மேற்கொள்ள அரசு முன்வர வேண்டும். அது இன்றைய காலத்தின் அவசிய தேவையொன்றாக ஆகியுள்ளது.



## ஆசிரியருக்கான கடிதம்

### 750 ஆம் இலக்க பஸ் தடத்தில் மேலதிக பேருந்து ஒன்று சேவையில் ஈடுபடாதா?

மாலை வேளைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து 750 ஆம் இலக்க அரச பேருந்துகளில் பருத்தித்துறை செல்லும் பயணிகள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பருவகாலப்பயணம் சீட்டுப் பெற்ற பயணிகள் தனியார் பஸ்களில் செல்ல முடியாத நிலையில் அரச பஸ்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளதால் அவர்களின் நிலையும் பரிதாபகரமாக மாறியுள்ளது.

மாலை வேளைகளில் அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், பாடசாலை மாணவர்கள், யாழ். மருத்துவமனையிலிருந்து வீடுகளுக்குச் செல்பவர்கள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் எனப்பலரும் அரச பஸ்களிலேயே தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

5.30, 6 மாலை வேளைகளில் 6.30 மற்றும் இரவு 7.10 ஆகிய நேரங்களில் 750 ஆம் இலக்க அரச பேருந்துகள் யாழ். பஸ்நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்கான சேவைகளை மேற்கொள்கின்றன. 5.30க்குப் புறப்படுகின்ற பேருந்தில் இடவசதி இருக்கும் போதும் சில சாரதிகள் இடைவழியில் பேருந்துக்காகக் காத்திருக்கும் பயணிகளை ஏற்றாமல் சென்று விடுகின்றனர். இதனால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் தமது பயணத்தைத் தொடர முடியாது அவதியுறுகின்றனர்.

மேலும் 6, 6.30 ஆகிய நேரங்களில் புறப்படுகின்ற பேருந்துகளில் அதிக எண்ணிக்கையான பயணிகள் ஏறுவதால் இடவசதி கிடைக்காது பலர் அந்தரித்து நிற்பதைக் காணமுடிகின்றது. இவர்களில் பெண் பிள்ளைகளின் நிலைதான் பரிதாபமாக உள்ளது. இதனால் பருவகாலப் பயணச் சீட்டுப் பெற்றுக் கொண்ட சிலர் தனியார் பேருந்துகளில் பணம் கொடுத்துப் பய்ணிப்பதைக் காணமுடிகின்றது.

எனவே சன நெரிசல் அதிகமாகவுள்ள கிழமை நாள்களிலாவது மாலை வேளைகளில் மேலதிக பேருந்து ஒன்றை 750 ஆம் இலக்கப் பாதையூடாகச் சேவையில் ஈடுபடுத்தினால் பயணிகளின் அசௌகரியங்களுக்கு ஓரளவாவது நிவாரணம் கிடைக்கும்.

மா. சுபாசினி
மந்திகை

# இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விற்பனை தொடர்பில் சட்ட நடைமுறை

## நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தலைமை அமைச்சர் கருத்துரைப்பு



குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை இலங்கையில் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கும் வகையிலான சட்டமொன்றை அமுலாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதான கருத்து தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

``ஏற்றுமதியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சித்து வருகின்றோம். தேசிய உற்பத்திகளுக்கு மாறாக பன்னாட்டு முதலீட்டாளர்கள் உற்பத்தி சார்ந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கான அழைப்பினை விடுக்கிறோம்"

கடவத்தைப்பிரதேசத்தில்அமைந்துள்ளபுதிய தொழிற்சாலையொன்றின்ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற்படி விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், "குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும்பொருள்களை இலங் கையில் விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படும்.

ஏற்றுமதிநடவடிக்கைகளில்ஈடுபடுவோருக்கு இயந்திரங்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் வரி விலக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஜி.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகை இலங்கைக்கு கிடைத்தது மட்டுமன்றி சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ள நிலையில், நாடு புதிய அபிவிருத்திப் பயணத்தை ஆரம்பித்துள்ளது" என்றார்.



# இறப்பர் செய்கை மூலம் 26 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது

## இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் இறப்பர் செய்கை மூலமாக 26 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் இறப்பர் செய்கை மூலமான வருமான உள்ளீடானது 32.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலே "2015 ஆம் ஆண்டு புதிய அரசு பதவியேற்ற போது வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைவாக இறப்பருக்கான நிவாரண விலை அறிவிக்கப்பட்டது. அதன்படி 100 நாள்களுக்கு மட்டுமானதாகவே இந்த நிவாரண விலை கிடைத்துள்ளது. அரச நிவாரணம் தற்போது கிடைக்காமையினால் இறப்பர் உற்பத்தி குறைவடைந்து வாழ்வில் நாம் பெரும் துயரங்களை எதிர்கொண்டு வருகிறோம். கூட்டு அரசு வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை" என இறப்பர் செய்கையாளர்களும் பெருந்தோட்ட மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் இறப்பர்ச் செய்கை அதிக செல்வாக்குச் செலுத்தி வருகின்றமை நோக்கத்தக்கது.

# சிறந்த எஸ்.எம்.இ வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு

இலங்கையில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த எஸ்.எம்.இ வங்கியாக கொமர்ஷல் வங்கி பிரிட்டனின் இன்டநஷனல் பினான்ஸ் மகஸின் (IFM) சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறியமற்றும்நடுத்தர தொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்காக குறிப்பிடத் தக்க முன்னேற்றங் களை ஏற்படுத்தி அவர்களுக்கான கண்டு பிடிப்புக்கள் மற்றும் செயற்பாடுகளில் அதி உயர் தரங்களை அடைந்தமைக்காக இந்த தெரிவு இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு ...தித் தொழிற்றுறையில் உயர் மட்டப் பங்களிப்புக்காகக் கிடைத்துள்ள அங்கீகாரமாகவும் இந்த விருது கருதப்படுகின்றது. இன்டநஷனல் பினான்ஸ் மகஸின் (IFM) சஞ்சிகையின் நிதி விருதுக்கான வகைப்படுத்தலில் இந்த விருதானது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு மற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகை என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது.



செல்வா பலஸ்
திறப்பு விழா
இன்று (29.05.2017)
திங்கட்கிழமை

அன்புடையீர

"செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்"

நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் (29.05.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.06 முதல் பிற்பகல் 1.15 வரை வரும் சிங்க இலக்கினமும், புநர்பூச நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்
ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருட்காட்சத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ள

செல்வா பலஸ்

பிரதம விருந்தினர்கள்

Chief Guest
Hon.C.V.Vigneswaran
*Chief Minister. Northern Provincial Council*

Guest of Honor.
Mrs. Rajeswary Chellathurai

Special Guests
Mr.Manoj Akmeemana
*Deputy General manager - Branch Banking Sampath Bank*
Mr.Sumi Mithrapala
*Chief Manager - Branch Banking Sampath Bank*
Mr.Saliya Rajakaruna
*(London)*

கலாநிதி செல்லத்துரை திருச்செல்வம் - குடும்பத்தினர் மற்றும்
கந்தையா செல்லத்துரை- குடும்பத்தினர்

இல. [illegible]0,12, பூனாரி மரத்தடி கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# இனரீதியான பாகுபாட்டின் குறிகாட்டிகளான ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

கலாநிதி பா.தனபாலன்

(நேற்றுமுன்தினம் வெளியான "இனரீதியான பாகுபாட்டின் குறிகாட்டிகளான ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்" என்ற தலைப்பிலான கட்டுரையின் தொடர்ச்சி....)

எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறாதோர் தொகையை நோக்கும்போது பாடசாலைகளின் கல்விச் செயன்முறைகள் கேள்விக் குறியாக வுள்ளமை புல னாகின்றது. இதற்கு நாமனைவரும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலுள்ளோம். இது எதிர்காலத்தில் மிகப்பெரும் தாக்கங்களை ஏற்படுத்தப் போகின்றது. இந்த ஆய்வில் இனவாதம் எடுத்தாளப்படவில்லை. ஆனால் இன்னும் 5,6 வருடங்களில் எமது பிரதேச அரச உத்தியோகத்தில் சிற்றூழியர்கள் கூட தமிழர்கள் எவரும் இருக்க முடியாத நிலை ஏற்படப் போகின்றது. இன்று சிற்றூழியர்களுக்கான அடிப்படைத் தகுதி க.பொ.த சாதாரண தரமாகும்.

அட்டவணை 4

**ஜி.சி.ஈ. (சா/த) பரீட்சை 2015-2016**
**மாகாண மட்டத்தில் முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றியவர்கள்**

| | மாகாணங்கள் | 2011 | | | 2012 | | | 2013 | | | 2014 | | | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | |
| | | | தொகை | வீதம் | | தொகை | வீதம் | | தொகை | வீதம் | | தொகை | வீதம் | | தொகை | வீதம் | | தொகை | வீதம் |
| | மேல் | 69,614 | 46,337 | 66.56 | 70,871 | 48,923 | 69.03 | 71,357 | 49,521 | 69.40 | 68,093 | 49,003 | 71.96 | 73,017 | 53,062 | 72.67 | 75,414 | 54,994 | 72.92 |
| | மத்திய | 35,265 | 20,309 | 57.59 | 34,868 | 21,442 | 61.49 | 34,445 | 21,878 | 63.50 | 34,085 | 22,481 | 65.96 | 34,652 | 23,209 | 66.98 | 37,665 | 25,932 | 68.85 |
| 03 | தென் | 34,908 | 21,944 | 62.86 | 35,139 | 23,297 | 66.30 | 33,692 | 22,591 | 67.05 | 33,145 | 24,223 | 73.08 | 34,801 | 26,173 | 75.21 | 34,994 | 26,828 | 76.66 |
| 04 | வட | 18,021 | 9,778 | 54.26 | 15,720 | 9,430 | 59.99 | 15,280 | 9,982 | 65.33 | 15,266 | 9,800 | 64.19 | 17,752 | 10,719 | 60.38 | 17,413 | 10,562 | 60.66 |
| 05 | கிழக்கு | 20,848 | 11,755 | 56.38 | 20,701 | 12,875 | 62.20 | 20,525 | 13,430 | 65.43 | 20,164 | 13,451 | 66.71 | 21,693 | 13,784 | 6354 | 23,744 | 14,617 | 61.56 |
| 06 | வடமேல் | 30,689 | 19,237 | 62.68 | 30,924 | 20,659 | 66.81 | 30,775 | 21,209 | 68.92 | 29,734 | 20,938 | 70.42 | 31,733 | 22,104 | 69.66 | 33,833 | 23,896 | 70.63 |
| 07 | வட மத்திய | 16,797 | 9,422 | 56.09 | 16,012 | 10,128 | 60.40 | 16,726 | 10,548 | 63.06 | 16,304 | 10,638 | 65.25 | 16,560 | 11,030 | 66.61 | 19,041 | 12,632 | 66.34 |
| 08 | ஊவா | 18,637 | 10,147 | 54.45 | 19,012 | 11,336 | 59.63 | 18,003 | 11,419 | 63.43 | 17,065 | 11,061 | 64.82 | 18,231 | 12,005 | 65.85 | 18,558 | 12,630 | 68.06 |
| 09 | சப்ரகமுவ | 25,253 | 15,262 | 60.44 | 24,992 | 16,070 | 64.30 | 23,959 | 15,956 | 66.60 | 23,466 | 16,017 | 68.26 | 24,785 | 17,342 | 69.97 | 25,589 | 18,117 | 70.80 |
| தீவு முழுவதும் | | 270,032 | 164,191 | 60.80 | 268,995 | 174,160 | 64.74 | 264,772 | 176,534 | 66.67 | 257,332 | 177,612 | 69.02 | 273,224 | 189,428 | 69.33 | 286,251 | 200,208 | 69.94 |

**அட்டவணை 4**

தமிழர்கள் செறிந்து வாழும் வடகிழக்கு மாகாணங்களில் போருக்குப் பின்னர் தேசிய ரீதியான பெறுபேறுகளுக்குக் குறைவாகவே ஜி.சி.ஈ. உயர்தரத்துக்குத் தகுதியானவர்கள் காணப்படுகின்றார்கள். ஆக இந்தப் பிரதேசங்களின் கல்விடைவுக் குறைவுக்கான பின்னணிக் காரணங்கள் முழுமையாக விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட வேண்டும். சரியான காரணங்கள் இனங்காணப்பட வேண்டும். தீர்வுகள் முன்மொழியப்பட வேண்டும். எதிர்காலத்தில் இந்த வீழ்ச்சியைத் தடுக்க கல்வி முகாமைத்துவக் கட்டமைப்புக்களுடன் நின்றுவிடாது பல்கலைக்கழகங்கள் புத்தி ஜீவிகள், அரசியல் - சமூகத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் மத்தியில் பரந்தளவிலான விழிப்புணர்வுகளையும், நடைமுறைச் சாத்தியமான செயற்றிட்டங்களையும் பல முனைகளில் முன்னெடுக்க வேண்டும்.

வலய அடிப்படையில் ஜி.சி.ஈ. சாதாரண 2016ஆம் ஆண்டுப் பெறுபேறுகளில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேச வலயங்களிலேயே அடைவுகள் பின்னடைவைக் காட்டுகின்றன. எமது வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். அதிபர் தம் கடமைகளைச் செய்கிறார்கள். மேற்பார்வையதிகாரிகள் தம் சேவையைச் செய்கின்றார்கள்.

ஆனால் பெறுபேறுகள் வீழ்ச்சியாகக் காணப்படுகின்றன. உயர் பெறுபேற்றை அடையும் மாணவர்கள் காணப்படுகின்றார்கள். தனியார் கல்வி நிலையங்க ளுக்கும் மாணவர்கள் பெருமளவு பணத்தைக் கொடுத்துக் கற்கின்றார்கள்.


இங்கே விழிப்புணர்வுக்காக பொதுவான புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. ஜி.சி.ஈ. சாதாரண பாடங்களின் அடிப்படையில் பெறுபேறுகளை நோக்கி ஆராயும்போது எமது பாடசாலைக் கல்வி முறையில் மிகப் பெரும் பின்னடைவுகளைக் காணமுடிகின்றது.

இங்கு வகுப்பறைகளே வினைத்திற னாக்கப்பட வேண்டியுள்ளது. ஆசிரியர் மனப்பாங்கு - அர்ப்பணிப்பு - வாண்மைத்துவத் தகுதி ஆழமாக நோக்கப்பட வேண்டியுள்ளது. ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊக்குவிப்புக்கள், ஆதரவுகள், உதவிகள், கற்றல்-கற்பித்தல் சாதனங்கள் போதாமையுள்ளது. ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் நலன்கள் உதாசீனம் செய்யப்படும் போதுகூட கல்விப் பின்னடைவுகள் ஏற்படும். ஏனைய துறைகள் போல கல்வி முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த முடியாது.

ஆசிரியர் சார்பான பிரச்சினைகள், அதிபர்கள் சார்பான பிரச்சினைகள், மாணவர்கள் சார்பான பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையில் அணுகி செல்வாக்கு பொருத்தமற்ற அரசியல் தலையீடுகளை நீக்கி எமது எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களின் கல்விக்காக நாம் அனைவரும் எம்மை அர்ப்பணிப்போமாக.

**மாகாண ரீதியாக 2011இல் இருந்து 2016 வரை ஜி.சி.ஈ. (சாதாரணம்) பெறுபேறுகள்**

| | கல்வி வலயம் | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 9ஏ சித்திகள் பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் (6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தொகை | வீதம் | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 01 | வலஸ்முல்ல | 2,491 | 2,110 | 84.70 | 57 | 2.29 | 11 | 0.44 |
| 02 | கண்டி | 7,467 | 6,182 | 82.79 | 618 | 8.28 | 108 | 1.45 |
| 03 | முலதியான | 2,137 | 1,704 | 79.74 | 18 | 0.84 | 35 | 1.64 |
| 04 | மாத்தறை | 5,199 | 4,136 | 79.55 | 303 | 5.83 | 97 | 1.87 |
| 05 | கொழும்பு | 14,458 | 11,400 | 78.85 | 1,958 | 13.54 | 391 | 2.70 |
| 06 | காலி | 6,845 | 5,389 | 78.73 | 365 | 5.33 | 116 | 1.69 |
| 07 | ஜெயவர்த்தனபுர | 7,348 | 5,711 | 77.72 | 316 | 4.30 | 142 | 1.93 |
| 08 | அக்குரச | 1,976 | 1,531 | 77.42 | 31 | 1.57 | 26 | 1.32 |
| 09 | கேகாலை | 4,337 | 3,315 | 76.44 | 144 | 3.32 | 115 | 2.65 |
| 10 | குழியப்பிட்டிய | 3,972 | 3,031 | 76.31 | 79 | 1.99 | 55 | 1.38 |
| 11 | தங்காலை | 2,438 | 1,857 | 76.17 | 33 | 1.35 | 48 | 1.97 |
| 12 | குருநாகல் | 5,623 | 4,281 | 76.13 | 322 | 5.73 | 112 | 1.99 |
| 13 | ஹம்பகா | 7,851 | 5,954 | 75.84 | 533 | 6.79 | 257 | 1.27 |
| 14 | நிகவேரட்டியா | 2,993 | 2,265 | 75.68 | 34 | 1.14 | 41 | 1.37 |
| 15 | மற்றலி | 3,677 | 2,745 | 74.65 | 137 | 3.73 | 61 | 1.66 |
| 16 | மொரவக | 2,126 | 1,579 | 74.27 | 17 | 0.80 | 39 | 1.83 |
| 17 | அம்பலாங்கொட | 3,190 | 2,357 | 73.89 | 105 | 3.29 | 59 | 1.85 |
| 18 | மருகம | 3,131 | 2,310 | 73.78 | 95 | 3.03 | 77 | 2.46 |
| 19 | பிலியாண்டல | 5,748 | 4,240 | 73.76 | 180 | 3.13 | 150 | 2.61 |
| 20 | பண்டாரவல | 3,297 | 2,428 | 73.64 | 108 | 3.28 | 88 | 2.67 |
| 21 | உடுகாம | 1,693 | 1,243 | 73.42 | 08 | 0.47 | 38 | 2.24 |
| 22 | ரட்ணபுர | 5,889 | 4,321 | 73.37 | 240 | 4.08 | 199 | 3.38 |
| 23 | பதுளை | 2,626 | 1,918 | 73.04 | 73 | 2.78 | 76 | 2.89 |
| 24 | அக்கறைப்பற்று | 1,224 | 880 | 71.90 | 16 | 1.31 | 8 | 3.65 |
| 25 | கல்முனை | 2,459 | 1,767 | 71.86 | 58 | 2.36 | 30 | 1.22 |
| 26 | மாவாநெல்ல | 3,785 | 2,717 | 71.78 | 100 | 2.64 | 123 | 3.25 |
| 27 | கடுகஸ்தோட்ட | 3,018 | 2,166 | 71.77 | 24 | 0.80 | 62 | 2.05 |
| 28 | எல்பிட்டிய | 3,049 | 2,188 | 71.76 | 23 | 0.75 | 75 | 2.46 |
| 29 | சிலாபம் | 5,428 | 3,890 | 71.67 | 109 | 2.01 | 94 | 1.73 |
| 30 | வெலிமட | 2,463 | 1,758 | 71.38 | 17 | 0.69 | 43 | 1.75 |
| 31 | ஹம்பாந்தோட்ட | 3,862 | 2,744 | 71.05 | 47 | 1.22 | 107 | 2.77 |
| 32 | களணிய | 7,347 | 5,193 | 70.68 | 160 | 2.18 | 249 | 3.39 |
| 33 | மாகோ | 3,649 | 2,578 | 70.65 | 30 | 0.82 | 101 | 2.77 |
| 34 | மட்டக்களப்பு மத்தி | 1,862 | 1,315 | 70.62 | 45 | 2.42 | 19 | 1.02 |
| 35 | கிரியுள்ள | 3,961 | 2,771 | 69.96 | 37 | 0.93 | 112 | 2.83 |
| 36 | அம்பாறை | 2,431 | 1,699 | 69.89 | 31 | 1.28 | 72 | 2.96 |
| 37 | இபாகமுவ | 3,044 | 2,120 | 69.65 | 34 | 1.12 | 78 | 2.56 |
| 38 | களுத்துறை | 7,908 | 5,497 | 69.51 | 158 | 3.26 | 224 | 2.83 |
| 39 | கோமாகம | 4,379 | 3,031 | 69.22 | 84 | 1.92 | 171 | 3.91 |
| 40 | விவிலை | 1,571 | 1,085 | 69.06 | 09 | 0.57 | 63 | 4.01 |
| 41 | பலாங்கொடை | 2,553 | 1,761 | 68.98 | 44 | 1.72 | 85 | 3.33 |
| 42 | டேனுவர | 1,982 | 1,366 | 68.92 | 10 | 0.50 | 66 | 3.33 |
| 43 | பொறன | 4,723 | 3,249 | 68.79 | 106 | 2.24 | 146 | 3.09 |
| 44 | பொலநறுவ | 1,841 | 1,266 | 68.77 | 29 | 1.58 | 63 | 3.42 |
| 45 | அனுராதபுர | 4,704 | 3,232 | 68.71 | 67 | 1.42 | 209 | 4.44 |
| 46 | யாழ்ப்பாணம் | 3,345 | 2,288 | 68.40 | 119 | 3.56 | 113 | 3.38 |
| 47 | எம்பிலிப்பிட்டிய | 3,430 | 2,322 | 67.70 | 23 | 0.67 | 132 | 3.85 |
| 48 | கலன்பிந்துநாவேவ | 1,582 | 1,069 | 67.57 | 04 | 0.25 | 33 | 2.09 |
| 49 | தம்புத்தேகம | 2,458 | 1,660 | 67.53 | 12 | 0.49 | 77 | 3.13 |
| 50 | வேட்டகம | 2,582 | 1,736 | 67.23 | 19 | 0.74 | 98 | 3.80 |
| 51 | நிகம்பு | 7,182 | 4,825 | 67.18 | 215 | 2.99 | 250 | 3.48 |
| 52 | மினிவேன்கொட | 5,339 | 3,584 | 67.13 | 60 | 1.12 | 206 | 3.86 |
| 53 | தொகிவலை | 3,502 | 2,350 | 67.10 | 28 | 0.80 | 148 | 4.23 |
| 54 | திருகோணமலை | 1,775 | 1,190 | 67.04 | 56 | 3.15 | 53 | 2.99 |
| 55 | வலப்பனை | 1,313 | 880 | 67.02 | 06 | 0.46 | 54 | 4.11 |
| 56 | வரமராட்சி | 1,612 | 1,080 | 67.00 | 49 | 3.04 | 52 | 3.23 |
| 57 | மன்னார் | 1,348 | 902 | 66.91 | 18 | 1.34 | 15 | 1.11 |
| 58 | பி[illegible]ராங்கொட | 1,695 | 1,132 | 66.78 | 29 | 1.71 | 70 | 4.13 |
| 59 | வவுனியா | 2,057 | 1,361 | 66.18 | 34 | 1.65 | 57 | 2.77 |
| 60 | கிக்கிராவ | 2,559 | 1,691 | 66.08 | 27 | 1.06 | 112 | 4.38 |
| 61 | சந்தலாய் | 874 | 570 | 65.22 | 07 | 0.80 | 34 | 3.89 |
| 62 | வேலவாய் | 2,719 | 1,762 | 64.80 | 24 | 0.88 | 105 | 3.86 |
| 63 | நதல | 528 | 342 | 64.77 | 02 | 0.38 | 22 | 4.17 |
| 64 | மெனராகல | 2,002 | 1,291 | 64.49 | 22 | 1.10 | 107 | 5.34 |
| 65 | கொத்மலை | 1,370 | 875 | 63.87 | 17 | 1.24 | 56 | 4.09 |
| 66 | நிவித்திகட | 2,093 | 1,331 | 63.59 | 08 | 0.38 | 74 | 3.54 |
| 67 | தொகிரகண்டிய | 903 | 574 | 63.57 | 02 | 0.22 | 39 | 4.32 |
| 68 | கிங்கிராங்கொட | 2,531 | 1,607 | 63.49 | 22 | 0.87 | 115 | 4.54 |
| 69 | கலேவல | 2,388 | 1,516 | 63.48 | 08 | 0.34 | 126 | 5.28 |
| 70 | திருக்கோவில் | 862 | 542 | 62.88 | 07 | 0.81 | 13 | 1.51 |
| 71 | டிப்புளகள | 1,460 | 915 | 62.67 | 01 | 0.07 | 60 | 4.11 |
| 72 | விஜலுவ | 904 | 565 | 62.50 | 02 | 0.22 | 41 | 4.54 |
| 73 | தில்தினிய | 1,749 | 1,093 | 62.49 | 02 | 0.11 | 109 | 6.23 |
| 74 | கெபிடிகொலவ | 1,795 | 1,184 | 2.48 | 02 | 0.11 | 95 | 5.01 |
| 75 | பாசர | 1,06 | 664 | 61.71 | 03 | 0.28 | 46 | 4.28 |
| 76 | ஹம்போல | 3,399 | 2,089 | 61.46 | 26 | 0.76 | 147 | 4.32 |
| 77 | பட்டிருப்பு | 1,442 | 880 | 61.03 | 14 | 0.97 | 32 | 2.22 |
| 78 | மகியங்கன | 899 | 1,151 | 60.93 | 14 | 0.74 | 112 | 5.90 |
| 79 | வவுனியா வடக்கு | 497 | 300 | 60.36 | 00 | 0.00 | 12 | 2.41 |
| 80 | ஹற்றன் | 2,947 | 1,769 | 60.03 | 30 | 1.02 | 68 | 2.31 |
| 81 | மகாஓயா | 584 | 349 | 59.76 | 02 | 0.34 | 26 | 4.45 |
| 82 | வில்கமுவ | 516 | 308 | 59.69 | 01 | 0.19 | 37 | 7.17 |
| 83 | மட்டக்களப்பு | 2,365 | 1,408 | 59.53 | 60 | 2.54 | 112 | 4.74 |
| 84 | முல்லைத்தீவு | 1,158 | 688 | 59.41 | 07 | 0.60 | 53 | 4.58 |
| 85 | தென்மராட்சி | 1,004 | 588 | 58.57 | 12 | 1.20 | 72 | 7.17 |
| 86 | சம்மாந்துறை | 1,351 | 789 | 58.40 | 19 | 1.41 | 53 | 3.92 |
| 87 | புத்தளம் | 5.163 | 2,960 | 57.33 | 33 | 0.64 | 191 | 3.70 |
| 88 | நுவரெலியா | 3,034 | 1,733 | 57.12 | 19 | 0.63 | 141 | 4.65 |
| 89 | வலிகாமம் | 2,853 | 1,570 | 55.03 | 18 | 0.63 | 165 | 5.78 |
| 90 | மூதூர் | 1,235 | 660 | 53.44 | 04 | 0.32 | 48 | 3.89 |
| 91 | மடு | 353 | 187 | 52.97 | 00 | 0.00 | 06 | 1.70 |
| 92 | தீவகம் | 619 | 321 | 51.86 | 00 | 0.00 | 38 | 6.14 |
| 93 | துணுக்காய் | 462 | 239 | 51.73 | 00 | 0.00 | 26 | 5.63 |
| 94 | திருகோணமலைவடக்கு | 599 | 300 | 50.08 | 02 | 0.33 | 64 | 10.68 |
| 95 | கல்குடா | 1,456 | 725 | 49.79 | 09 | 0.62 | 94 | 6.46 |
| 96 | கிளிநொச்சி | 2,105 | 1,038 | 49.31 | 07 | 0.33 | 170 | 8.08 |
| 97 | கின்னியா | 1,349 | 589 | 43.66 | 07 | 0.52 | 92 | 6.82 |
| 98 | மட்டக்களப்பு மேற்கு | 973 | 380 | 39.05 | 00 | 0.00 | 88 | 9.04 |
| | தீவு முழுவதும் | 286,251 | 200,208 | 69.94 | 8,224 | 2.87 | 8,900 | 3.11 |



# உள்ளங்கையில் X வடிவில் கைரேகை இருப்பவர்களின் குணாதிசயங்கள்

தங்களின் கைரேகையில் X வடிவ குறி அமைப்பை உடையவர்கள் மிகவும் வலிமை பொருந்திய குணம் கொண்டிருப்பதாகவும், அவர்களின் விதி அமைவு சிறந்ததாகவே இருக்கும் என்றும் பல ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

X வடிவ குறி அமைப்பைக் கொண்டவர்கள் எந்நாளும் வெற்றி என்ற பாதையில் பயணிப்பார்கள். மேலும் இவர்கள் வெற்றிக்கு இதுதான் தந்திரம் என்று எதையும் பின்பற்றுவதில்லை என்றும் கூறப்படுகிறது. இவர்கள் மனம் சொல்வதைக் கேட்டுப் பயணிப்பவர்களாக இருப்பார்கள்.

X இந்த அமைப்புறுதி கொண்டவர்களிடம் பொய் கூறித் தப்பிப்பதும், துரோகம் செய்வதும் மிகவும் கடினமாக இருக்கும். மேலும், அவர்களது விதி மிகவும் வலுவாக இருக்கும். மன ரீதியாக மட்டுமின்றி, உடல் ரீதியாகவும் இவர்கள் வலிமையாக இருப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் தீர்க்கதரிசன முடையவர்களாகவும் பயன் மிகுந்தவர்களாகவும், அனைத்திலும் தெளிவான பார்வை கொண்டவர்களாகவும், பெரிய தலைவர்களாகவும் இருப்பார்கள், இவர்கள் இறந்த பிறகும் மக்களால் மதிப்பார்ந்து மறக்க முடியாத நிலையைப் பெறுபவர்கள்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1328 –ஆறாம் பிலிப் பிரான்சின் அரசராக முடிசூடினார்

1727 –இரண்டாம் பீற்றர் சார் ரஷ்யாவின் மன்னர் ஆனார்

1798 –300 தொடக்கம் 500 வரையான ஐக்கிய ஐரிஷ் உறுப்பினர்கள் அயர்லாந்து கன்ரி கில்டயரில் பிரித்தானிய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்

1807 –நான்காம் முஸ்தபா, ஒட்டமான பேரரசின் சுல்தான் ஆகாவும் இஸ்லாமின் கலிபா வாகவும் ஆகினார்.

1886– கொக்கோ கோலாவுக்கான முதல் விளம்பரம்,- மருந்தகவியலாளர் ஜோன் பெம்பேர்டனால் அட்லான்டா ஜேர்னலில் வெளியிடப்பட்டது.

1931 –பெனிற்றோ முசோலினியை கொல்ல முயற்சித்ததாக, அமெரிக்கக் குடிமகன் மிச்செல் சிறுவுக்கு இத்தாலிய இராணுவ துப்பாக்கி அணியினரால் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது

1935–எட்மண்ட் ஹிலாரி மற்றும் ஷேர்படென்சிற் நேர்கே ஆகியோர் எவறெஸ்ட் சிகரத்தையடைந்த முதல் மனிதர்களாயினர்.

1964– பலஸ்தீனம் தொடர்பாக முடிவெடுப்பதற்காக அரசு லீக், கிழக்கு ஜெருசெலமில் கூடியது.

1973 –கலிபோர்னியா லொஸ் ஏன் ஜல்ஸ் முதலாவது கறுப்பின மேயராக டொம் பிறட்லி தேர்வானார்

1988–அமெரிக்க அரசதலைவர் றொனால்ட் றீகன், சோவயத் யூனியனுக்கான தனது முதல்ப் பயணத்தைத் தொடங்கினார்.

1999–தேசிய துணைப்படையின் பொறுப்பாளர் ராஸிக் உட்பட 3 பேர் தற்கொலைத் தாக்குதலில் சாவு மட்டக்களப்பில் சம்பவம்.

## வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## அச்சுவேலி
## பதவி விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

### 01) பதவி - கிளை முகாமையாளர்

**சம்பளக் குறியீட்டு இலக்கம்** :- 208 / 15 **நிரந்தரம்**

**சம்பள அளவுத்திட்டம்** :- 13515 - 15815
110x10-120x10

(கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழு சுற்றறிக்கை 13/2015 இன்படி ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி உட்பட ஏனைய அனைத்துக் கொடுப்பனவுகளுடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவும்)

**தேவைப்படும் தகைமைகள்**

அ) கூட்டுறவு பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட தொடர்புடைய துறைப்பகுதியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்ட தொடர்புடைய துறைப்பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம் ) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பிரதான அறிவுறுத்தல்கள்**

1. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
3. விண்ணப்பதாரி 01.01.2017 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய பிரதிகள்.
   அ) கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
   இ) வதிவிட உறுதிப்பத்திரம் ஈ) நற்சான்றிதழ்
   உ) தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு
5. விண்ணப்பங்கள் சங்கத்தால் இதற்கென அச்சிடப்பட்டுள்ளது. சங்க கடமை நேரத்தில் ரூபா 10.00 செலுத்தி சங்கப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
6. தெளிவான எழுத்துக்களில் சரியான விவரங்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 20.06.2017 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாக கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பதவி விண்ணப்பம் தொடர்பான மேலும் விளக்கங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளுங்கள் **021 205 8112**

**தலைவர்,**
**வலி.கிழக்கு வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**அச்சுவேலி.**

(c29087)(11.)

**நாளை**

வைகாசி –16
செவ்வாய்க்கிழமை –30.05.2017
திதி: பஞ்சமி பி.ப. 03.02
நட்சத்திரம்: பூசம் பி.ப.05.53
சுபநேரம்: 10.22–11.52 வரை
ராகுகாலம்: 02.52–04.22 வரை
நமிநந்தியடிகள், சேக்கிழார் குருபூசை

# மீனவர் பிரச்சினைகளுக்கு கூட்டு அரசில் தீர்வுகாண வேண்டும்

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மீனவர்களின் கோரிக்கைகள், மற்றும் பிரச்சினைகள் ஒருபோதுமே தீர்க்கப்படுவதில்லை, அதிகாரிகளும் சரி, கொழும்பு அமைச்சர்களும் சரி அவர்களுடைய பிரச்சினைகளில் தலையிடுவதை முற்றாகத்தவிர்த்துள்ளனர். இதை அண்மைக்காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் எமக்குத் தெட்டத் தெளிவாக உணர்த்துகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு மேல் 73 கிலோமீற்றர் நீளமான கடற்கரையோரம் மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. வெளிச்ச வீடு ஒன்று இன்மையால் ஒவ்வொரு நாளும் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் திசை மாறிச் செல்வதும், உரிய இடத்திற்கு செல்லாது வேறு இடத்திற்கு செல்வதுமாகப் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். இதன் காரணத்தால் வெளிச்சவீடு ஒன்று அமைப்பதற்கான அவசியத்தை அவர்கள் பல தடவைகள் சம்மந்தப்பட்டவர்களிடம் தெரிவித்திருந்தனர். ஆனால் அவர்களுடைய பிரச்சினைகள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. மீனவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினருக்கு இது தொடர்பாகக் கோரிக்கை விடுத்தனர். இந்த விடயம் தொடர்பாக 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அவர்களுடைய முக்கிய கோரிக்கைக்கு ஒரு சதவீதம் கூட தீர்வு வழங்கப்படவில்லை. போரின் போது அழிவடைந்த வெளிச்ச வீட்டை மீண்டும் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு பின்னடிப்பது. மக்களுடைய தேவைகள் தொடர்பாக எவ்வளவு கரிசனையுடன் அரசு செயற்படுகின்றது என்பதைத் தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் து.ரவிகரன் இது தொடர்பான முழுமையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். எனினும் அவரது முயற்சிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கட்டத்திற்கு மேல் அவராலும்( வடக்கு மாகாண சபையாலும்) இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதுள்ளது. இதே போன்றுதான், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடற்படையினரால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுவது, தலைமன்னார் இராமர் அணையில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப் பட்டது, முல்லைத்தீவு நாயாற்றில் தென்னிலங்கை மீனவர்களுடைய படையெடுப்பு மற்றும் அவர்களுடைய அத்துமீறிய தொழில். போன்ற பல முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இன்றுவரை வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடக்கில் உள்ள அரசியல் தலைவர்கள் முயற்சி செய்தால் அவர்கள் இனவாதிகளாகப் பார்க்கப்படுகின்றார்கள். மாறாக பிரச்சினை களைத் தீருங்கள் என்று கொழும்பு அமைச்சிடம் பொறுப்பை ஒப்படைத்தால் அவர்கள் இங்கொன்றும், அங்கொன்றுமாகக் கதைக்கின்றார்கள். கண்கட்டி வித்தை செய்கின்றனர். அதிகாரிகள் இந்தப் பிரச்சினையை தீர்ப்பார்கள் என்று பாரத்தால் அவர்கள் கொழும்புக்குக் கட்டுப்பட்டவர்களாக உள்ளார்கள். எனவே எமது மீனவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பது யார்? அவர்களுடைய கண்ணீரை துடைப்பது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. நல்லாட்சியை விமர்சித்தால் அடுத்த முறை இந்த ஆட்சி கவிழ்ந்து காட்டாட்சி நிலைநாட்டப் பட்டுவிடும். அந்த அரசு ஆட்சியைப் பிடிக்குமாக இருந்தால் எமது மக்களுடைய நிலை அந்தோ கதியாகிவிடும். பிரச்சினைகளைத் தீர்த்தால் நல்லாட்சி எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் நாட்டில் நிலை பெறலாம். இல்லையேல் கடந்த அரச தலைவர் தேர்தலில் ஏற்பட்டதுதான் இந்த ஆட்சிக்கும் ஏற்படும்.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | 4 | | 6 | | 8 | | |
| 3 | 9 | | 8 | 7 | 4 | | 1 | |
| 8 | | | 2 | | 6 | | | 3 |
| 1 | | | | | | | | 2 |
| | | 3 | | | | 4 | | |
| 9 | | | 4 | 3 | 8 | | | 7 |
| | 3 | | 7 | 9 | 5 | | 6 | |
| | | 7 | 6 | | | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 6 | 9 | 3 | 2 | 7 | 1 |
| 3 | 9 | 1 | 8 | 2 | 7 | 4 | 5 | 6 |
| 2 | 7 | 6 | 4 | 5 | 1 | 8 | 3 | 9 |
| 1 | 4 | 2 | 9 | 3 | 8 | 5 | 6 | 7 |
| 7 | 3 | 8 | 5 | 1 | 6 | 9 | 4 | 2 |
| 6 | 5 | 9 | 2 | 7 | 4 | 1 | 8 | 3 |
| 9 | 2 | 4 | 7 | 6 | 5 | 3 | 1 | 8 |
| 8 | 1 | 7 | 3 | 4 | 9 | 6 | 2 | 5 |
| 5 | 6 | 3 | 1 | 8 | 2 | 7 | 9 | 4 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# அனைவரையும் கவர்ந்தார் ஐஸ்வர்யாராய்

கேன்ஸ் படவிழாவில் புதிய வடிவங்களில்உடைகளைஅணிந்து வந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார் ஐஸ்வர்யாராய்.

'கேன்ஸ்' திரைப்பட விழா பிரான்ஸ் நாட்டில் உள்ள 'கேன்ஸ்' நகரில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இதில் உலக சினிமா பிரபலங்கள் கலந்து கொள்வார்கள். இந்த ஆண்டுக்கான 'கேன்ஸ்' படவிழா நடைபெற்றது. இந்த விழாவில் முன்னாள் உலக அழகியும், இந்தி நடிகையுமான ஐஸ்வர்யாராய் கலந்து கொண்டார். அப்போது அவர் சிவப்புக் கம்பளத்தில் புதிய கண்கவர் வடிவத்துடன் கூடிய உடைகள் அணிந்து ஒய்யாரமாக நடந்தார். இரு நாள்கள் நடைபெற்ற விழாவில், ஐஸ்வர்யாராய் பங்கேற்றார். முதல்நாள் விழாவில் 'சின்ட்ரெல்லா' போன்று வெளிர்நிற கவுன் உடை அணிந்து ஒரு இளவரசி போன்று நடந்து வந்தார். அது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்த உடை மைக்கேல் சின்கோ என்பவரால் வடிவமைக்கப்பட்டது. கடந்த 16 ஆண்டுகளாக கேன்ஸ் திரைப்பட விழாவில் ஐஸ்வர்யாராய் கலந்து கொள்கிறார். ஒவ்வொரு வருடமும் புது விதமான அழகுமிளிரும் வண்ண உடைகளை அணிந்து வந்து கலக்கி வருகிறார். இது ஒருபுறம் இருக்க கேன்ஸ் படவிழாவில் கலந்து கொண்ட மாடல் அழகி ஒருவருக்குத் திடீரென ஆடை விலகியது. அது அனைவரையும் முகம் சுழிக்க வைத்தது.








## என்னத்தச் சொல்ல...

ஒரு அதிகாலைப்பொழுது! கணவன் மனைவியை எழுப்பி கேட்டான்.
"டியர்... யோகா பண்ணப்போறேன்... நீயும் வாறியா?"
கணவனை வித்தியாசமாக பார்த்த மனைவி, "ஓ... அப்படின்னா நான் குண்டா இருக்கேன்! உடம்பைக் குறைன்னு சொல்றீங்க..அப்படித் தானே?"
கணவன்: "அதுக்கில்லைம்மா! யோகா பண்றது உடம்புக்கு நல்லது!"
மனைவி: "அப்போ என்னை நோயாளின்னு சொல்றீங்களா?"
கணவன்: "இல்லை இல்லை! நீ வரவேணாம். விடு!"
மனைவி: "அப்ப என்னைச் சோம்பேறின்னு நினைக்கிறீங்க!"
கணவன்: "ஐயோ இல்லை! ஏன் எல்லாத்தையும் தப்பாவே புரிஞ்சுக்கிற?"
மனைவி: "இவ்வளவு நாளாப் புரிஞ்சுக்காமத் தான் இருந்தேனா?"
கணவன்: "மறுபடி பாரு.. நான் அப்படிச் சொல்லலை!"
மனைவி: அப்படிதான் சொன்னீங்க! அப்ப என்ன நான் பொய் சொல்றேனா?"
கணவன்: "தயவு செஞ்சு விடு! காலங்காத்தால ஏன் சண்டை?"
மனைவி: "ஆமாங்க... நான் சண்டைக்காரி தான்!"
கணவன்: "ஓகே! நானும் போகேல. போதுமா?"
மனைவி: "உங்களுக்குப் போக அலுப்பு! அதுக்கு என்னை குற்றம் சொல்றீங்க
கணவன்: "சரி, நீ தூங்கு! நான் தனியா போய்க்கிறேன்! சந்தோஷமா?"
மனைவி: "அதானே... உங்களுக்கு எங்க போனாலும் தனியா போய் ஜாலி பண்ணணும்! அதுக்குதானே இவ்வளவும் பேசுனீங்க?"
கணவன்: வேணா.. நான் அழுதுருவேன்
மனைவி அப்ப நான் தான் உங்களை அழ வைக்கிறேனா..
கணவன்:?????????






*T.Thileepan* @thilee
ஒரு இடத்தில் முடிந்து
இன்னொரு இடத்தில்
ஆரம்பிப்பதுதான்
வாழ்க்கை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**இடபம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர். பெண்கள் குடும்பநலனுக்காகப் பாடுபடுவர்.

**மிதுனம்:** புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகைப் பெற்று மகிழ்வர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**கடகம்:** லட்சிய நோக்கத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடிப்பர். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழிலில் விடா முயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**கன்னி:** நல்லவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்குப் பாராட்டு, வெகுமதி வந்து சேரும்.

**துலாம்:** திறமையை வெளிப்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். பணியா ளர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவுடன் முன்னேறுவர்.

**விருச்சிகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**தனுசு:** அவசரப் பணியால் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உறவினர் வகையில் உதவி உண்டு.

**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்தி கரமாக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவர்.

**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியை விரைந்து முடிப்பர். பிள்ளைகளால் உதவி உண்டு.

# ஒழுக்கம்



பெற்றவர் இடத்தில் மரியாதை
பெரியவர் இடத்தில் மரியாதை
கற்றவர் இடத்தில் மரியாதை
காட்டி நடப்பது ஒழுக்கம் என்போம்

நன்மை பயக்கும் சொல்லோடு
நல்லோர் போற்றும் செயலோடு
உண்மை பேசும் துணிவோடு
உலகில் வாழ்வது ஒழுக்கம் என்போம்

மாறும் சுற்றுச் சூழ்நிலையை
மாசுகள் ஆக்கிக் கெடுக்காமல்
போற்றும் பொதுச் சொத்தை அழிக்காமல்
பேணிக் காப்பதை ஒழுக்கம் என்போம்

உதவிக் கரங்கள் நீட்டிடவும்
ஊரார் எம்மைப் போற்றிடவும்
பதவி, பெருமை காத்திடவும்
பக்குவம் செய்யும் ஒழுக்கம் என்போம்

ஒழுக்கம் விழுப்பம் தருவதால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்ற
குறள்வழி நாளும் நாம் வாழ்ந்து
குவலயம் தன்னில் உயர்வடைவோம்



# அனுபவம் தந்த பாடம்



கண்ணன் ஒரு துடிப்பான மாணவன். அவன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். அவனிடம் பல நல்ல பண்புகள் இருந்தன. ஆனாலும் அவனிடம் ஒரு தீய பழக்கமும் இருந்தது. அதாவது பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தலாகும். பொதுச் சொத்துக்கள் என்பது நாட்டில் உள்ள அனைவரும் பயன்படுத்தும் பொருட்டு அந்த நாட்டு அரசினால் வழக்கப்படும் பொருட்களாகும். அவற்றைச் சேதப்படுத்துவது என்பது கண்ணனுக்கும் அவனது குறும்புக்கார நண்பர்கள் சிலருக்கும் மிக்க மகிழ்ச்சியான விடயம். பேருந்துகளில் ஏறினால் அவற்றின் இருக்கைகளை பிளேட் கொண்டு தாறுமாறாகக் கீறிக் கிழித்து றப்பர் பஞ்சுகளைப் பறக்கவிடல். அங்கே பொருத்தப்பட்டிருக்கும் மின்குமிழ்களைக் கழற்றியெடுத்தல், நூல் நிலையம் சென்றால் வாசிக்கும் புத்தகங்களின் பக்கங்களைக் கீறிக் கிழித்து சேதப்படுத்தல் அல்லது 3,4 பக்கங்களைக் கிழித்தெடுத்து வருதல், பூங்காக்கள் சென்றால் பூங்கன்றுகளைப் பூக்களோடு சேர்த்து முறித்துச் செல்லல், பொதுக் கிணறுகளில் வெற்றுப் பேணிகள், தடி, தண்டுகளை வீசுதல் மற்றும் வகுப்பறைகளில் மேசை, கதிரைகளின் கால்களைச் சேதப்படுத்தல், மேசைகளில் பேனை மைகளை ஊற்றியும் கிறுக்கியும் விடல் இப்படியான பல தப்பான செயல்களைச் செய்வதும் உரியவர்களிடம் பிடிபட்டு சிறுவர்கள் என்று சிறு தண்டனைகளுடன் தப்பி விடுவதுமாக அவர்களது காலம் ஓட்டிக் கொண்டிருந்தது. பெற்றோர்களும், பாடசாலை, அதிபர், ஆசிரியர்களும் கூட பலவாறு புத்திமதிகள் கூறியும், பல முறை எச்சரிக்கை செய்தும் அவர்கள் திருந்துவதாக இல்லை. கண்ணனும் நண்பர்களும் இனிமேல் அப்படிச் செய்வதில்லை என பல முறை முடிவெடுத்திருந்தபோதிலும், பழகிப்போன விடயத்தை அவர்களால் இலகுவில் மாற்ற முடிய வில்லை.

அன்று பாடசாலையில் பரிசளிப்பு விழா. விழா முடிவடைய இரவு 7 மணியாகிவிட்டது. நல்ல அமாவாசை இருட்டு. நண்பர்கள் யாவரும் தமது சைக்கிள்களில் புறப்பட்டு ஒவ்வொருவராக தமது வீடுகளைச் சென்றடைந்து கொண்டிருந்தனர். இறுதியில் கண்ணனோடு இருவர்மட்டும்தெருவில்விரைந்து கொண்டிருந்தனர். இரண்டு பாதைகள் பிரியும் இடத்தில் கண்ணன் சைக்கிளைத் திருப்பினான். அங்கு வெளிச்சம் இல்லாததால் சைக்கிள் அங்கிருந்த பாலத்தின் கட்டில் மோதியது. கண்ணன் 'ஐயோ' என்று அலறியபடி குப்புற விழுந்தான். நெற்றியில் இருந்து இரத்தம் வடியத் தொடங்கியது. உடனே நண்பர்க்ள இருவரும் தம் கைக்குட்டைகளை நீரில் நனைத்து காயத்துக்கு கட்டுப்போட்டு கண்ணனைக் கைத்தாங்கலாக வீடு வரை அழைத்துச் சென்றனர். எதிரே டோர்ச் வெளிச்சத்துடன் வந்த பெரியவர் ஒருவர் மாணவர்களிடம் நடந்ததை விசாரித்துவிட்டு "தம்பிமாரே! இந்த இடத்தில் நல்ல பிரகாசமான மின் விளக்குகள் இரண்டு பொருத்தப்பட்டிருந்தன. யாரோ சுயநலம் பிடித்த விசமிகள் அவற்றைக் கழற்றிச் சென்றுவிட்டார்கள். அதனால்தான் இந்தப் பையனுக்கு இந்தக் கதி ஏற்பட்டது" என்று கூறி விசமிகளைத் திட்டியபடி சென்றார் .
பெரியவரின் வார்த்தைகள் கண்ணனின் காதுகளில் விழ தானும் நண்பனொருவனும் சேர்ந்து இரண்டு நாட்கள் முந்தி அந்த மின்குமிழ்களை கழற்றிச் சென்ற இழிவான செயலை எண்ணி அவன் தனக்குள்ளே வெட்கமடைந்ததோடு தன் செயல் தனக்கே வினையானதை எண்ணி மனம் நொந்தபடியும் நடந்துகொண்டிருந்தான்.
பெற்றோரால் ஆசிரியர்களால்
திருத்த முடியாதுபோனவன்
தன் அனுபவத்தால்தானே திருந்தினான்.

**தன் வினை தன்னைச் சுடும்**
**பொதுச் சொத்துக்களைப் பேணுவோம்.**



# சொர்க்கம்

பெர்னாட்ஷா பள்ளியில் படித்துக் கொண்டிருக்கையில் அவருடன் கூடப் படிக்கும் சக மாணவர்கள் தினமும் அவரை மட்டம் தட்டிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.
அவர்களுக்குப் பாடம் புகட்ட சரியான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தார் பெர்னாட்ஷா.
ஒரு நாள் வகுப்பாசிரியர் மாணவர்களைப் பார்த்து உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புவர்கள்எழுந்து நில்லுங்கள்" என்றார்.
உடனே பெர்னாட்ஷாவைத் தவிர, அனைவரும் எழுந்து நின்றனர்.
ஆசிரியர் "உனக்கு மட்டும் சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லையா" என்று ஷாவிடம் கேட்டார்.
உடனே பெர்னாட்ஷா " எனக்கு விருப்பம் தான். ஆனால் இவர்களெல்லாம் சொர்க்கத்துக்குப் போன பிறகு அது சொர்க்கமாகவா இருக்கும்" என்றார்.
மாணவர்கள் தலைகுனிந்தனர்.



## ஆழ்ந்த உறக்கமே நற்பயன் தரும்

மனிதர்களின் தூக்க நேரம் ஆளுக்காள் வேறுபடும். கவலையாலும், மனஇறுக்கத்தினாலும் தளர்ந்து போனவர்கள், வாழ்க்கைப் பிரச்சினைகளை மிக அமைதியாகவும் தைரியமாகவும் சந்திக்கும் நபர்களை விட அதிகநேரம் தூங்க வேண்டும்.
பெரியவர்கள் இரவில் எட்டு மணி நேரம் தூங்க வேண்டும். சிறுவர், சிறுமியர் அவரவர் வயதுக்கேற்ப பத்துமுதல் பன்னிரண்டு மணிநேரம்வரை தூங்க வேண்டும். எத்தனை மணிநேரம் தூங்குகிறோம் என்பது நமக்குக் கிடைக்கும் நன்மைகளைத் தீர்மானிப்பதில்லை. எவ்வளவு ஆழ்ந்த உறக்கம்எமக்குக் கிடைத்தது என்பதினால்தான் நமக்குத் தூக்கத்தால் கிடைத்த நற்பயனை அளவிட முடியும்.

## துண்டு அறிக்கை

## மாணவர்களே!

★ அரசு இலவசமாக உங்களுக்குப் புத்த கங்களை வழங்குகின்றது.

★ இலவசமாக வழங்கப்படும் புத்தங்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை அல்லவா!

★ புத்தகங்களுக்கு உறை போட்டு கவனமாகப் பயன்படுத்துங்கள்


★ அடுத்த வருடம் இந்தப் புத்தகங்களை ஏனைய மாணவர்களும் பயன்படுத்த வேண்டும் அல்லாவா?

★ இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள்தானே என அலட்சியம் செய்யாதீர்கள்

**'புதிய புத்தகங்களைப் பாதுகாத்து அடுத்த வருடம் புதிதாக வரும் மாணவர்களுக்கு கொடுப்போம்' என உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.**

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## வழிகாட்டுவோம்



## பேரிடர்...

தென்பகுதி மாவட்டங்களில், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைக்கு உதவுமாறு அரசு பகிரங்கக் கோரிக்கை விடுத்திருந்தது.

அமெரிக்கா, இந்தியா, உலக சுகாதார நிறுவனம் என்பன ஏற்கனவே இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளன.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்களை வெளியிட்டுள்ள சீன அரச தலைவர், இலங்கைக்கு 2.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அறிவித்துள்ளார். (த-5)

## அப்பாத்துரை...

கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் நேற்றுக் காலமானார். இறுதிக் கிரியைகள் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சிறுநீரகப் பாதிப்பால் அவதிப்பட்டு வந்த அவர், கொழும்பிலுள்ள அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பயனளிக்காது நேற்று மதியம் அவர் காலமானார். அவரது உடல் அஞ்சலிக்காக கொழும்பில் இன்று மாலை வரையில், ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்படும். இன்று மாலை கொழும்பிலிருந்து அவரது உடல் எடுத்து வரப்பட்டு கொக்குவிலில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க் கிழமை 11 மணிக்கு நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனத்துக்காக அவரது உடல் எடுத்துச் செல்லப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

1933ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி பிறந்த இவர், ஜி.ஜி.பொன்னம்பலம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி ஆரம்பித்த காலம் தொடக்கம் அவருடன் இணைந்து செயற்பட்டு வந்தார். பிரபல சட்டத்தரணியாகவும் பணியாற்றிய இவர், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல இளையோரை மீட்டெடுத்தார்.

1989ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 2000ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னர் தமிழ்க் கட்சிகள் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் 2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். இதன்போது காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 2004ஆம் ஆண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மாற்றம் கண்ட பின்னர், வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார்.

2010ஆம் ஆண்டு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். எனினும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 2015ஆம் ஆண்டு தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. (வ-5-101)

### தவறிவிட்டது

தட்டாதெருவிற்கும், மானிப்பாய் ஆலடி சந்திக்கும் இடையில் பெண்களுக்குரிய 1 3/4 பவுன் தங்க கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்துத்தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 8445 788, 077 3063 194

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் இருந்து 1 km இல் கச்சாய் வீதியின் அருகில் பெரியமாவடியில் அமைந் துள்ள 6 பரப்பு 9 1/2 குளியுடன் T வடிவில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. முகவர் கள் இல்லாது நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 077 493 3959

### விற்பனைக்கு

பலாலி வீதியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் கரந்தன் வீதியருகில் 17 1/2 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. இதில் விவசாயப்பண்ணை, வீடு போன்றவை அமைக்கலாம். தொடர்பு-077 949 5267

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 . 07 . 1938 | 12 . 06 . 2011 |

## திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை

[திதி: வளர்பிறை ஏகாதசி]

நந்தவனத்தை நீங்கள் விட்டுச் சென்று ஆண்டுகள் ஆறு ஆனதம்மா. அன்பின் தெய்வமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குறையில்லாது எமை வளர்த்த எம் அம்மாவே! நீங்கள் இல்லாது வாடி நின்றோம். இன்று தந்தையையும் உம்மிடம் அழைத்தது ஏனம்மா எத்தனை காலங்கள் கடந்தாலும் ஒவ்வொரு நொடிகளிலும் உங்கள் நினைவுதான் எங்கள் இதயத்துடிப்பாய் என்று எம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர பெருமானது பாதங்களை வணங்கி நிற்கின்றோம்.

ஸ்ரீரங்கம்,
374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.05.2017 | 2138 | ஊதா |

மகரம் 04 05 32 51

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி ரூ 24, 89, 580/=

2017.05.30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

Galaxy Star


வெற்றி வாரம் 163 திகதி 28.05.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
05 15 51 59 60

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,649,976/-

தொ.பே 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919
31.05.2017 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் இராசையா சின்னராசா

(யாழ்.வவுனியா கராஜ் உரிமையாளர் - ரிங்கர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.09.1953 | 29.04.2017 |

கடந்த 29.04.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் இராசையா சின்னராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.05.2017) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

46, சங்கிலியன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.- 077 502 0610

மனைவி,
பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1928.01.12 | 2017.04.29 |

## சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

**திதி - சதுர்த்தி**

வண்ணார் பண்ணையில் திடம் கொண்ட எம் தெய்வமே
அன்பின் பொக்கிஷமாய் பாசத்தின் சொருபமாய்
இல்லறத்தை நல்லறமாக நடாத்தி எம்மை யெல்லாம்
மண்ணுலகில் சீரும் சிறப்புமாய் வளர்த்தெடுத்த - எம் ஐயாவே
உங்களை நாம் இழந்த துயரை இன்று வரை ஈடு செய்ய
முடியாமல் தவிக்கின்றோம் ஐயா உம்மைப்போல் பாசம்காட்ட இனி
யாரும் இல்லை எம் வாழ்வில் ஐயா. புவிதனிலே சிறந்த
குடும்பதலைவனாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் ஐயாவே
எமையெல்லாம் துயர்தனிலே ஆழ்த்திவிட்டு தனிமையில் சென்றது தான்
ஏனையா என்றும் அழியப் போவதில்லை உம் நினைவுகள் எம்
நெஞ்சங்களில் இருந்து மண்ணுலகம் தனிலே சிவனும் பார்வதியுமாய்
வழிகாட்டிய எம் தெய்வங்களே இன்று விண்ணுலகம் சென்றும் நாம்
சிறப்பாய் வாழ வாழ்த்துவீர்கள் என உங்கள் ஆத்மா
சாந்தியடைய வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர பெருமானது
பாதங்களை வணங்கி நிற்கின்றோம்

**இன்று (29.05.2017) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குறிப்பு - இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.**

ஸ்ரீரங்கம்,
374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பாசத்துடன் நினைவுகூரும் : குடும்பத்தினர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா கந்தையா



புகையிரதநிலைய வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கந்தையா கடந்த (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வைத்தியலிங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புமனைவியும் சுப்பிரமணியம் (சிறாப்பர் கனடா), பூமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரநாதன், ரஞ்சனாதேவி (தேவி), ரவிராஜ், பவானி, சுகந்தி, வரதராஜ், ஆனந்தராஜ் ஆகியோரின் அன்புத் தாயும் கலாபவனி, காலஞ்சென்றமுத்துக்குமாரசுவாமி, பராசக்தி, ஸ்ரீகாந்தன், சுகுமார், சித்ரா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமியும் நிரூபன், மயூரன், பிரதீபா (தீபா), யதுநந்தனன் (யது), மதுராந்தகன் (மது), வருண், நிவேக், விபூசன், சாதுலா, பிரியந், சினேகா, ஐஸ்வர்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் Raiya, Prena, Gyan, அபிநயா, வாருசா, வர்ணிகா, மாயா, சோனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப.8.30 மணியளவில் கோண்டாவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.**

**தகவல்:
குடும்பத்தினர்.
0212225827**

### வடக்கை...

இந்த நாட்டின் இறைமைக்கு எதிராக அச்சமின்றிப் பேசுகின்றனர். படையினருக்கு எதிராகப் பேசுகின்றனர். ஆறு மாதங்களுக்குள் படையினரை அங்கிருந்து அகற்றாவிட்டால் பலவந்தமாக விரட்டுவோம் என்று கூறுகின்றனர்.

வடக்கு மாகாணத்தைத் தற்போது புலிகள் தான் ஆட்சி செய்கின்றனர் . அதனால்தான் இவ்வாறு துணிகரமாகப் பேச முடிகிறது. பொலிஸ் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகின்றது. அரச தலைவரினதும் தலைமை அமைச்சரினதும் முன்னிலையில்தான் இவையெல்லாம் நடக்கின்றன.

மகிந்தவின் ஆட்சியில் இப்படியொரு நிலைமை தோன்றவில்லை. அச்சமற்ற வடக்கை மகிந்த உருவாக்கிக் கொடுத்திருந்தார். ஆனால், இப்போது வடக்கு முழுவதும் அச்சத்தால் சூழ்கியுள்ளது. இனவாதக் கருத்துக்களும் பிரிவினைவாதக் கருத்துக்களும் அங்கு மேலோங்கத் தொடங்கியுள்ளன.

மீண்டும் பழைய யுகத்தை நோக்கியே இந்த நாடு நகர்கின்றது. அரச தலைவர் தேர்தலில் தமக்கு ஆதரவாக வாக்களித்தார்கள் என்பதற்காக இவ்வளவு தூரம் நாட்டைக் காட்டிக்கொடுக்கத் தேவையில்லை - என்றார்.

(கு-4-3)

**வேலணை மேற்கு**
**பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார்**
**(முடிப்பிள்ளையார்) கோயில்**
**மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2017**

29.05.2017 கணபதி ஹோமம் காலை 8 மணி
30.05.2017 கொடியேற்றம் காலை 10.30 மணி
07.06.2017 சப்பரத்திருவிழா இரவு 7 மணி
08.06.2017 இரதோற்சவம் காலை 9.30 மணி
09.06.2017 தீர்த்தோற்சவம் காலை 8 மணி

உற்சவ காலத்தில் ஐங்கரன் அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய பரிபாலனசபையினர்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி
### இமெல்டா சவரிமுத்து (தி.க)



கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரி இமெல்டாசவரிமுத்து நேற்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அவரின் இறுதிச் சடங்கு கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவை கன்னியர் மட சிற்றாலயத்தில் நாளை (30.05.2017) செவ்வாய்க் கிழமை மு.ப. 11 மணிக்கு திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் :
அருட்சகோதரி கிளேயா சுவானி,
மாகாணத் தலைவி

### முல்லைக்...

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவுக் கடற்பரப்பில்கடும் காற்று வீசுகின்றது. சுமார் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதன் காரணமாக மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 400 மீன்பிடிப் படகுகள் உள்ளன. இருப்பினும் கடந்த இரு நாட்களாக 150 படகுகள் மட்டுமே தொழிலுக்குச் சென்றன. அவ்வாறு சென்ற மீனவர்களும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே தொழிலில் ஈடுபட்டனர். ஏனைய மீனவர்கள் கடல் காற்றின் காரணமாக அச்சத்தில் தொழிலுக்குச் செல்லவில்லை. இந்த நிலைமை மேலும் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுவதனால் மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிக்கப்படும். இயற்கையின் சீற்றம் தொடர்பில் தொடர்ந்தும் அவதானித்த வண்ணமே உள்ளோம் என்றார்.

(வ-101)

### இலங்கையில்...

எஸ்.ஆர். ஜயசேகர தெரிவித்தார். இடர் முகாமைத்துவ மைய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

வங்காள விரிகுடாவின் மையப் பகுதியிலுள்ள அழுத்தத்தின் காரணமாக வலுவடைந்து சூறாவளியாக உருவெடுத்து வடக்குத் திசையை ஊடறுத்து பங்களாதேஷ் வரை பயணிக்கும் என்று தற்போதைக்கு வானிலை அவதான மையத்தின் அறிக்கைகள் கூறுகின்றன.

அதனால் நாட்டில் மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் காலி மாத்தறை உள்ளிட்ட கடற்பகுதியை அண்டிய பிரதேசங்களில் காற்றின் வேகம் சடுதியாக அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

25 ஆம் திகதி போன்ற பாரதூரமான நிலைமை தற்போதைக்கு இல்லாவிடினும் காற்றின் வேகம் அதிகரிப்பதைப் பொறுத்தே நிலைமையைத் தீர்மானிக்கவேண்டும். மேற்படி நிலைமை குறித்து ஆராய புதிய இயந்திரங்கள் பொருத்தபட்டிருந்தாலும் 24 மணித்தியாலத் தொடர் மழையின்போது அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வது கடினமாக உள்ளது - என்றார்.

(த-5)

### ஞானசாரருக்கு...

இவ்வாறு பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசாரதேரர் தெரிவித்தார்.

இந்த முறை சிறைக்கு செல்லும் போது நான் தனியாகப் போகமாட்டேன். விக்னேஸ்வரன், அசாத் சாலி, முஜிபுர் ரஹ்மான், ரிசாட் பதியுதீன் அல்லது ரவூப் ஹக்கீம் ஆகியவர்களில் ஒருவருடன்தான் இம்முறை நான் சிறைக்குச் செல்வேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இணையத் தளம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"கைதாகவோ, சிறைக்குச் செல்லவோ அல்லது உயிர்துறக்கவோ பயம் உள்ள ஒரு தேரர் அல்ல நான். எல்லாவற்றுக்கும் ஒரு ஒழுங்கு காணப்படுகிறது. அடிப்படை வாதிகளைத் திருப்திப்படுத்த நாய் போல் என்னைக் கைது செய்ய இடமளிக்க முடியாது.

சிங்களவர்களுக்காக வேலை செய்து ஒரு போதும் எமக்கு நல்லவர்களாக உயிரிழக்க முடியாது. தர்மபால தேரருக்கும் அதே நடந்தது. எம்மை எங்காவது கொலை செய்து போட்டால், ஒரு கொடியாவது போடமாட்டார்கள். அதுதான் பெரும்பான்மையரன சிங்களவர்களின் நிலை. என்றாலும் எமக்கு அன்பு செலுத்தும் ஒரு பிரிவினர் உள்ளனர். அவர்களையாவது ஒரு இலக்கை நோக்கிப் பயணிக்க நாம் பாடுபட வேண்டும்" என்று பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞான சார தேரர் மேலும் தெரிவித்தார்.

(வ-5)

## 31 ஆம் நாள் நினைவேந்தலும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் உதித்தது
05 . 10 . 1945

விண்ணில் மறைந்தது
01 . 05 . 2017

### அமரர் கந்தவனம் சிவகுருநாதன்
### (சித்தப்பா)

*(இளைப்பாறிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - தென்மராட்சி, மருந்தாளர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்)*

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (29.05.2017) காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 31.05.2017 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

*நேரில் அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இவ்வறிவித்தலை தயவு கூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

“ [illegible] ”
[illegible] மேற்கு,
சாவகச் சேரி.

குடும்பத்தினர்.
021 227 0337/
077 318 5779

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை தில்லைநாதன்
### (ராணி)



மலர்வு 07.10.1955
உதிர்வு 26.05.2017

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், மல்லாவி 4 ஆம் யூனிற், கனடா Scabrough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை தில்லைநாதன் (26.05.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - கற்பகம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்புமருமகளும் தில்லைநாதன் (கனடா) அவர்களின் அன்புமனைவியும் நிர்மலா (தாண்யா - கனடா), பிரதீபா (தீபா - கனடா), சத்தியா ( இந்திரா - கனடா), சத்தியன் (கனடா) காலஞ்சென்ற நிரோஜன் ஆகியோரின் அன்புத் தாயும் பேரம்பலம் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை (செல்லத்துரை.) தியாகராஜா ( காந்தி) மற்றும் சுப்பிரமணியம் (மணியம்), குணசிங்கம் (வெள்ளை), நடராஜா (மூர்த்தி), கமலநாதன் (சந்திரன்), யோகநாதன் (யோகன் - லண்டன்), சண்முகநாதன் ( குமா - லண்டன்), மகேந்திரன் ( லிங்கம் - கனடா), யோகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தவமணிதேவி (கனடா) அவர்களின் மைத்துனியும் காலஞ்சென்ற பேரின்பநாயகம் (அரிச்சந்திரன் - ஆஸ்திரேலியா) மற்றும் கனகலிங்கம் (பாலன் - கனடா), லோகநாதன் (கனடா), தேவநாதன் (கனடா), சரோஜினிதேவி (ஐக்கிய அமெரிக்கா), கைலாயநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு அண்ணியும் சரஸ்வதி, யோகபத்மாவதி (லண்டன்), சந்திராதேவி கலாமதி (சுவிஸ்), மாலினி, கமலாம்பிகை, சந்திரமணி, பத்மாவதி (லண்டன்), [illegible]யாநிதி (லண்டன்), வனஜா (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முத்துக்குமாரு சுப்பிரமணியம் (மணியம்)
+ சகோதரர்கள்

077 974 2305

## வெள்ள...

அத்துடன், 250 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 785 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் நிலையம் குறிப்பிட்டது.

இடர் முகாமைத்துவ மைய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

*இரத்தினபுரி*

இரத்தினபுரி மாவட்டத்தில் 16 ஆயிரத்து 389 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 71 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் காயமடைந்துள்ளனர். 20 பேர் காணாமற்போயுள்ளனர். 42 வீடுகள் முழுமையாகவும், 269 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 134 நலன்புரி நிலையங்களில், 7 ஆயிரத்து 642 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 248 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*களுத்துறை*

களுத்துறை மாவட்டத்தில் 21 ஆயிரத்து 346 குடும்பங்களைச் சேர்ந்த 78 ஆயிரத்து 933 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 47 பேர் உயிரிழந்துள்ளனர். 69 பேர் காயமடைந்துள்ளனர். 62 பேர் காணாமற்போயுள்ளனர். 53 வீடுகள் முழுமையாகவும், 765 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 46 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 398 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 272 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*மாத்தறை*

மாத்தறை மாவட்டத்தில் 23 ஆயிரத்து 530 குடும்பங்களைச் சேர்ந்த 85 ஆயிரத்து 969 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 14 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 17 பேர் காணாமற்போயுள்ளனர். 16 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 25 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன். 29 நலன்புரி நிலையங்களில் 7 ஆயிரத்து 676 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 479 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*காலி*

காலி மாவட்டத்தில் 36 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 142 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ளனர். 10 பேர் காணாமற்போயுள்ளனர். 88 வீடுகள் முழுமையாகவும், 259 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 6 நலன்புரி நிலையங்களில் 525 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 218 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*அம்பாந்தோட்டை*

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆயிரத்து 73 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 827 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் காயமடைந்துள்ளனர். 23 வீடுகள் முழுமையாகவும், 88 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 8 நலன்புரி நிலையங்களில் 250 குடும்பங்களைச் சேர்ந்த 938 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*கம்பகா*

கம்பகா மாவட்டத்தில் 8 ஆயிரத்து 155 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 357 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 2 வீடுகள் முழுமையாகவும், 55 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 43 நலன்புரி நிலையங்களில் 5 ஆயிரத்து 48 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 918 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*கேகாலை*

கேகாலை மாவட்டத்தில் ஆயிரத்து 439 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 262 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்துள்ளனர். 2 பேர் காணாமற்போயுள்ளனர். 9 வீடுகள் முழுமையாகவும், 54 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 22 நலன்புரி நிலையங்களில் 576 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 2[illegible] பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*கொழும்பு*

கொழும்பு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 56[illegible] குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 37[illegible] பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ளனர். 7 வீடுகள் முழுமையாகவும் 25 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 28 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 467 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 225 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

*மாத்தளை*

மாத்தளை மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (வ-5)

## 3 நாள்களுக்கு...

"நாட்டின் தென்மேற்குப் பிரதேசத்திலேயே அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகக் கூடிய வாய்ப்புள்ளது.

மேல்மாகாணம், சப்ரகமுவ, தென் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை ஏற்படக்கூடும்.

சில இடங்களில் சுமார் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி இடம்பெறக்கூடும். கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை வேளையில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடி மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஊடாக அடிக்கடி 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். மழை பெய்யும் பொழுது இந்தக் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கக் கூடும்" என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இடி, மின்னல் தொடர்பில் ஏற்படும் இடர்களைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் கடல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், தென்மேற்குப் பருவகாலநிலை நாட்டின் ஊடாகவும் நாட்டைச் சுற்றியும் உள்ள கடற்பிரதேசத்தில் வலுவடைந்து இருப்பதனால் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கக் கூடும். இதனால் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

நாட்டின் தென்பகுதியைப் புரட்டிப் போட்ட மழை கடந்த இரு தினங்களாகச் சற்றுக் குறைவடைந்திருந்தது. இதனால் மீட்பு பணிகள் மற்றும் நிவாரண விநியோகம் என்பன துரிதமாக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் மீண்டும் மழை பெய்யக் கூடும் என்பதால், இடர் இன்னும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-5,10)

## ஆலயமானாலும்...

பெறப்பட்ட அங்கீகாரத்துக்கு மேலதிகமாக அமைக் கப்பட்ட கட்டடம் ஆகியவற்றுக்கு எதிராக சாவகச்சேரி பிரதேச சபையால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மட்டுவில் தேவாலய வீதியிலிருந்து பனையடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு செல்லும் சந்தியில் முன்னர் நின்ற மரத்தின் கீழ் சூலம் வைத்து இந்து மக்கள் வழிபட்டு வந்தனர். வீதி அகலிப்புக்காக அண்மையில் மரம் அகற்றப்பட்டதையடுத்து, அந்த இடத்தில் ஊர் மக்கள் சிலர் சந்தியில் சிறிய கட்டடம் அமைத்து பிள்ளையார் சிலையை கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி நிறுவி வழிபட்டு வந்தனர்.

புதிதாக கட்டடம் அமைக்கப்பட்ட இடத்தின் காணி உரிமையாளர் கட்டடத்தை அப்புறப்படுத்துமாறு பிரதேச சபைக்கு முறையிட்டார். அனுமதி பெறப்படாமல் கட்டடம் அமைக்கப்பட்டமைக்கு எதிராக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் சாவகச்சேரி பிரதேச சபை வழக்குத் தாக்கல் செய்தது.

இந்த வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் கடந்த 25ஆம் திகதி வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கைப் பரிசீலனை செய்த நீதிபதி,

"பிரதேச சபையின் அனுமதியின்றி ஆலயக் கட்டடமாயினும் அமைக்கக்கூடாது. புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை 3 மாதங்களுக்குள் அப்புறப்படுத்த வேண்டும். பிரதேச சபையிடம் உரிய அனுமதியைப் பெற்று கட்டடத்தை அமைக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்

நாவற்குழி பௌத்த விகாரை அமைக்கும் இடம் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ளமை நினைவிற் கொள்ளத்தக்கது.

இதேவேளை, கொடிகாமம் பகுதியில் சுற்று மதில் அமைக்க சபை அனுமதித்ததைவிட மேலதிகமாக 5 அடி தூரத்துக்கு கட்டடப்பட்டமை தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி, "சபையால் அனுமதி வழங்கப்பட்ட அளவைவிட மேலதிகமாக புதிதாக கட்டடம் அமைக்கக்கூடாது. அவ்வாறு அமைப்பதாயின் அதற்கும் சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். எனவே சபையின் அனுமதி பெறப்படாமல் மேலதிகமான அமைத்த மதில் சுவரை உடைக்க வேண்டும்" என்று காணி உரிமையாளருக்கு உத்தரவிட்டார்.

60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய 49 கிராம அலுவலர் பிரிவுகள் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அடங்கியுள்ளது. (வ-9)

## நயினாதீவு...

யாழ்ப்பாணம் வருகை தந்த 300 பிக்குகள் நேற்று முன்தினம் மாலையில் நயினாதீவு சென்று அங்குள்ள விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறு வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் வழிபாடு முடிவடைந்து நேற்றைய தினம் அதிகாலை 1 மணியளவில் கடற்படையினரின் உதவியுடனேயே வெளியேறினர்.

பிக்குகளின் பயணத்துக்காக ஓர் கடற்படை படகும் மதகுருவின் படகு என்பவற்றோடு உள்ளூர்ப் படகுகளும் பாதுகாப்புத் தரப்பினரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அனைவரும் குறிகட்டுவான் அழைத்துவரப்பட்டனர். இவ்வாறு குறிகாட்டுவானை அடைந்த பிக்குகள் அனைவரும் அதிகாலை 1.30 மணியளவில் மீண்டும் காங்கேசன்துறை துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5,101)

## நிறைவேற்று...

சிறிசேனவைச் சந்தித்துப் பேசிய பின்னரே, அடுத்த வழிநடத்தல் கூட்டம் இடம்பெறும் என்று நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

வழிநடத்தல் குழுவின் மரதன் அமர்வின் இறுதி நாள், நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் நடைபெறவில்லை. எப்போது மீண்டும் கூடுவது என்பது தொடர்பிலும் திகதி தீர்மானிக்கப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே, அரச தலைவரைச் சந்தித்துப் பேசிய பின்னர் வழிநடத்தல் குழுவின் கூட்டம் கூட்டப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

நிறைவேற்று அரச தலைவர் அதிகார முறைமையை ஒழிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்காது என்று, வழிநடத்தல் குழுவின் 23ஆம் திகதி கூட்டத்தில் அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா தெரிவித்திருந்தார். ஏனைய கட்சிகள் இந்த முடிவுடன் ஒத்துப் போகவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்த விவகாரம் தொடர்பில் அரச தலைவருடன் பேசிய பின்னர் முடிவெடுக்கலாம் என்று குறிப்பிட்டார்.

இதற்கு அமைவாக அரச தலைவருடன், நிறைவேற்று அரச தலைவர் அதிகார முறைமையை ஒழிப்பது தொடர்பில் பேச்சு நடத்தப்படும். அதன் பின்னரே வழிநடத்தல் குழுவின் கூட்டம் கூட்டப்படும் என்று அறிய முடிகின்றது. (வ-5)

## கூட்டமைப்பு...

தெரிவித்துக் கொள்வதாக, அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்றுக் காலமானார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

நீண்ட காலமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கைதிகளின் விடுதலைக்காக மிகச் சிறப்பாகச் செயற்பட்டவர். தனது உடல் நிலையையும் கருத்திற் கொள்ளாது, இதற்காக அவர் பாடுபட்டிருந்தார். அவரது இழப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது. மக்கள் அவரது இல்லத்தில் நாளை அஞ்சலி செலுத்துமாறும், கேட்டுக் கொள்ளப்படுவதாக, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## ஆணைக்குழுவுக்கு...

கத்தர்களை நியமிக்க வேண்டும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் இவ்வாறான உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டியது அவசியம்.

மூன்று மாத காலப் பகுதியில் பெருமளவு பொதுமக்களும் பொது அதிகார சபைகளும் தகவல் உரிமை ஆணைக்குழுவை நாடியுள்ளனர். [illegible]ாதுமக்கள் மத்தியில் காணப்படும் ஆதரவு மற்றும் ஆர்வத்தை இது வெளிப்படுத்தி நிற்கின்றது. மக்கள் பெருமளவுக்கு தகவல் உரிமையை பயன்படுத்த முனைந்துள்ளனர்.

2 மேன்முறையீடுகளை அண்மையில் விசாரணை செய்துள்ளோம். இதன்போது பொது அதிகார சபைகளிடமிருந்து தகவல் உரிமை சட்டத்தில் தங்களுக்கு அவசியமான தகவல்கள் கிடைக்கவில்லை என்று அவர்கள் இருவரும் குறிப்பிட்டனர். அவர்களை ஆணைக்குழு முன்னிலையில் அழைத்து மேலதிக விசாரணைகளைத் தொடரவுள்ளோம்" என்று தகவலுக்கான உரிமை ஆணைக்குழு தெரிவித்தது. (வ-5)

## இந்திய...

ஜஎன்எஸ் சர்துல் என்ற இந்தக் கப்பலில் மருந்துகள், குடிதண்ணீர், உலர் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அவசர உதவிப் பொருள்கள் ஏற்றிவரப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தப் பொருள்களை இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, நிதியமைச்சரிடம் கையளித்தார். இந்தியக் கடற்படைக் கப்பலில் இருந்து உதவிப் பொருள்கள் துரிதமாக இறக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5

## மணல்...

லுக்கான தீர்வையை ஆலோசிக்குமாறு திறைசேரிக்கு இந்தக் குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

'கடந்த வாரம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் உள்நாட்டு மணல் தட்டுப்பாட்டால் இலங்கையின் கட்டட நிர்மாணத்துறை பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே மணலை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கையில் மணல் அகழ்வுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதனால் பெரிய கட்டட நிர்மாணங்களுக்கு மணல் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

கட்டணம் மிகவும் அதிகமாக இருப்பதால் மணலை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டது' என்று அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

## பன்னாட்டு...

தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உள்ள விசாரணைப் பொறிமுறைமை உருவாக்கப்படுவதற்கு ஆலோசனை வழங்குவதே ஜப்பானியரான கூச்சின் இலங்கைப் பயணத்துக்கான முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூச், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திய பரணகம ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவிலும் அங்கம் வகித்திருந்தார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைவர்களையும் கூச் சந்திக்கவுள்ளார். இவர், இதற்கு முன்னரும் இலங்கைக்கு பயணம் செய்துள்ளார். (வ-5)

## டெங்கு...

ஆகிய 12 மாவட்டங்களிலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

"நாடு முழுவதிலும் 50 ஆயிரம் பேர் டெங்கு நோய்த் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் மாத்திரம் 130 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர்.

டெங்கு பரவும் இடங்களைச் சுத்திகரிப்பதற்காக சுகாதார அமைச்சு எதிர்வரும் வியாழக்கிழமை முதல் நாடுமுழுவதும் இருநாள் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

இவ்வாறான பல சுத்திகரிப்புப் பணிகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இம்முறை சுத்திகரிப்புப் பணிகளின் முறை வித்தியாசமாக இருக்கும். இந்த இருநாள் பணி தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடைபெறும்" என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் ஆலோசகரான சிறப்பு மருத்துவ நிபுணர் திருமதி பிரெச்சிலா சமரவீர தெரிவித்தார். (வ-5)

## பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாண மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் எதிர்வரும் 3ஆம், 4ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த இளநிலைப் பிரிவினருக்கான தடகளத் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் இந்தத் தொடர் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம-422)

## அஞ்சலோட்டப் போட்டியில் மன்னாருக்குத் தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அணி தங்கப்பதக்கம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. மன்னார் மாவட்டம் 54.30 செக்கன்களில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டம் வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டம் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-422-23)





# கோலூன்றிப் பாய்தலில் ஜொய்சன் புதிய சாதனை

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாண மாவட்ட வீரர்கள் மூன்று பதக்கங்களையும் கைப்பற்றினர். நெப்தலி ஜொய்சன் புதிய சாதனையையும் நிலைநாட்டினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட வீரர் கே.நெப்தலி ஜொய்சன் 4.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தை வென்றார். கடந்த வருடம் 4.36 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து படைத்திருந்த தனது சாதனையை தானே முறியடித்தார். எஸ்.டிலக்சன் 4.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஏ.புவிதரன் 4.30 மீற்றர் உயரத்துக்கப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23422)

## 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் பதக்கவேட்டை

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்கு அத்தனை பதக்கங்களும் கிடைத்தன. புதிய சாதனைகளும் படைக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த எம்.பிறேமதாஸ் 22.2 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப்பதக்கம் வென்றார். 2010 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரூபசிங்க 22.5 செக்கன்களில் ஓடிமுடித்த சாதனையையே பிறேமதாஸ் முறியடித்தார். ஆர்.ரினோசன் லம்பேட் வெள்ளிப் பதக்கத்தையும் எஸ்.சிறிமுகுந்தன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-23)



## கிளிநொச்சி மாவட்டத்துக்கு சாதனையுடன் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாணத் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.கிறிஸ்ரினா புதிய சாதனையைப் பதிவுசெய்ததுடன் தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று, நேற்றுமுன்தினம் என இரண்டு தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.கிறிஸ்ரினா 36.31 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். கடந்த 2014ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ரஞ்சிதா 36.20 மீற்றர் எறிந்த தூரத்தையே இவர் முறியடித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி 36.25 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சாமந்தி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23-422)

## அனித்தா சாதனைப் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாணத் தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை அனித்தா புதிய சாதனை படைத்தார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. கடந்த வருடம் தன்னால் படைக்கப்பட்ட 3.30 மீற்றர் என்ற அடைவை நடப்பு வருடத்தில் 3.31 மீற்றராக உயர்த்திப் புதிய சாதனையைப் படைத்தார் அனித்தா. ஹெரினா 3 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், சாத்வீகா 2.85 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-23)





## குண்டெறிதலில் மன்னார் தங்கம்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாணத் தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு குண்டெறிதலில் மன்னார் மாவட்ட வீராங்கனை எம்.மனுஜா தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று, நேற்றுமுன்தினம் என்று இரு தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. மன்னார் மாவட்ட வீராங்கனை மனுஜா 8.51 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுகிர்தா 8.13 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சாமந்தி 8.12 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-23)



# வடமாகாணத் தடகளம் யாழ்ப்பாணம் சம்பியன்




யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரில் யாழ்ப்பாணம் மாவட்டம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமாகாண தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று, நேற்றுமுன்தினம் என்று இரண்டு தினங்கள் நடைபெற்றது.
இருபால் பிரிவிலும் ஒட்டு மொத்தமாக 150 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டம் கிண்ணம் வென்றது. மன்னார் மாவட்டம் 114 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது. கிளிநொச்சி மாவட்டம் 64 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், வவுனியா மாவட்டம் 54 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் 29 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும் தமதாக்கின.
(ம-422)




## சிறந்த தடகள வீரராக மன்னாரின் பிறேமதாஸ்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரின் அடிப்படையில் சிறந்த தடகள வீரராக மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.பிறேமதாஸ் தெரிவானார்.
வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்றது.
இதில் சிறந்த தடகள வீரராக மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.பிறேமதாஸ் தெரிவு செய்யப்பட்டார்.
சிறந்த தட வீரராகவும் பிறேமதாஸ் தெரிவானார். சிறந்த தட வீராங்கனையாக மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த சௌமியா தெரிவானார்.
சிறந்த கள வீரராக யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என்.நிந்துஜன், சிறந்த கள வீராங்கனையாக யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஆரணி ஆகியோர் தெரிவாகினர். (ம-422)

## சாதனையுடன் தங்கம் வென்றார் பிறேமதாஸ்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்ட வீரர் பிறேமதாஸ் சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்தப் போட்டியில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநித்துவம் செய்த எம்.பிறேமதாஸ் 11 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கம் வென்றார். 2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எடிசன் படைத்திருந்த சாதனையை பிறேமதாஸ் சமப்படுத்தியிருந்தார்.
எஸ்.சிறிமுகுந்தன் 11.01 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் ஆர்.எஸ்.றினோசன் லம்பேட் 11.01 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## பூப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி, அரையிறுதிகள்

கரணவாய், மே 29
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் மன்னார் பொதுவிளையாட்டரங்கில் இன்று இடம்பெறவுள்ளன.
17 வயது ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் மன்னார் பற்றிமா வித்தியால யத்தை எதிர்த்து கிளிநொச்சி மத்திய கல்லூரியும், மன்னார் சென். சேவியர் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் கொக்குவில் ஞானபண்டிதாவை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியை எதிர்த்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியா லயமும் மோதவுள்ளன.
17 வயது பெண்கள் பிரிவு காலிறுதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும், வவுனியா ரம்பைக்குளம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து மயிலணி மகா வித்தியாலயமும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையை எதிர்த்து மன்னார் பற்றிமா வித்தியாலயமும், மன்னார் சென். சேவியர் கல்லூரியை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும் மோதவுள்ளன.
20 வயது ஆண்கள் பிரிவு காலிறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலயமும், மன்னார் சென் பற்றிமா மகா வித்தியாலயத்தை எதிர்த்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.
20 வயது பெண்கள் பிரிவு ஆட்டங்களில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து வல்வை மகளிர் கல்லூரி மோதவுள்ளது.
மற்றொரு அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மோதவுள்ளது. (ம-108)

## தட்டெறிதலில் தங்கம் வென்றது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், மே 29
வடமாகாண தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த சி.பிரகாஸ்ராஜ் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த வீரர்களான சி.பிரகாஸ்ராஜ் 34.71 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், வி.ஜனார்த்தனன் 33.67 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், எஸ்.தேவகுமாரன் 29.41 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)






### இங்கிலாந்துக்கு சொந்தமண் பலம்

மினி உலகக்கிண்ணத்தை இங்கிலாந்தே கைப்பற்றும் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவானான லாரா.
லாரா மட்டுமல்ல இந்திய அணித்தலைவர் கோக்லி, ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித், தென்னாபிரிக்க அணித்தலைவர் வில்லியர்ஸ் ஆகியோரும் இங்கிலாந்தைப் பற்றிப் புகழ்ந்து தள்ளியுள்ளனர். அந்த அணி குறைவற்ற அணி என்று கோடிட்டுக் காட்டியுள்ளார் கோக்லி. கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து மினி உலகக்கிண்ணத் தொடரை தனது தாயகத்தில் எதிர்கொள்கிறது என்பதே இதற்கெல்லாம் காரணம்.
ஆகச் சிறந்த திறனில் உள்ளார் சகலதுறை வீரர் ஸ்ரோக். பில்லிங்ஸ், வோக்ஸ், மொயின் அலி ஆகிய சகலதுறை வீரர்களும் இங்கிலாந்தின் பெரும் பலம். அனைத்தும் கச்சிதமாக அமைந்தால் இங்கிலாந்து கிண்ணம் வெல்வதென்பது சாத்தியமே. இங்கிலாந்து அணி - மோர்கன் (தலைவர்), பரிஸ்ரௌவ், பில்லிங்ஸ், கேல்ஸ், ரசிட், றோய், வில்லி, வூட், மொயின் அலி, ஜேக் போல், பட்லர், பிளங்கட், ரூட், ஸ்ரோக்ஸ், வோக்ஸ்.



## சங்கக்கார இரட்டைச் சதம்

இங்கிலாந்து கழகமான சர்ரேக்காக இரட்டைச் சதம் விளாசியுள்ளார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்கார.
நான்கு நாள்கள் கொண்ட டெஸ்ட் ஆட்டத்தில் எசெக்ஸை எதிர்த்து சர்ரே விளையாடி வருகிறது. இந்த ஆட்டம் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய சர்ரே அணி 31 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தவித்தது. ஓர் முனையில் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடிய சங்கக்கார படிப்படியாக அணியை மீட்டெடுக்க ஆரம்பித்தார். கரன், மேக்கர் இணைப்பாட்டங்களை வழங்க இரட்டைச் சதம் கடந்தார் சங்கக்கார. சங்காவின் சிறந்த ஆட்டத்தால் சர்ரே அணி 369 ஓட்டங்களைக் குவித்தது. சங்கா 200 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சர்ரேயின் இன்னிங்ஸும் முடிவு கண்டது. இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைய அதிகவாய்ப்புள்ளது. (ம)



# மன்னாரை தோற்கடித்து யாழ்ப்பாணம் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 29

வடமாகாண ரீதியிலான கால்பந்தாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி யாழ்ப்பாண மாவட்ட அணி நடப்பு வருடச் சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு மின்னொளியில் இந்த ஆட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்கள் வரை கோலெதுவும் பதிவாகவில்லை. 44 ஆவது நிமிடத்தில் ரஞ்சன் தட்டிக்கொடுத்த பந்தை தாசன் தலையால் இடித்து முதல் கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 1:0 என்று முன்னிலை பெற்றது மன்னார்.

மன்னாரின் ஆதிக்கத்துடன் இரண்டாம் பாதி நகர்ந்துகொண்டிருந்தது. ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் மன்னார் வீரரொருவர் விதிமுறைகளுக்கு முரணான ஆட்டத்தை வெளிப்படுத்த யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வாய்ப்புத் தேடிவந்தது. கச்சிதமாகக் கோலாக்கினார் கலிஸ்ரன். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்திருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம்.

2010ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டுவரை மன்னார் மாவட்ட அணி யாழ்ப்பாண மாவட்ட அணியை வீழ்த்தி தொடர்ந்து நான்கு வருடங்கள் மகுடம் சூடியது.

2014ஆம் ஆண்டு மன்னாரை வீழ்த்தி கிண்ணம் வென்றது. யாழ்ப்பாண மாவட்ட அணி. 2015ஆம் ஆண்டு இரு அணிகளும் இணைச் சம்பியனாகத் தெரிவாகின. கடந்த வருடம் மீண்டும் வெற்றிபெற்றது மன்னார் மாவட்ட அணி. அந்த அணியின் வெற்றிநடைக்கு நடப்பு வருடத்தில் முட்டுக்கட்டை போட்டது யாழ்ப்பாணம்.

(ம-422)


திரு.ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர் யுவதிகள்
கற்றுப்பயன்பெற்ற ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சிமூலமான 3 மாத ஆங்கிலக்கற்கைநெறி.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 03.06.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
இவையாவும் திரு.ஷாம்சன் ஆசிரியரின் நேரடிவகுப்புகள்
பயிற்சிநெறி முடிவில் டிப்ளோமா சான்றிதழ்
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# பார்சிலோனா சம்பியன்

ஸ்பானியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான கோபா டெல் ரெய் தொடரில் பார்சிலோனா அணி கிண்ணம் வென்றது.

பார்சிலோனாவை எதிர்த்து டிப்போர்டிவோ அல்ப்ஸ் அணி மோதியது. முதல் பாதியின் 30 நிமிடங்கள் வரை கோலெதுவும் பதிவாகவில்லை. 30ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த மூன்றாவது நிமிடத்தில் டிப்பொர்டிவோ அணி பதிலடி கொடுத்தது. 43 ஆவது நிமிடத்தில் நெய்மர் பார்சிலோனாவின் இரண்டாவது கோலையும், 45ஆவது நிமிடத்தில் அல்காசெர் பார்சிலோனாவின் மூன்றாவது கோலையும் பதிவு செய்தனர். முதல் பாதியின் முடிவில் 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பார்சிலோனா. பார்சிலோனா அணி ஒட்டுமொத்தமாக 29 ஆவது தடவையாகவும், தொடர்ச்சியாக 3ஆவது தடவையாகவும் கோப்பா டெல் ரெயைக் கைப்பற்றியது. கடந்த 64 வருடங்களில் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் இந்தக் கிண்ணத்தை கைப்பற்றிய ஒரே அணியும் பார்சிலோனாவே.

(ம)



IIS இன் 22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்
MBA
Master of Business Administration
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கற்கைநெறி
Specialization
- General
- Finance
- Information Technology
- Marketing
- Human Resource Management



விரிவுரை நேரங்கள்:
வார நாட்கள்
– மாலைநேர வகுப்புக்கள் (6.30–9.30)
வார இறுதிநாட்கள்
– ஞாயிறு (பகல் 10.00–4.00)
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 10.06.2017
கற்கைநெறியின் தனித்துவம் ......
- 1 வருடகால கற்கைநெறி
- அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- நெகிழ்வுத்தன்மையுடன் கூடிய விரிவுரை நேரங்கள்
- இலகு தவணைமுறைக்கட்டணம்
- ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த செலவு
- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்
021 222 8060 , 021 4900 900
iis@iis.edu.lk , info@iis.edu.lk
Hotline: 071 777 5666
info@iis.edu.lk

நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்
www.cse.lk
CSE
COLOMBO STOCK EXCHANGE
பங்குச்சந்தை உத்திகள்
பயிற்சிப்பட்டறை
எதிர்வரும் 10, 17, 18 மற்றும் 24 ஆம் திகதிகளில்
யூன் மாதத்தின் வார இறுதிநாள்களில் காலை 9.30 தொடக்கம் மதியம் 12.30
வரை யாழ். பங்கு பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
( சத்திரச்சந்திக்கு அருகில்) பதிவுக்கட்டணம் ரூபா 1 000/=
வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்.
அழையுங்கள்:
021 222 1455, 077 782 2014
& Type Stock & Send SMS

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.